நாவாந்துறைப் படிப்பகம்
யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00
ஏப். 02 - 08, 2009

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 808



## சர்வதேச அழுத்தமும் வன்னி மக்களின் அவலத்தைத் தீர்க்காது



## திருமலை பேக்கரி உணவுகள் விஷமானது எப்படி?

## அப்பாவி சிங்கள விவசாயிகளின் படுகொலைகளால் கிழக்கில் பதற்றம்

## அரசியல் பழிவாங்கலில் ஆசிரியர் நியமனங்கள்

சூடு சுவை சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## உபாகமங்களும் உபவேதங்களும்

**வேதத்தின்** உபாகமங்கள் நான்குண்டு. அவையாவன: புராணம், நியாயம், மீமாஞ்சை: மிருதி இவற்றுள் புராணம், சிவபெருமான் உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் முதலியவற்றை விரித்துக் கூறுவது. நியாயம்: வேதப் பொருளை நிட்சியத்தற்கு உதவியாயுள்ள பிரமாணங்கள் ஆகும்.மீமாஞ்சை: வேதப் பொருள்களின் தாற்பரியத்தை அறிதற்கு உபகாரமாகிய நியாயங்களை ஆராய்ச்சி செய்து அறிவிப்பது.

மிருதி,வருணம், ஆச்சிரமங்களுக்குரிய தர்மங்களைக் கூறுவது. அது மனுஸ்மிருதி முதலாகப் பதினெட்டு என்பர் இப்படியே, உபவேதங்கள் நான்குண்டு. அவையாவன: ஆயுள்வேதம்; இது சரீரம் நோயின்றி இருப்பதற்காக மருந்துகளைப் பற்றிக் கூறுயுள்ளது. தனுர் வேதம்: இது பகைவர்கள் நலியும் பொருட்டும் உலகைக் காக்கும் பொருட்டும் வேண்டப்படும் படைக்கலப் பயிற்சியை அறிவிப்பது. காந்தருவ வேதம்: கடவுளுக்கும், மக்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் இசையை அறிவிப்பது. அருத்த வேதம்: இது இம்மைக்கும், மறுமைக்கும் தேவையாயுள்ள பொருள்கள் சம்பாதிக்கும் உபாயத்தைப் போதிப்பது.

**-அ. அரசரெத்தினம், சேனையூர்.**



## விசுவாசத்தோடு இறைவனை வேண்டுவோம்

**பன்னிரு** வருடங்களாக இரத்தப் போக்கினால் வருந்திக் கொண்டிருந்த ஒரு பெண்ணை வைத்தியர்களால் குணமாக்க முடியவில்லை. இயேசு அங்கு வருவதைக் கேள்விப்பட்டு அவளும் இயேசுவைப் பின் தொடர்ந்தாள். அவருடைய ஆடையைத் தொட்டாலே போதும் நான் குணமடைவேன் என்ற நம்பிக்கையுடன் சென்றாள்.

(லூக்கா 8-43-44)

ஜனக்கூட்டம் யேசுவிடம் நெருக்கம் நிறைந்து காணப்பட்டது. ஆனாலும் இப்பெண் கூட்டத்துள் நுழைந்து போய் இயேசுவின் ஆடையைத் தொட்டாள். மறுகணமே அவளது இரத்தப் போக்கு நின்று போய்விட்டது. இயேசு என்னைத் தொட்டது யாரென்றும் என்னிடமிருந்து வல்லமை வெளியேறியதையும், கேட்க அப்பெண் இயேசுவின் முன்பாக விழுந்து நடந்ததைக் கூறினாள். இயேசு, மகளே உன் நம்பிக்கை உன்னை நலமாக்கியது அமைதியுடன் போ என்றார். ஆனால் இன்றைய உலகில் கிறிஸ்தவர்களிடம் மட்டுமல்ல, குருக்கள், கன்னியர்களிடமும் உண்மையான விசுவாசத்தைக் காண்பதற்கில்லை. மத நம்பிக்கையும் வியாபாரத்தைப் போலாகிவிட்டது. அதனால்தான் எம் நாட்டில் கூட இப்படியான சீரழிவு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கண்ணீரோடு நாம் இறைவனை நாடுவோமானால் இதற்கொரு, முடிவைத் தருவார் எம் பரமதந்தை இயேசு பிரான்.

**ஜோசப் அருள்சாமி, இராஜவெல்ல.**

## இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டம்

**மனிதன்** எதிர்கால நிகழ்வுகளைப் பற்றி தெளிவான அறிவைப் பெற்றுக்கொள்ள என்றும் வழிகாட்டும் தகுதியுடையது இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டம். இது மனிதனால் வகுக்கப்பட்டதல்ல. மாறாக மனிதனையும், மனிதனுக்காக மற்றெல்லாப் படைப்புக்களையும் தோற்றுவித்த அல்லாஹ் வகுத்த திட்டம்.

இத்திட்டத்தை அல்லாஹ் மனித குலத்திற்கு எப்படி அறிவித்தான் என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா?

ஆம் அல்லாஹ் அண்ணல் நபி அவர்களுக்கு வஹி மூலம் அவனது அல்குர்ஆனை இறக்கி அந்த வேத வெளிப்பாட்டை மனித குலத்துக்குப் போதிக்க இறை தூதரை ஏவினான்.

மனித வாழ்வு சீரடையும் வரை வஹியெனும் வேத வெளிப்பாடு வந்து கொண்டே இருந்தது. எது சரியானது? எது பிழையானது? என்பதை அல்லாஹ் அவனது வஹி மூலம் அண்ணல் நபிக்கு அறிவித்தான். இதனை ஏற்ற இறை தூதர் அவர்கள் இதன்படி வாழ்ந்து மக்களுக்குக் காட்டினார்கள். இதுவே இன்றைய இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டம்.

**-எம். சீ. கலீல், கல்முனை-05.**

## கவிதைப் போட்டி இல.805



பாராட்டுக்குரியது

### அழிவின் துளி!

பஞ்சணையில் படுத்துறங்கி,
பள்ளிக்கூடம்
செல்லும் வயதில், இந்தப்
பாலகனை
பசி, பட்டினியால்
பதைக்க வைத்து,
படிக்கட்டில்
படுத்துறங்கச் செய்ததும்
இந்தப் பாழாய்ப்போன
யுத்தம் தானே!

-காத்தநகர் 'சிட்டு'




## கவிதைப் போட்டி இல.808



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி. 07.04.2009

கவிதைப் போட்டி இல. 808
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 1772, கொழும்பு.

### உசுப்பாதீர்கள்...!

உறங்கட்டும்
துப்பாக்கி
வெடியொலியும்
து(ஷ்)ட்டர்களின்
கெடுபிடியும்
ஓய்ந்து விட்டால்
பையன்
பயந்தெளிந்து
படிக்கட்டிலும்
கண்ணயர்ந்து
தூங்கலாம்...
சுதந்திரக் காற்றில்
சுதந்திரப் படியில்
சுதந்திரமாகத்
தூங்குமவனை
உசுப்பாதீர்கள் - அவன்
உறங்கட்டும்.

-பாண்டியூர்-ஏ.பி.என்.
நவநீதன்.

### படிக்கட்டில் பள்ளி!

போராட்ட வீரர்களால்
பிடித்துச் செல்லப்பட்ட
பள்ளிச் சிறுவன்
நிலவறையில்
அமைக்கப்பட்ட
பயிற்சிப் பாசறையில்
அல்லும் பகலும்
அயராது உழைத்ததால்
அசதி மேலீட்டால்
படிக்கட்டில்
பள்ளி கொள்கிறானோ?

-கேக்கே. டீன்,
ஏறாவூர்-03.

### எதுதேவை..?

சயனிக்கப்
பஞ்சு மெத்தை
தேவையில்லை!
பஞ்சம் நிலவும்
பூமியிலே..
அஞ்சி வாழும்
நிலை நீங்கின்
தரைப்படிகளும்
தலையணைகள்தான்!

-பலஹத்துறையூர்,
இப்னு தாஹிர்.

### எவரிட்ட சாபம்!

தூளியிலே துயில்
கொண்டெழுந்தோம் - மழைத்
தூறலிலே குடை பிடித்து நடந்தோம்!
அன்னையிடம் அறுசுவை உண்டோம்
- நல் ஆசானிடம் அரிச்சுவடி
கற்றோம்!
நாளைய தூண்கள் என எம்மை
நானிலமும் போற்ற
நீல மேகத்தைத் தொட்டு வெள்ளை
அடித்தோம்!
எவரிட்ட சாபமோ எல்லோரும்
எம்மை
படிக்கல் ஆக்கிவிட்டார்களே!

-சீனிராசா எடிசன்,
கொழும்பு-13.

### கடத்தல் கடிதம்!

"உடன் வேண்டும்
ஒரு கோடி...
மறந்தாயாகில் - நாளை
உன் வீட்டுப் படியில்
கிடப்பான் உன் பையன்
உயிரற்ற பிணமாய்..."
இப்படிக்குக்
கடத்தியோர்.

-அ.சந்தியாகோ,
கண்டி.

### வேதனை!

அன்பு காட்டத் தாயுமில்லை!
பரிவு காட்டத் தந்தையுமில்லை!
பயங்கரவாதத்திற்கு
சுற்றும் சூழலை
இழந்து! பாசத்தின்...
பிடியில் உறங்க வேண்டிய
ஆத்மா ஒன்று
வீதியோரம்...
உறங்குகின்றது!!

-மீராமுகைதீன் - ஹாலித் ,
ஏறாவூர்-03ஏ.

### அநாதை

அரவணைக்க அன்னையின்றி
அறிவுரை சொல்லத் தந்தையின்றி
ஆடி ஓடி விளையாட உடன்
பிறப்பின்றி
அநாதையான சிறுவனா நீ?

-ச.சசீகரன்,
வெள்ளவத்தை.

# உங்கள் பக்கம்

## "தலைநகரில் வெளிச்சத்திற்கு வராத வெளிச்சமின்மை?"

**கொழும்பு–8,** கொட்டா ரோட், பொரளை ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கு அருகில் இருபது அடி அகலமான, வடிகான் ஒன்று செல்கிறது. இப்பாதை தெமட்டகொட, கொலன்னாவ போன்ற பல இடங்களுக்கூடாக பலமைல் தூரம் நீண்டு காணப்படுகிறது. அடை மழை பெய்யும் காலங்களின்போது, இது நிரம்பி வழிவதுமுண்டு. இதற்கு அருகில் ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் பத்தடி அகலத்தில் ஒரு ஒற்றையடிப் பாதை கோதமி புர, ஒபயசேகபுர, கோதமி ரோட் போன்ற இடங்களைச் சந்தித்த வண்ணம் செல்கிறது. இப்பாதையைத் தினசரி ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இருநூறுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் இப்பாதையினூடாகச் சென்றுவருகிறார்கள். இப்பாதை மேற்குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்லும் குறுக்குப்பாதை. இதைத் தவிர்த்து வேறு பாதையூடாகச் செல்வதானால் தூரம் அதிகம். ஆனால் இரவு 7மணிக்குப் பிறகு இப்பாதையால் செல்ல எவரும் அஞ்சுகிறார்கள். காரணம், எந்தவித ஒளிக் கம்பமோ, ஒளிவிளக்கோ, வெளிச்சமோ இப்பாதையின் ஓரங்களில் கிடையாது. இந்த இருண்ட சூழலைப் பயன்படுத்தி விபசாரம், வழிப்பறி போன்ற சமூக விரோத நடவடிக்கைகள் நடைபெறுகிறது. தப்பித்தவறி இப்பாதையால் வந்தவர்கள் உடைமைகளைப் பறிகொடுத்தும், கானில் விழுந்து மரணித்ததுமுண்டு. எனவே தயவு செய்து மின்சார சபையும், மாநகர சபையும் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி, மேற்படி பகுதிக்கு குறைந்தது ஐந்து லைட் கம்பமாவது நட்டுத்தந்து பொதுமக்களின் நலனில் அக்கறை செலுத்துமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

ஆர். பிரசன்னா,
24/228,கோதமி ரோட்,
பொரளை-கொழும்பு-08.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772,கொழும்பு.
தொலைபேசி: -011 -2360903
தொலை நகல் (Fax):-011 - 2360920
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk
murasu@live.com


# வாசகர் சாலை

## என் அன்பிற்கினிய முரசே...!

**உன்** உள்ளே அடங்கும் அத்தனை அம்சங்களும் என் மனதை வருடிச் செல்கிறது. வாரத்தில் ஒரு தடவை எம் கைகளில் தவழ்ந்து விளையாடி உன் சிறப்பை மென்மேலும் மெருகூட்டுகின்றாய். உன் சேவை ஆலமரத்தைப் போல் பரந்து விரிந்து செல்ல இந்தத் தோழியின் வாழ்த்துக்கள்.

ம.நிரோஷனா,
கோப்பாய்.

## பிரமாதம்!

**வாரம்** ஒருமுறை எம்மை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆட வைக்கும் தினமுரசு வாரமலரில் இடம்பெறும் ஒவ்வொரு அம்சங்களும் எம் சிந்தனையைத் தொடுகின்றது. அரசியல், சிறுகதை, கவிதை, தொடர் கட்டுரைகள், பாப்பா முரசு, சினிமா, லேடீஸ் ஸ்பெஷல், தேன் கிண்ணம், விளையாட்டு இது போன்ற இன்னோரன்ன அம்சங்களும் பிரமாதம். உன் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

-ஏ.சீ.எம்.முஸம்மில், குளியாப்பிட்டிய.

## அமுதமும் நஞ்சு...

"இளசுகளைச் சீரழிக்கும் இணையத்தளங்கள்" என்ற தலைப்பில் இரு வாரங்களாக முரசு 803, 804 ஆவது இதழ் தந்த விடயங்களைப் படித்தேன்.

இதில் இணையத்தளங்களின் பயன்களும், பாதிப்புக்களும் உணர்த்தப்பட்டதோடு, எல்லா வினைக்கும் அதற்குச் சமமான எதிர்வினை இருக்கிறது எனும் நியூட்டனின் விதியும் இங்கு ஞாபகமூட்டப்பட்டது சரியே. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

-எம்.சீ.கலீல், கல்முனை-05.

## அறிவான, அன்பான முரசே!

**உன்னைக் காண** ஒரு வாரத்தைக் கழிப்பது ஒரு யுகத்தைக் கழிப்பது போலிருக்கிறது. காரணம், உன் வியக்கத்தக்க செய்திகளும், விநோதமான பகுதிகளும் விவேகமுள்ள குறுக்கெழுத்துப் போட்டியும் என்னை மனப்பூர்வமாகக் கவர்ந்துவிட்டது. முரசு எங்களைக் காணத் தினமும் வர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

R.சுதர்சன்,
கொழும்பு-14.

# கொழும்புக்கு வருகை தந்து சமாதானத் தீர்வை வலியுறுத்திய

# புலம் பெயர் வாழ் தமிழ்க்குழு உறுப்பினர்களுக்கு மிரட்டல்!

## லண்டனிலும் பிராங்போர்ட்டிலும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டதாகத் தகவல்

இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நீதியான, கௌரவமான, நீடித்த தீர்வொன்றினைத் தேடுவதற்கான முன்முயற்சிகளுக்கு உதவும் நோக்கோடு கொழும்புக்கு விஜயம் செய்த புலம்பெயர் வாழ் தமிழர்களின் குழுவில் அங்கம் வகித்த சிலருக்கு பிராங்போர்ட்டிலும் லண்டனிலும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுமுள்ளன. யுத்தச் சூழலால் பாதிக்கப்படும் மக்களின் நலனிலும் அக்கறை கொண்ட இந்தக் குழுவில் மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த சுமார் 25 பேர் அங்கம் வகித்தனர். பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, நோர்வே, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நிரந்தரக் குடியுரிமை பெற்ற இலங்கைத் தமிழர்களே இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

புலிகளால் தடை செய்யப்பட்ட தமிழ் இயக்கங்களின் முன்னாள் உறுப்பினர்களும், மிதவாதக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், இன்னும் பலரும் இக்குழுவில் வருகை தந்திருந்தனர். இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த இவர்கள் கடந்த 28 ஆம் திகதி அரசாங்க அமைச்சர்கள் குழுவொன்றுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். அமைச்சர்கள் ரோஹித போகொல்லாகம, டியூ.குணசேகரா, பேராசிரியர் திஸ்ஸவிதாரண, வெளிவிவகாரச் செயலாளர் கலாநிதி பாலித கொஹன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இப்பேச்சுவார்த்தையில் பங்குபற்றினர். ஜனாதிபதியின் விஷேட ஆலோசகர் பசில் ராஜபக்ஷவுடன் தனியான சந்திப்பொன்றினையும் மேற்கொண்டனர். வடக்குக் கிழக்கு மக்களின் நலன் சார்ந்த விடயங்கள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். அத்துடன் யுத்தம் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சமச்சீரற்ற அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் எடுத்துரைத்தனர். மேலும் பல அரசியல், அதிகார முக்கியஸ்தர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாக குழுவில் வருகை தந்திருந்த பேச்சாளர் ஒருவர் கூறினார்.

பதின்மூன்றாவது அரசியல் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு முழுமையான அதிகாரங்களைப் பகிர்வதில் இருக்கக்கூடிய சிக்கல்கள் பற்றியும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாக அப்பேச்சாளர் கூறினார். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் சர்வஜன வாக்கெடுப்பில் அங்கீகாரத்தையும் பெற்றே அரசியல் யாப்புச் சட்டத்தைத் திருத்த முடியுமென்பதால் மாகாண சபைகளுக்குப் படிப்படியாக அதிகாரங்களை அதிகரித்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று தாங்கள் வலியுறுத்தியதாகவும் சொன்னார். ஏ-9 பாதை திறப்பு, வட பகுதிக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம், இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் உட்படப் பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன என்றும் பேச்சாளர் சொன்னார்.

புலம்பெயர் நாடுகளில் புலிகளும் புலி முகவர்களும் மேற்கொள்ளும் பிரசாரங்கள், பேரணிகள் மற்றும் இத்தியாதி வெகுஜனப் போராட்டங்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கம் உண்டா என்று கேட்டபோது,

குறிப்பிட்ட எவரையும் குறிவைத்துச் செயற்படும் நோக்கம் எமக்குக் கிடையாது. புலம்பெயர் வாழ் மக்களுக்கும், அந்தந்த நாட்டவர்களுக்கும் உண்மை நிலைமைகளை எடுத்துச் சொல்லுவோம். அது தொடர்பான பணிகளை மேற்கொள்வோம். அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காண்பதற்கு அரசுக்கும் - புலிகளுக்கும் அழுத்தம் கொடுப்போம் என்றும் சொன்னார்.

## 500 ரூபா சம்பளக் கோரிக்கையை இழுத்தடிக்க முதலாளிமார் சம்மேளனம் முயற்சி

கடந்த மாதத்துடன் காலாவதியாகிப் போன கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை விரைவில் நடத்துமாறு தோட்டத் தொழிலாளர்களும் மலையகத் தொழிற்சங்கங்களும் கோரிக்கை விடுத்து வருகின்றன. இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கேற்ப தற்போது வழங்கப்படும் சம்பளம் போதாது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே அதிகரித்த சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்றும், அதற்கான பேச்சுவார்த்தை விரைவில் நடத்தப்பட வேண்டுமென்றும் முதலாளிமார் சம்மேளனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தற்போது அடிப்படைச் சம்பளமாக 200 ரூபாவும், தேயிலை விலைக்கேற்ப 20 ரூபாவும், வருகை தரும் நாளொன்றுக்கு எழுபது ரூபாவுமென நாளொன்றுக்கு 290 ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

அடிப்படைச் சம்பளமாக 500 ரூபா வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையே பரவலாக முன்வைக்கப்பட்டு வருகிறது. இச்சம்பளக் கோரிக்கையைத் தட்டிக் கழிப்பதற்காக கூட்டு ஒப்பந்தம் பற்றிய மீள் பேச்சுவார்த்தையை இழுத்தடிக்க முதலாளிமார் சம்மேளனம் முனையலாமெனவும் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன.

## சகிப்புத் தன்மைக்காகச் சர்வதேச விருது பெற்ற ஆனந்தசங்கரி "அடித்துப்,போடுவேன்" என்று

### வானொலி ஊடகவியலாளரை மிரட்டினார்



சகிப்புத் தன்மைக்காகச் சர்வதேச விருது பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி தமிழ் ஊடகவியலாளர் ஒருவரை அடித்துப் போடுவேனென்று மிரட்டினார். கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'தென்றல்' வானொலியில் இடம்பெற்ற 'ஏழாவது நாள்' அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியின்போது இச்சம்பவம் இடம்பெற்றது. ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9.15 மணிக்கு இந்த நேரடி நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுவது வழக்கம். ஆனந்தசங்கரியைப் பேட்டி கண்டவர் பிரபல ஊடகவியலாளர் ஏ.எம்.தாஜ்.

இன்று புலி எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்திருக்கும் நீங்கள் 2001 ஆம் ஆண்டு புலிகளுக்குச் சார்பாகப் பேசி வந்திருக்கிறீர்களே என்று ஊடகவியலாளர் தாஜ் கேள்வி எழுப்பியபோதே கோபமுற்ற சங்கரி, "அடிவாங்கப் போகிறாய்" என்று அப்பட்டமாக மிரட்டினார். இது வானொலியிலும், நேரடியாக ஒலிபரப்பப்பட்டது. நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பப்படுவதை உணர்ந்துகொண்ட ஆனந்தசங்கரி பின்னர் கோபம் தணிந்து சற்று நேரத்தின் பின்னர் சகஜ நிலைக்கு வந்துவிட்டார்.

"புலிகளுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்துவரும் மிதவாதத் தலைவர் நீங்கள். 2001 ஆம் ஆண்டு புலிகள் உங்களுக்கு ஆதரவளித்தனர். 2001ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற மாவீரர் தின

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## அவயவங்களை இழந்த ஆயிரம் தமிழர்கள் முல்லைத்தீவுக் கடற்கரையோரத்தில் தவிக்கின்றனராம்

### -ஒரு கண்ணை இழந்த பெண் பத்திரிகையாளரின் லண்டன் செய்தி இது

"ஆட்டிலறித் தாக்குதல்களால் காயமுற்ற தமிழர்கள் கடற்கரையில் சிக்கியுள்ளனர்"-லண்டனிலிருந்து வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான ஒரு செய்திக்கு இடப்பட்ட தலைப்பு இது. பிரிட்டனின் ரைம்ஸ் செய்திப் பத்திரிகை நிறுவனம் வெளியிடும் ஜனரஞ்சகமான பத்திரிகையே சண்டே ரைம்ஸ். இந்தச் செய்தியை எழுதியவர் மேரி கொலின் என்ற பிரபலமான பிரிட்டிஷ் பெண் பத்திரிகையாளர். அந்தச் செய்தி இப்படித்தான் ஆரம்பமாகிறது -



"இலங்கையின் வடகிழக்குப் பகுதியிலுள்ள கடற்கரையொன்றில் நேற்று மீட்கப்படுவதற்காகக் காத்திருந்த காயமுற்றுச் செத்துக்கொண்டிருப்பவர்களில், அவயவங்களை இழந்த ஆயிரக்கணக்கானவர்களும் உள்ளனரென்று உதவி வழங்கும் நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் செய்தி கடந்த 22 ஆம் திகதி பிரசுரமாகியிருந்தது. இலங்கையின் வடகிழக்குக் கடற்கரை என்பது முல்லைத்தீவுப் பகுதியைக் குறிக்கிறது. 22 ஆம் திகதியப் பத்திரிகையில் 'நேற்று' என்று குறிப்பிடப்பட்டதால் 21 ஆம் திகதி இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றிருக்க வேண்டும். காயமுற்றவர்களில் அவயவங்களை இழந்தவர்கள் மட்டும் ஓராயிரம் என்றால் காயமுற்றவர்களின் எண்ணிக்கை இன்னும் பல மடங்காக இருந்திருக்க வேண்டும். இந்தத் தகவலை உதவி வழங்கும் நிறுவனங்கள் கூறின என்றுதான் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த உதவி வழங்கும் நிறுவனமென்று பெயர் குறிப்பிடப்படவில்லை.

அவயவங்களை இழந்த நிலையில் ஆயிரம் பேர் கடற்கரையில் காத்துக் கிடக்கிறார்கள் என்றால், இதனைக் கணக்கிட்ட உதவி வழங்கும் நிறுவனம் எது? ஏன் அவர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்படவில்லை என்றெல்லாம் இயற்கையாகவே கேள்விகள் எழலாம். யார் இந்த மேரி கொலின்?

2001 ஆம் ஆண்டு இலங்கையில் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின்போது கண்ணொன்றினை இழந்தவர். இலங்கை அரசின் அனுமதி பெறாமல்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## இலங்கை பற்றிய பிரிட்டிஷ் பாராளுமன்ற விவாதத்தில் பெருமளவு உறுப்பினர்கள் பேசத் தயங்கியது ஏன்?

"பொதுநலவாய அமைப்பிலிருந்து இலங்கையை வெளியேற்றுவது குறித்துப் பேசுவது தமக்குச் சம்பந்தமில்லாத விடயம் என்று நினைக்கும் பெருந்தொகையான உறுப்பினர்கள் இச்சபையில் இருப்பது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். இவர்கள் இந்த விடயம் பற்றிப் பேசவே விரும்பவில்லை" என்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் உரையாற்றிய தொழிற்கட்சி உறுப்பினர் ஸியோபய்ன் மக்டொனா கூறினார். "இலங்கையும் பொதுநலவாயமும்" என்ற தலைப்பில் கடந்த 24 ஆம் திகதி வெஸ்ற் மினிஸ்ரர் பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது.

"இந்தச் சபையில் பேச விரும்பாதவர்கள் எல்லாம் புலிகளைப் பயங்கரவாதிகளென நினைக்கிறார்கள். எனவே இந்த விவாதத்தில் கலந்து கொள்ள அவர்கள் விரும்பவில்லை. புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பல்ல. இலங்கை அரசாங்கத்தின் பிரசாரம் இல்லையென்றால், புலிகள் அமைப்பின் மீது தடை விதிக்கப்பட்டிருக்க மாட்டாது" என்றும் கூறினார் மக்டொனா அம்மையார்.

இலங்கையைக் காமன்வெல்த் அமைப்பிலிருந்து வெளியேற்ற வேண்டுமென ஏற்கனவே வலியுறுத்திய ஜோஆன் ரியன் என்ற அம்மணி சபையில் பேசுகையில் கீழ்க்கண்டவாறு சொன்னார்.

"பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரௌன் இலங்கைக்கான விஷேட பிரதிநிதியொருவரை நியமித்திருந்தார். தம்மோடு கலந்தாலோசிக்காமல் அவர் நியமிக்கப்பட்டார் என்று கூறி இலங்கை அரசாங்கம் அந்த நியமனத்தை நிராகரித்தது தவறு. அமைச்சர்களை நியமிக்கும் போது நாம் யாரையும் கலந்தாலோசிக்க வேண்டிய தேவையில்லை. இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான செயற்பாடுகளைக் கைவிட வேண்டுமென்று இலங்கைக்கு நாம் கூறவேண்டும்" என்று குறிப்பிட்டார். இலங்கை அரசாங்கம் இனவொழிப்பு யுத்தத்தை நிறுத்திவிட்டுச் சமாதானத்துக்காகப் பாடுபட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

"இலங்கைப் பிரச்சினை பற்றி நன்கு தெரிந்த ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் போன்றவர்களின் கருத்துக்களையும் பிரிட்டிஷ் அரசாங்கம் கவனத்தில் கொண்டுள்ளது" என்று கூறினார் வெளிவிவகார மற்றும் பொதுநலவாயப் பிரதியமைச்சர் பில ரம்மெல். இலங்கை பற்றிய தீர்மானம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் முன்வைக்கப்படுமானால் அது தோற்கடிக்கப்படும். ஏனென்றால் பாதுகாப்புச் சபையின் ஏனைய அங்கத்தவர்களுக்கு இலங்கை பற்றிக் கூடுதலான விபரங்கள் தெரியும் என்றும் சொன்னார் பிரதியமைச்சர் ரம்மெல்.

## மட்டக்களப்பில் சின்னக் கடாபியை மூன்று தரப்புக்கள் தேடுகின்றன

மட்டக்களப்பு கரையாக்கன் தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 'சின்னக் கடாபி' என்ற முன்னாள் புலி இயக்க முக்கியஸ்தரை மூன்று தரப்புக்கள் தேடி வருகின்றன. புலிகள் இயக்கத்தை விட்டு விலகிய பின்னர் படுவான்கரையில் மறைந்து வாழ்ந்து வந்த இவர், அண்மையில் எழுவான்கரைக்குத் தப்பி வந்துள்ளாரென்று கூறப்படுகின்றது. மட்டக்களப்பில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவந்த வன்செயல்களுக்கு இவரது குழுவினரே காரணமென நம்பப்படுகிறது. இவரைப் புலி முகவர்களும், இராணுவத்தினரும் ஆயுதக் குழுவொன்றும் தேடிவருவதாகவும் கூறப்படுகின்றது.

## இறுதிவரை யுத்தம் தொடரும் ஜனாதிபதி சூளுரை

எந்தச் சூழ்நிலையிலும் புலிகளுடன் அரசாங்கம் யுத்த நிறுத்தமொன்றினைச் செய்துகொள்ள மாட்டாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். களுத்துறை மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அமைப்பாளர்களின் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு சொன்னார். கடந்த 31 ஆம் திகதி காலை இந்தக் கூட்டம் நடைபெற்றது. "உள்நாட்டிலோ வெளிநாடுகளிலோ யுத்த நிறுத்தம் செய்யுமாறு சர்வதேச சக்திகள் செய்யும் அழுத்தங்களுக்கு அடிபணிய மாட்டோம். முற்றுமுழுதாக முடிவுக்கு வரும்வரை யுத்தம் தொடரும்" என்றும் ஜனாதிபதி சூளுரைத்தார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 2-360903
தொலை நகல் (Fax):-011 2-360920
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk
murasu@live.com

# முரசம்

## மனித நேயம் மரித்துக் கிடக்கிறது!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

**புதுமாத்தளனில்** புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களின் அவலம் இன்று இலங்கையின் முதன்மைப் பிரச்சினையாகி இருக்கிறது. புலம் பெயர்ந்த நாடுகளில் பல ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் நடந்த வண்ணமே இருக்கின்றது. அவை எவையும் அவலப்படும் மக்களை விடுவிப்பதற்கான அழுத்தத்தைக் கோருபவை அல்ல.

சர்வதேசமே எதிர்த்து நிற்கும் பயங்கரவாதத்தைப் பாதுகாக்கவும், அது அரணாகப் பிடித்து வைத்திருக்கும் மக்களின் இழப்புக்களை உலகத்துக்குக் காட்டி பிரசார இலாபம் தேடுவதிலும் கூடிய கவனம் கொண்டவை.

எமது மக்களின் கோரமான இழப்புக்களைப் புகைப்படங்களாக்கி அவற்றை இரத்தமும், சதையுமாக்கிக் காட்டித்தான் புலிகளைப் பாதுகாக்கும் போராட்டம் புலம்பெயர் நாடுகளில் முன்னெடுக்கப்படுகின்றது.

மக்களின் இந்த நிலைக்கு அவர்களைத் தடுத்து வைத்து பலி கொடுக்கும் புலித் தலைமையே காரணம் என்பதை எவரும் கூறுவதாக இல்லை. இந்த உண்மையைப் புரிந்துகொண்டதால் தான் இத்தனை போராட்டங்கள் நடைபெற்றும் அவை "செவிடன் காதில் ஊதிய சங்கொலி" போலாகிவிட்டிருக்கிறது.

நாகரீக உலகம் பயங்கரவாதத்துக்கு எதிராகக் கைகோர்த்து நிற்கிறது என்று தெரிந்தும் ஆயிரம் தடவை ஒரு பொய்யைத் திருப்பித் திருப்பிச் சொன்னால் அது உண்மையாகிவிடும் என்பது போல் தமது பிரசாரங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமென அரசாங்கத்தை நோக்கி நீட்டப்படுகின்ற பல இலட்சம் விரல்களில் யுத்தத்தின் மறுதரப்பான புலிகளை நோக்கி இதே கேள்வியோடு நீட்டப்படுகின்ற விரல்கள் எத்தனையாக இருக்கின்றது?

புலிகள் திட்டமிட்டதைப் போல் அவர்களின் இறுதிக்காலம் என்பதன் முக்கியத்துவத்தை மக்களின் அவலத்தோடு கூடிய மனிதாபிமானப் பிரச்சினையாக்கியிருக்கிறார்கள். மனிதாபிமானப் பேச்சுக்கிடையில் புலிகளின் பிரச்சினை கண்ணுக்குத் தெரியாத கயிற்றால் கட்டி இழுக்கப்படுகிறது. இந்த இழுப்பில் தனது தலையைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமாக இருந்தால் எத்தகைய மனிதப் பேரவலத்தைத் தோற்றுவிக்க முடியுமோ அதைச் செய்யும் திட்டத்தில் புலித் தலைமை உள்ளது.

பாரிய பொருட் செலவுகளுக்கும், இழப்புக்களுக்கும் முகம் கொடுத்தபடி புலிகளை ஒடுக்கியிருக்கும் அரசு, உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்றுக்கொள்ளாது. ஏனென்றால் அது அரசைப் பொறுத்தவரை ஆயிரம் மைல் ஓடி அரை மைல் ஓடாத கதையாகிவிடும்.

ஆகவே அரசும் யுத்த நிறுத்தத்துக்கு வரப் போவதில்லை. புலிகளும் மக்களை விடப் போவதில்லை என்ற நிலையில் புதுமாத்தளனில் மக்கள் முகம் கொடுக்கும் மாபெரும் பேரவலம் தொடரவே போகிறது.

புலிகளிடம் எதிர்பார்க்க முடியாத மனிதாபிமானத்தை இலங்கை அரசிடமும், இந்திய அரசு உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமும் மட்டுமே எதிர்பார்த்து கேட்க வேண்டியிருக்கிறது.

புதுமாத்தளனில் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அப்பாவி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள். அவர்களின் உணவு, மருந்து, வதிவிட நெருக்கடிகளுக்குத் தீர்வு காணுங்கள். அவர்களை யுத்த அபாயத்திலிருந்து மீட்டுத் தாருங்கள். இதுதான் மனித நேயமிக்கவர்களை நோக்கிய தமிழ் மக்களின் கோரிக்கையாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# சர்வதேச அழுத்தமும் வன்னி மக்களின் அவலத்தைத் தீர்க்காது

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

**முல்லைத்தீவு** மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புப் பகுதியில் கிட்டத்தட்ட 25 சதுர கிலோமீற்றர்கள் நிலப்பரப்புக்குள் மக்களும், புலிகளும் முடக்கப்பட்டுள்ளனர். யுத்த வலயப் பகுதியில் சுமார் எழுபதாயிரம் மக்கள் சிக்கியுள்ளனர் என்று அரசாங்கம் கூறுகின்றது. இரண்டரை இலட்சம் மக்கள் சிக்கியிருக்கலாமென சில உலக நாடுகளும், சர்வதேச அமைப்புக்கள் சிலவும் கூறுகின்றன. மூன்றரை இலட்சம் மக்கள் சிக்கியுள்ளனரெனப் புலிகள் உலக நாடுகளில் பிரசாரம் செய்து வருகின்றனர். சுமார் ஓர் இலட்சத்துக்கும் ஒன்றரை இலட்சத்துக்குமிடையிலான மக்கள் இருக்கலாமென்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார். யுத்த வலயப் பகுதியிலிருந்து சுமார் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்து சேர்ந்துள்ளனரென்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. யுத்த வலயப் பகுதிகளில் சிக்கியிருக்கும் மக்களின் எண்ணிக்கை குறித்து மேலே குறிப்பிட்ட அபிப்பிராயங்கள் எல்லாம் ஒரு குத்து மதிப்பீட்டில் கூறப்பட்டவையே. இதற்கும் அப்பால் அரசியல், இராணுவ நோக்கங்கள் கருதியும் இந்தக் குத்து மதிப்பீடுகள் கூறப்பட்டிருக்கலாம் என்றெழும் விமர்சனங்களும் சரியானவையே.

இருந்தாலும் இந்த யுத்தத்தில் மிக மோசமான பாதிப்புக்களைச் சந்திப்பவர்கள் யுத்தத்தோடு எந்த வகையிலும் சம்பந்தப்படாத அப்பாவி மக்களே. யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அரசும், புலிகளும் ஏட்டிக்குப் போட்டியான குற்றச்சாட்டுக்களை எறிகணைகள் போல வீசிக்கொண்டிருக்கின்றன. அரசாங்கம் எதைக் கூறினாலும் சர்வதேச அளவில் கட்டவிழ்த்து விடப்படும் பிரசார யுத்தத்தில் புலிகளினதும் புலி முகவர்களினதும் கைகள் மேலோங்கியிருப்பதை மறுக்க முடியாது.

> **1996 ஆம் ஆண்டு அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சராக இருந்தவர் மடெலின் அல்பிறைட் அம்மையார். அவரிடம் சீ.பி.எஸ். தொலைக்காட்சி நிருபர் ஒரு சிக்கலான கேள்வியைக் கேட்டார். "அம்மணி! ஈராக்கில் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் அநியாயமாக மாண்டு போனார்களே, நீங்கள் கொடுத்த விலை பெறுமதி மிக்கது என்றா கருதுகின்றீர்கள்?"**
> **அம்மணி சொன்னார். "பதிலளிப்பது கஷ்டம்தான். ஆனாலும் நாம் கொடுத்த விலை பெறுமதி மிக்கது என்றுதான் நாம் கருதுகின்றோம்" என்று அடித்துச் சொன்னார். ஈராக்கிய மக்களைப் பொருதடியாக நினைத்த அமெரிக்க அமைச்சரின் அகங்காரமான பதில் இது.**

அப்பாவித் தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாக யுத்த வலயப் பகுதிகளில் தடுத்து வைத்திருக்கும் புலிகள், அரசாங்கம் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறதெனக் குற்றஞ்சாட்டி வருகின்றனர். தமிழ் இளைஞர், யுவதிகளையும் ஏன் வயதானவர்களையும் யுத்த நடவடிக்கைகளில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்திக்கொண்டே புலிகள் இந்தப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். தப்பி வெளியேற முனையும் மக்கள் மீது தற்கொலைத் தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொள்ளும் அதே நேரத்தில், புலிகள் 'இனச் சுத்திகரிப்பு' என்ற பிரசாரத்தையும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இதனை எதிர்த்து அரசாங்கம் மேற்கொண்டு வரும் தற்காப்புப் பிரசாரம் புலிகளுக்கு முன்னால் வீரியத்தை இழந்து நிற்கின்றது.

அமெரிக்கா கடற்படையை அனுப்பி அப்பாவி மக்களை மீட்கப் போவதாகக் கூறியது. இந்தியா தலையிட்டதால் நின்றுபோய்விட்டது புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களை எப்படி மீட்கப் போகிறோமென்பது தெரியாமலேயே அமெரிக்கா மீட்க முனைந்தமை புரியாத புதிர்தான்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் டெஸ் பிரௌனை பிரிட்டன் ஒருதலைப்பட்சமாகத் தீர்மானித்து இலங்கைக்கு அனுப்பி வைக்க முனைந்தது. கொழும்பு அரசாங்கம் தடுத்துவிட்டது. மோதலை நிறுத்தி மக்களைப் பாதுகாப்பாக வெளியேற அனுமதியுங்கள் என்று இரு தரப்புக்களையும் ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றம் கேட்டது. புலிகளின் பிடியிலிருந்து தப்பி வரும் மக்களுக்காக அரசாங்கம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நலன்புரி நிலையங்களையும், நிவாரணக் கிராமங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி வருகிறது. சில வேளைகளில் அங்கே குறைபாடுகள் இருக்கலாம், மக்கள் தமது சொந்த இடங்களில் உடனடியாகவே மீளக் குடியேற்றப்பட வேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கலாம். அவைகள் நியாயமானவையாகவும் இருக்கலாம். ஆனால் மக்களை மனிதக் கேடயங்களாக யுத்தப் பகுதியில் தடுத்து




தொழிற்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் சியோப்ஹய்ன் மக்டொனா கடந்த 24ஆம் திகதி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது...

வைத்திருக்கும் புலிகள், அவர்களை விடுவிக்க மறுப்பதுதான் பாரிய குற்றமென்பது ஐரோப்பிய ஒன்றியத்துக்குப் புரியாமல் போனது ஏனோ? அகிம்சை பற்றிய போதனை வழங்கப்பட வேண்டியது அடிப்பவனுக்கேயொழிய அடிவாங்குபவனுக்கு அல்ல என்பது இவர்களுக்குப் புரியாமல் போவதுதான் வேதனைக்குரியது.

தப்பிவரும் மக்களை வெளியேற விடாமல் அரசாங்கம் தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்திருப்பதாக புலிகள் உலகளாவிய ரீதியில் பிரசாரம் செய்து வருகின்றனர். அவை நலன்புரி முகாம்களல்ல, தடுப்பு முகாம்களென்றும் புலிகளின் பிரசாரங்களால் ஆட்கொள்ளப்பட்டவர்களும், கிளிப்பிள்ளைகள் போல அதனை ஒப்புவிக்கின்றனர். தப்பிவரும் மக்களோடு மக்களாகப் புலிகள் தமது மாவீரர் குடும்பத்தினரையும் தற்கொலைக் குண்டுதாரிகளையும் அனுப்பி வைப்பதை மறுக்க முடியுமா? யுத்தச் சூழ்நிலைகளின்போது புலிகள் மேற்கொள்ளும் தந்திரோபாயங்களைத் தண்டிக்க வேண்டிய கடப்பாடு, தவிர்க்க முடியாமல் அரசுக்கு இருப்பதை மேற்கத்திய நாடுகளால் மறுக்க முடியுமா?

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கை மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட வேண்டுமென்று அமெரிக்காவும் வலியுறுத்தியது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலும் இலங்கையின் பிரச்சினை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானின் எல்லைப் பகுதிகளிலும் அமெரிக்க விமானங்கள் நடத்திய, நடத்திவரும் குண்டு வீச்சுக்களில் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை எத்தனை இலட்சங்களைத் தாண்டும்? பாகிஸ்தான் அரசின் அனுமதி இல்லாமலேயே ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள பாகிஸ்தானியக் கிராமங்களின் மீது அமெரிக்கா நடத்திய விமானத் தாக்குதலில் அப்பாவி மக்கள் கொல்லப்படவில்லையா? பால்கன் யுத்தத்தின்போது நேட்டோ தொடர்ச்சியாக 78 நாட்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தி மக்களைக் கொல்லவில்லையா? ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக் கூறித்தானே அமெரிக்கா ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது. அங்கே பேரழிவு ஆயுதங்கள் இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை. அமெரிக்கா நடத்திய தாக்குதல்களால் இலட்சக்கணக்கான ஈராக்கிய மக்கள் கொல்லப்படவில்லையா?

அமெரிக்கா, ஈராக் மீது பொருளாதாரத் தடையை விதித்த 1997 - 1998 ஆண்டு காலப் பகுதியில் ஐந்து வயதுக்குட்பட்ட ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் நோய் நொடிகளால் மாண்டு போனார்கள்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## ஊரிவிடுங்க...



ஏ-9 வீதியால் குடாநாட்டுக்குப் பொருட்கள் வருகின்றன. அதேபோல, யாழ்ப்பாண உற்பத்திப் பொருட்கள் தெற்கிற்குச் செல்கின்றன.

வடக்கில் இருந்து உற்பத்திப் பொருட்கள் தெற்கே செல்வதால் யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை கூடி மக்கள் பாதிப்படையப் போகிறார்களாம் என்டு மறைகழண்ட சிலர் ஓலமிடுகின்றனர். புலிகள் ஓமந்தையிலும் முகமாலையிலும் ஏற்றியிறக்கிக் கப்பம் அறவிட்டபோது நடுவகப் பணியகத்தில் கைகட்டி நின்றவர்கள்தான் இந்தக் கூப்பாடு போடுகின்றார்கள். ஆடுகள் நனையுதென்று ஓநாய்கள் மட்டுமல்ல, பழம் தின்று கொட்டை போட்ட கிழடுகளும் கூடத்தான் கண்ணீர் விடும்.

# அப்பாவி சிங்கள விவசாயிகளின் படுகொலைகளால் கிழக்கில் பதற்றம்

**கிழக்கு** மாகாணம் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால் புலிகளின் நடமாட்டத்தை முற்றாகக் கட்டுப்படுத்தவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் அடிக்கடி நடந்தேறுகின்ற படுகொலைகள், தாக்குதல்கள் என்பன அந்தச் சந்தேகத்தை வலுப்படுத்துகின்றன. புலிகளின் தாக்குதல்களும், அரசியல் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளும், கப்பம், வரி தொடர்பான செயற்பாடுகளும் கிழக்கு மாகாணத்தின் இயல்பு நிலைக்குக் குந்தகமாக இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் கடந்த முப்பது வருடங்களுக்குப்பின் விவசாயிகள் தூர இடங்களில் உள்ள தமது காணிகளில் தாமே விவசாயம் செய்தனர். சில காணிகளில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். முன்னர் புலிகள் காடுகளுக்குள் இருந்த போது காணிகளைப் பிடித்து வைத்திருந்தனர். சில காணிகளில் தாமே விவசாயம் செய்தனர். சில காணிகளில் உரிமையாளர்களை விவசாயம் செய்து இலாபத்தில் பங்கு வாங்கினர். அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இப்போது விவசாயிகள் சுயமாக விவசாயத்தில் ஈடுபாடு காட்டத் தொடங்கியுள்ளனர்.

விவசாயிகள் தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் வேண்டுமெனக் கேட்டபோது பாதுகாப்பு வழங்கப்பட்டும் வந்தது. எனினும் காடுகளுக்குள் பதுங்கியிருக்கும் புலிகளின் நடமாட்டத்தையும், அச்சுறுத்தல்களையும் முழுமையாகக் கட்டுப்படுத்த முடிந்திருக்கவில்லை.

மூவின மக்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில் இனரீதியாக நடத்தப்படுகின்ற வன்முறைகள், இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையைத் தோற்றுவிக்கக்கூடியது. ஆகவே கிழக்கின் இயல்புச் சூழலை சீர்குலைக்க நினைத்தாலோ இனங்களுக்கிடையே முறுகலை தோற்றுவிக்க நினைத்தாலோ அதற்காக அகப்படுகின்ற அப்பாவிகளை இலக்கு வைத்துத் தாக்குவது, தீய சக்திகளின் செயற்பாடாக இருந்து வருகின்றது.

தமிழ் - சிங்கள அல்லது தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையிலான வன்முறைகள் பல கிழக்கில் இவ்வாறே ஏற்படுத்தப்பட்டது. முதலமைச்சர் சந்திரகாந்தனின் அலுவலகம் தாக்கப்படுவதும், உறுப்பினர்கள் படுகொலை செய்யப்படுவதும், அமைச்சர் முரளிதரனின் அலுவலகம் தாங்கப்படுவதும், ஆதரவாளர்கள் கொலை செய்யப்படுவதும் இருகட்சி மோதல்கள் என்று கூறப்பட்டாலும், புலிகளின் கைவரிசையாகவும் இருக்க வாய்ப்புக்கள் உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை.

இதற்கு மேலதிகமாக கிழக்கில் நடந்த பொதுமக்கள் படுகொலைகள், வைத்தியர் படுகொலை, கல்விசார் ஊழியர்கள் படுகொலைகள், சிறுமி கடத்தல் மற்றும் படுகொலை, ஈச்சிலம் பற்றில் நடந்த படுகொலை என கிழக்கில் அண்மையில் அதிகரித்திருக்கும் சம்பவங்கள் பதற்றத்தை அதிகப்படுத்தியுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இனங்களுக்கிடையிலான முறுகலுக்கு வழிகோலாவிட்டாலும், கிழக்கின் அமைதிக்குக் குந்தகமானவையாகும்.

மார்ச் 24 ஆம் திகதி திருமலை சேருநுவர தெஹிவத்த பகுதியில் ஐந்து விவசாயிகள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். அதற்கு அடுத்த நாள் மார்ச் 25 ஆம் திகதி வெலிகந்தையில் மெனிக்கதெனிய பகுதியில் நான்கு விவசாயிகள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்கள் சிங்கள விவசாயிகளாவர். இதே மூதூர் தெஹிவத்த பகுதியில் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் ஆறாம் திகதி 15 சிவிலியன்களைப் புலிகள் படுகொலை செய்தனர் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.


இவ்வகையான அப்பாவி விவசாயிகளின் கொலையானது காடுகளுக்குவரும் விவசாயிகளின் வருகையைத் தடுப்பதற்காகவும், தமக்கு உதவாத போது பழி தீர்ப்பதற்காகவும், புலிகளால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்ற போதும், இத்தகைய கொலைகள் இனங்களுக்கிடையிலான சந்தேகத்தையும், பரஸ்பர உறவையும் சீர்குலைப்பதாகவே அமைந்துள்ளது.

ஆகவே இவ்வாறான படுகொலைகளை ஆயுததாரிகளின் பெயரில் விட்டுவிட முடியாது. கடந்த காலங்களில் நடத்த படுகொலைகள், ஆயுததாரிகள் இனந்தெரியாத நபர்கள் என்று கூறிவிட்டு இக்கொலைவரையும் வேறு சிந்தனைகளுடன் இருந்துவிட்டதே கடந்த கால வரலாறாகிப் போயிருக்கிறது.

**மழை விட்டும் தூறல் விடாத கதையாகவே கிழக்கு மாகாணத்தில் புலிகளின் நடவடிக்கைகள் இருக்கின்றன. இந்தச் சூழலில் மக்கள் பயந்து வாழ்ந்த நிலை மாற்றமடையாத சூழலே தொடர்கிறது. ஆயுத அச்சுறுத்தல் அற்ற நிலைமை தோன்றாத வரை கிழக்கு மாகாணத்தில் இயல்பு நிலையென்பது கேள்விக்குரியதாகவே இருக்கப் போகின்றது.**

தற்போதைய நிலையில் அப்படியிருந்துவிட முடியாது. பயங்கரவாதம் மக்களின் குரல்வளையை இறுக்கிப் பிடித்தபோது மக்கள் மௌனமாக இருந்தார்கள். இப்போது நிலைமை மாறியிருப்பதாக மக்கள் கருத வேண்டுமாக இருந்தால் கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள், கப்பம், மிரட்டல் உட்பட அனைத்துச் சமூக விரோத / சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் சட்ட ரீதியான தீர்வு காணப்படவேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். அப்போதுதான் மக்களுக்குத் தமது பாதுகாப்புக் குறித்த நம்பிக்கைகளும் உயிர் வாழ்தல் தொடர்பான உத்தரவாதத்தையும் கொண்டிருக்க முடியும்.

மத்திய அரசுக்கும், மாகாண அரசுக்கும் இந்தப் பொறுப்பு உண்டு. இதிலிருந்து யாரும் நழுவிக் கொள்ள முடியாது. புலிகளிடமிருந்து கிழக்கை மீட்டெடுத்தது வெற்றி என்பதை விடவும், அந்த வெற்றிகளை அர்த்தப்படுத்துவதே மகத்தான வெற்றியாகும். மக்களுக்கு மகிழ்ச்சியான வெற்றியாக்க வேண்டும்.



இல்லாவிட்டால் படைத்தரப்புக்கு எதிரான பாரிய தாக்குதல்களை முடிக்கிய இராணுவ வெற்றியாகவே அது அமையும். மக்கள் அனுபவிக்காத வெற்றியைக் கொண்டாடுவதில் எவரும் பெருமைகொள்ள முடியாது.

மழை விட்டும் தூறல் விடாத கதையாகவே கிழக்கு மாகாணத்தில் புலிகளின் நடவடிக்கைகள் இருக்கின்றன. இந்தச் சூழலில் மக்கள் பயந்து வாழ்ந்த நிலை மாற்றமடையாத சூழலே தொடர்கிறது. ஆயுத அச்சுறுத்தல் அற்ற நிலைமை தோன்றாத வரை கிழக்கு மாகாணத்தில் இயல்பு நிலையென்பது கேள்விக்குரியதாகவே இருக்கப் போகின்றது.

அதேபோல் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் மக்களின் விழிப்புணர்வும் அவசியமாகிறது. மக்களின் பங்களிப்பு இல்லாவிட்டால் எவராலும் பயங்கரவாதத்தையும், சமூக விரோத தீய சக்திகளையும் இல்லாதொழிக்க முடியாது.

ஆயுத பலத்தில் பயங்கரவாதம் தோல்வி கண்டாலும், மக்களுக்குள் ஒளிந்து கொண்டு மக்களைப் பயன்படுத்திக் கொண்டு தமது இருப்பைப் பாதுகாக்கவே செய்யும். இதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

வழமைக்குமாறான நடமாட்டங்கள், செயற்பாடுகளை அவதானித்தல் அதைப்பற்றி பாதுகாப்போடு தொடர்புபட்டவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

தெரிவிப்பதோடு மட்டுமல்லாது விழிப்பாகவும் இருக்கவேண்டும். அப்போதுதான் அசம்பாவிதங்களிலிருந்து தூரமாக முடியும். கிழக்கில் இன்று மக்கள் அனுபவிக்கும் நெருக்கடிகளை நாளை வடக்கு மக்களும் அனுபவிக்க வேண்டியிருக்கலாம். எனவே இயல்புச் சூழலின் உருவாக்கத்திற்கான பொறுப்பை தனியே பாதுகாப்போடு தொடர்புபட்ட தரப்புக்கள் மீது மட்டும் சுமத்திவிட முடியாது. பொதுமக்களின் பங்களிப்பும் தேவை.

பொதுமக்களின் பங்களிப்பை வழங்குவதில் சில சிக்கல்களும் உண்டு என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

அதாவது பாதுகாப்புத் தரப்போடு ஒட்டிக் கொண்டிருக்கும் சிலர், தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் படைத்தரப்போடு செயற்படும் அதே வேளை, அதையே காட்டி மக்களை மிரட்டுகின்ற, அடாவடித்தனம் புரிகின்ற கேவலத்தையும் செய்து வருகின்றனர் என மக்கள் கூறுகின்றனர். இந்த விடயமானது மக்களின் பாதுகாப்புக்கு உதவுவதில் ஒரு வகை அச்சத்தைத் தருவதாக மக்கள் கருதுகின்றனர். மக்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதாக இருந்தால் இத்தகைய கேவலங்களுக்கும் தீர்வு காணப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் நடந்தேறுகின்ற பல சிக்கல்களுக்கு மிகவும் நிதானமாகவும், கவனமாகவும் தீர்வு காணப்பட்டாலே அங்கு இயல்புச் சூழலைத் தோற்றுவிக்கவும், அதைப் பாதுகாக்கவும் முடியும்.

அலசுவது

மதியூகி

## அதிரடி அய்யாத்துரை



**கடிதம்** எழுதிக் கடிதம் எழுதியே தன்ர பொலிரிக்ஸ் கொடியை தக்கவைத்துக்கொண்டிருக்கும் அழுக்கு சங்கரியார் லேட்டஸ்டாக அதிகாரமானவருக்கு எழுதியிருக்கிற கடிதம் அலரிப்பூ மாளிகைப் பக்கம் ஆனந்தச் சிரிப்புக்கு காரணமாகியிருக்குதுங்கோ.

சங்கரியார் எழுதின கடிதத்தில வன்னியில இருந்து வந்து நலன்புரி நிலையங்களில தங்கியிருக்கிற மக்களுக்கான பிரச்சினைகள் எண்டு சில பிரச்சினைகளைப் பட்டியல் போட்டிருக்கிறாராம். எடேய் சங்கரியார் என்ன பிரச்சினைகளையடாப்பா பட்டியல் போட்டிருக்கிறார் எண்டு விசாரிச்சால், நிலையங்களில இருக்கிறவைக்கு காலையிலையும், மாலையிலையும் பால் தேத்தண்ணீர் கொடுக்க வேணுமாம். பிறகு பத்து மணிக்கும் பின்னேரம் அஞ்சு மணிக்கும் சோர்ட் ஈஸ்ட் ஏதும் கொடுக்க வேணுமாம் எண்டதில தொடங்கி சங்கரியார் பட்டியல் போட்டிருக்கிறாராம்.

அதைப்பார்த்த அதிகாரத்தரப்புக்கு அடக்கமுடியாத சிரிப்பு வந்திட்டுதாமுங்கோ. உந்தச் சனத்துக்கு எவ்வளவு பிரச்சினை இருக்கு, குறைபாடுகள் இருக்கு. உந்த மனுஷன் பால் தேத்தண்ணியும் பணிசும் குடுக்கச் சொல்லிக்கொண்டிருக்குதே எண்டு சிரிச்சிருப்பினமுங்கோ. மனுஷனுக்கு அறளை பேந்திட்டுதுங்கோ.

அதுசரி சனங்களோட பழகி அவையின்ர பிரச்சினைகள் என்ன எண்டு அறிஞ்சிருந்தால் உண்மையான தேவை என்ன எண்டது தெரிஞ்சிருக்கும். உது கடிதம் எழுதுறதும் ஊடகங்களுக்குச் செய்தி குடுக்கிறதுமாக இருந்தவருக்கு இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு என்ன பிரச்சினை எண்டு எப்படியுங்கோ தெரிஞ்சிருக்க முடியும். சங்கரியார் சொல்லுறது எப்படி இருக்குது தெரியுமோ? பாண் சாப்பிடவே முடியாதிருக்குது நிலமை எண்டு சொல்லப்படேக்க, லண்டன் மகாராணியார் பாண் சாப்பிடமுடியாவிட்டால் கேக் வேண்டிச் சாப்பிடுங்கோ எண்டு சொன்ன மாதிரி இருக்குதுங்கோ. சீரியஸ்னஸ் தெரியாமல் பகிடி விடுகினமுங்கோ.

**போனவாரம்** ரகசியமாகப் பேசுமாப்போலை ஒரு பேச்சுவார்த்தை நடந்தது எண்டு குருவி சொல்லுதுங்கோ. என்ன நடந்தது யார் பேச்சு நடத்தினம் எண்டு கேட்டால் எல்லாம் எல்லாம் இங்கிலிசுப் பேச்சுத்தானாமுங்கோ.

வெளிநாட்டு விவகாரத்தைப் பாக்கிற அதிகாரமானவருக்கே அட்வைஸ் சொல்லுறவையுமாக இந்தப் பக்கமாம். எதிர்ப்பக்கத்தில புலம்பெயர்ந்து போன எங்கட புத்திஜீவிகளாம்.

சூடு பறக்கப்போன பேச்சுக்களில ரெண்டெழுத்தார் புலம்பெயர் நாடுகளில நடத்துற அர்ப்பாட்டங்கள் தொடர்பாக ஆரம்பித்து தீர்வுத் திட்டம் வரைக்கும் நீட்டி முழக்கிச்சினமாம்.

வேண்டாத பேச்சு நமக்கு எதுக் கெண்டுபோட்டுத் தீர்வுத் திட்டம் பற்றி என்ன பேசிச்சினமெண்டு குருவியைக் கேட்டனுங்கோ.

புதுத் திட்டம் ஒண்டும் இல்லையுங்கோ. கூட்டிக் கழிச்சுப் பார்த்தால் பதின்மூன்றாவது தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கோ. அதில இருந்துதான் ஆரம்பிக்க வேணும். அதுதான் சரியான ஸ்ராரட்டிங் பொயின்ஸ் எண்டு தானுங்கோ ஏகோபித்த குரலாய்ச் சொல்லிச்சினமாம். மாகாண சபையில தொடங்கி முன்னுக்குப் போகலாமெண்டு ரொம்பவும் உசாராய்ச் சொல்லிச்சினமாம். ஒருகாலத்தில மாகாண சபைக்குப் போறதோ. அதைவிடப் பெரிசாய் எல்லோ கேக்க வேணும் எண்டெல்லாம் கெம்பினவை இப்பதான் சரியான ரெக்குக்கு வந்திருக்கினமாமுங்கோ. உவையளைப்போல மிச்சமாக இருக்கிறவையும் திருந்தி இந்த முடிவுக்கு வருவினமெண்டு குருவியே நம்புதாமுங்கோ.

**புதுமாத்தளன்** பகுதிக்கு சனங்களைப் போங்கோ எண்டு சொல்லிச்சினம். சனங்கள் போனதோடை பங்கர் தலை வரும் போயிட்டாரெண்டது எல்லோருக்கும் தெரிஞ்ச விஷயமுங்கோ. வாத்தியார்தான் ஒண்டும் விளங்காத மாதிரி வம்பு அளந்து கொண்டிருக்கிறாருங்கோ.

என்னங்கோ உங்கட பிரச்சினையைச் சொல்லுங்கோவன் எண்டு கேட்டால் தம்பி புதுமாத்தளத்திலதானே நடமாடுறாராம். இவ்வளவுக்குப் போனவங்கள் இன்னொரு எட்டுப் போய் தம்பியாரைச் செவியில பிடிச்சுப் போட்டாங்கள் எண்டால் எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைச்சிடுமெல்லோ.

இடம் பெரிசா இருக்கேக்க வீச்சாய்ப் போச்சினம் இப்ப எல்லாம் சுருங்கிப் போயிட்டுது. ஏனப்பா காலதாமதம் எடுக்கினம். உதுக்கு ஒரு விளக்கம் சொல்லுங்கோ எண்டுதானுங்கோ வாத்தி கேக்கிறார்.

வாத்தி நிதானத்தில இருந்திருந்தால் சொல்லுற விளக்கம் புரியுமுங்கோ. உந்த மனுஷன் நாலு காலில எல்லோ நிக்கிறார் உங்க சனம் நெருக்கடியில நிக்குதுகள் செல் அடித்தால் அதுகளின்ர தலையிலதான் விழும். பங்கர் தலைவர் உதுக்க பதுங்கிக்கொண்டுதான் திரியிறார். சனம் மட்டும் இல்லையெண்டால் தாள தப்பட்டச் சத்தம் கேக்குமெண்டது தம்பிக்கு தெரியுமுங்கோ. வாத்திக்குத் தெரியாதோ.

**தமிழ்** நாட்டில் எழும்பின ஈழ ஆதரவு அலையைக் காணயில்லையெண்டு தேடுகினமுங்கோ.

ஈழ ஆதரவெண்டு ஒண்டாச் சேர்ந்து முழங்கினவையெல்லாம், தங்கட பொலிரிஸ்க்காக ஆளுக்கொரு திசைக்கு ஒதுங்கீட்டினமுங்கோ.

நண்பர் ஒருவர் சொன்னார் உண்மையில இவை ஈழப் பிரச்சினைக்கு தீர்வு காணுறவைக்குத்தான் நாங்கள் ஆதரவு, இல்லாவிட்டால் ஒரு பேயோடையும் சேரமாட்டம் எண்டு ஒரே பிடியா நிண்டிருந்தால் தமிழகத்தின்ர பெட்சிகளான தி.மு.க.வோ, அ.தி.மு.க.வோ உதுக்கு ஒரு டீல் போட்டிருப்பினம். அதைவிட்டுப்போட்டு அம்மாவோட கொஞ்சப் பேர், ஐயாவோட கொஞ்சப்பேர் எண்டு போய்ட்டினமெண்டது மட்டுமில்லையுங்கோ. நேற்றுவரையும் ஓரணியாய் நிண்டவை அண்ணன் தம்பி எண்டு கட்டிப் பிடிச்சுக்கொண்டு திரிஞ்சவை இப்ப எலக்ஸன் களத்தில குடும்பிச் சண்டை பிடித்துக்கொண்டு திரியினமுங்கோ.

உப்பிடிச் சில்லம் பாயிறியலே உங்க ஒற்றுமைக்கு என்னாச்சுது எண்டு கேட்டால், அப்ப கூட்டுச் சேர்ந்து கதைச்சது வேற வாயுங்கோ. இப்ப கதைக்கிறது நாற வாயுங்கோ எண்டு வடிவேல் பாணியில தொண்டர்கள் சொல்லினமாமுங்கோ

# “இது மட்டுமல்ல இன்னமும் இருக்கு”

**வன்னியில் –** புலிகளின் பிடிக்குள் இருந்து தப்பி வெளியேறி இராணுவத்தினரிடம் அடைக்கலம் தேடுகின்ற மக்கள், வவுனியாவில் நிவாரணக் கிராமங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை மதகுருமார்கள், அமைச்சர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் எனப் பலரும் அடிக்கடி சென்று பார்வையிட்டு, அவர்களுக்கு உதவிகளும் செய்து வருகின்றனர். இதனால் மிகவும் கலக்கமடைந்து போயுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாங்களும் சென்று மக்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டனர் போலும்! ஏனென்றால் அண்மையில் இரண்டு த.தே.கூ. பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்படி நிவாரணக் கிராமங்களுக்குச் சென்றபோது நடந்த சம்பவங்கள்- அனைவரையும் சிரிக்க வைத்துள்ளன. முதலில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய நலன்புரி நிலையத்திற்கு வந்தார் ஒருவர். மிகவும் களைப்புடன் காணப்பட்டார். வந்தவர் மக்களைப் பார்த்து கேட்டார் ஒரு கேள்வி! “வன்னியில இருந்து என்னத்துக்கு இஞ்ச வந்தனியள்?” மில்லியன் டொலர் பெறுமதியான(?) அந்தக் கேள்விக்கு மக்கள் மிகவும் சூடாக பதில் கொடுத்தார்கள்.

“அங்க எங்கட பிள்ளைகளைப் பிடிச்சுக் கொண்டு போறாங்கள்! புருசன்மாரை பணிக்கு வா- எண்டு கூட்டிக்கொண்டு போய் சண்டைக்கு விடுறாங்கள், கர்ப்பிணிப் பொம்பிளை எண்டு கூடப் பார்க்காமல் பிடிச்சுக்கொண்டு போய் சண்டைக்கு விட்டுச் சாக்காட்டுறாங்கள்! இஞ்ச வராம, அங்க கிடந்து என்ன சாகச் சொல்லுறியளே?” கேட்டவரின் முகத்தில் ஈயாடவில்லை! மெதுவாக அங்கிருந்து நழுவி, வேறொரு இடத்தில் மக்களைச் சந்தித்தார். இம்முறை தனது குரலின் சுருதியை மாற்றி, “உங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் சொல்லுங்கோ” என்றார்.” “இஞ்ச ஒரு பிரச்சினையும் இல்லை. தண்ணிதான் கொஞ்சம் தட்டுப்பாடு” என மக்கள் கூற, எடுத்துவிட்டார் எங்கட பா.உ. ஒரு வசனத்தை!

“கொழும்பில, ரெண்டு தண்ணி பவுசருக்கு ஓடர் குடுத்திருக்கிறேன். இண்டைக்குப் பின்னேரம் வந்திடும். நாளையில இருந்து உங்களுக்குத் தண்ணிப் பிரச்சினை இல்லை” அவர் சொல்லி மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. கொழும்பிலிருந்து புறப்பட்டதாக அவர் சொல்லிய இரண்டு தண்ணீர் பவுசர்களும் எங்கு போயினவோ தெரியவில்லை! அதன் பின்பு அந்த பா.உ மக்களைச் சந்தித்ததாகத் தெரியவில்லை.

இது இப்படியிருக்க கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை- மற்றுமொரு த.தே.கூ.பா.உ. ஒருவர் செட்டிக்குளத்திலுள்ள கதிர்காமர் நிவாரணக் கிராமத்திற்கு வந்தார். அவர் யார் என்பதை முதலில் மக்கள் விளங்கிக் கொள்ளவில்லை.

யாரோ பெரியாள் வந்திருக்கிறார் என ,எண்ணிய மக்கள் மிகவும் பயபக்தியுடன் அவரையே பார்த்துக்கொண்டு நின்றனர். எப்படியோ அவரை இனம் கண்டுகொண்ட ஒருவர், ‘இவர்தான் அவர்’ என்று ஏனையோருக்கு கூற, பொங்கியெழுந்த மக்கள் கூட்டம், உவர் என்னத்துக்கு இஞ்ச வந்தவர்? என்று கூச்சல் போட, சிலர், எங்கிருந்தோ விளக்குமாறுகளைத் தூக்கிகொண்டு ஓடிவந்தனர். இந்த “விநோத”மான காட்சியைக் கண்டு- வந்தவர் மிரள, தமிழ் நன்கு பேசக்கூடிய இராணுவ வீரர் ஒருவர் ஓடிவந்து, மக்களைச் சமாளித்து வீடுகளுக்குச் செல்லுமாறு வேண்டினார், அதன்பின்னர் அசடுவழிந்த முகத்துடன் பா.உ. இறுதியில் லங்கா ச.தொ.ச. நிலையத்திற்குப் போனார். அங்கிருந்த ஊழியர் ஒருவரிடம் கேட்டார் ஒரு கேள்வி!

“இந்தக் கோப்பிறட்டி, வவுனியாக் கோப்பிறட்டிக்குக் கீழ்தானே இயங்குது?”

அதற்கு அந்த ஊழியர் மிகவும் பணிவுடன் பதில் சொன்னார்.

“இது கோப்பிறட்டி இல்ல சேர். இது ச.தொ.ச.” “அட ச.தொ.ச. என” என்று அவர் அசடு வழிந்த அந்த நேரம் பார்த்து, இந்த ‘விநோத’மான காட்சியைப் புகைப்படம் எடுத்தார், அவரின் உதவியாளர் ஒருவர்.

“சங்கக் கடைக்கும் ச.தொ.ச.வுக்கும் வித்தியாசம் தெரியாத இவருக்கெல்லாம் தமிழ் மக்களின் பிரச்சினை எப்படி விளங்கப் போகிறது?” என வயோதிபர் ஒருவர் சட்டென்று கேட்க மக்கள் மத்தியில் “கொல்” என்ற சிரிப்பு மழை! தொடர்ந்து வேறொரு இடத்திற்குச் சென்ற பா.உ.வை சுற்றி வளைத்தது மக்கள் கூட்டம்! அவர்களில் ஒருவராக வந்த ஆசிரியர் ஒருவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வண்டவாளங்களைச் சரமாரியாகப் பொழிந்து தள்ள, வந்ததே இவருக்குக் கோபம்! தான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதையும், மறந்துவிட்டு, படுமோசமான தூஷண வார்த்தைகளால் குறித்த ஆசிரியரைத் திட்டத் தொடங்கினார். இவரது மோசமான தூஷண வார்த்தைகளைச் சகிக்க முடியாத பெண்கள் தங்களது இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டு அங்கிருந்து வேகமாக ஓடிப் போயினர். ஒருவாறு இராணுவ அதிகாரிகள் தலையிட்டு நிலைமையைச் சமாளிக்க, அங்கிருந்து தப்பினோம் பிழைத்தோம் என வெளியேறினார் விநோதமானவர். “புலிக்கு வால் பிடித்தல் அன்றி வேறொன்றும் அறியோம்” என நடந்து கொள்ளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வந்த மக்கள் கொடுத்த மரியாதை இது! இது என்ன பெரிய மரியாதை- அடுத்த தேர்தல் வரட்டும் இன்னும் நிறையக் காட்டுவோம்” என்கிறார்கள் அந்த மக்கள்! செய்வார்கள் போல்தான் தெரிகிறது.



வவுனியாவிலுள்ள நலன்புரி முகாமொன்றின் பகுதித் தோற்றம்

**– ஆகாஷ் –**




# நெத்தியடி

**வன்னியில்** ஏற்பட்டிருக்கும் மனிதாபிமான நெருக்கடிகளுக்குத் தீர்வு கண்டபிறகே எந்தவொரு அரசியல் பேச்சுவார்த்தையும் அர்த்த புஷ்டியுடையதாக இருக்கும்.

தமிழ்க் கூட்டமைப்பு.

**ஒருபோதும் அர்த்தபுஷ்டியுடன் பேசமுடியாத உங்களால் அப்போது பேச முடியுமா?**
**மக்கள்.**

அம்பாறை நகரிலுள்ள முன்னணிப் பாடசாலையொன்றில் சொக்லேட் நஞ்சானதால் 15 மாணவர்கள் திடீர் சுகவீனமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

செய்தி.

**நாட்டை நாசமாக்கும் பயங்கரவாத விஷத்தின் பக்கவிளைவுகள் பணிஸ், சொக்லேட்டையும் நஞ்சாக்குகிறதோ?**
**மக்கள்.**

தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டவிதிகள் தேர்தலை முறையாக நடத்துவதற்குப் போதுமானவையல்ல.

பவ்ரல் அமைப்பின் பேச்சாளர்.

**தேர்தலை முறையாக நடத்தக்கூடாது என்பதை சகல அரசியல்வாதிகளும் விரும்புகிறார்களே!!**
**மக்கள்.**

இலங்கையின் பிரபல ஊடக நிறுவனமான உதயன் அலுவலகத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதை எமது அமைப்புகள் வன்மையாகக் கண்டிக்கின்றன.

ஊடக அமைப்புகள்.

**‘சர்வதேச ஊடக மாநாடு’ ‘பத்திரிகை ஆசிரியர் வித்தி மீது நீதிமன்ற விசாரணை’ போன்ற தினங்களில் குண்டுத் தாக்குதலை நடத்துவது யாருக்குச் சிறப்பானது?**
**மக்கள்.**

டில்லியில் உள்ள ஜேர்மன், சுவீடன் தூதரகத்தில் இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து வைகோ விளக்கம் கொடுத்தார்.

தமிழகச் செய்தி.

**வன்னியுடன் நேரடித் தொடர்பில் இருப்பதால் இலங்கை நிலைவரம் குறித்து வைகோ விளக்குகிறாரோ?**
**மக்கள்.**

கூட்டமைப்பினரைச் சந்திக்க வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கிறார். எனினும், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 4ஆவது மாடியில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இது அரசியல் நாகரிகமா?

ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்.

**விசாரணைக் கூண்டில் முதலில் நிறுத்தப்படவேண்டியவர்கள் அரசியல்வாதிகள்தானே?**
**மக்கள்.**

அரசுடன் ஒட்டிக்கொண்டிருப்போருக்கே வடக்கும் கிழக்கும் வேறுவேறு மாகாணங்களாக தென்படுகின்றது.

என்.ஸ்ரீகாந்தா எம்.பி., தமிழ்க் கூட்டமைப்பு.

**பிரித்தபோது கைகட்டி நின்ற 22 வடக்கு, கிழக்கு எம்.பி.க்களுக்கு, இப்போது இணைந்த வடக்கு, கிழக்கு கனவில் தென்படுகிறதோ?**
**மக்கள்.**




வளமுடன் வாழ மலையாள மாந்திரீகத்துறையில் உண்மை, உறுதி, உத்தரவாதத்துடன் வாழ்வில் வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டாக என்னால் நிரூபித்துக்காட்டும் மலையாள மாந்திரீக சக்தி என்றால் அது என்னிடம் மட்டுமே!

என்னிடம் பரிகாரம் செய்த வாடிக்கையாளர்கள் என்னுடனேயே! அவர்களில் வாழ்த்துக்கூறும் ஒருவர்-
பல்லாண்டுகாலம் பாரினிலே சாதனைகள் பல படைத்து லட்சம் லட்சம் மக்களின் மனதில் குடிகொண்டு வாழ்ந்துவரும் உங்களையும், காயத்திரி பீட மந்திரங்களின் வெற்றியினையும் வளர்ச்சியையும் கண்டு மெய்சிலிர்த்துபோனேன் உங்களின் ஆசீர்வாதத்துடன் உங்களிடத்தில் மட்டுமே! என் பிரச்சனைக்குத் தீர்வு கண்டேன்.

மற்றும் உங்கள் குறைகளுக்கு வெளிநாட்டில் நிரந்தர வசிப்பிடம் வேண்டுமா? வெளிநாடு செல்ல தங்கு தடைகளா? திருமணம் நடக்கவில்லை என்ற நிந்திப்பா? காதல் கை கூடவில்லையா? குழந்தைப்பேறுகிட்ட எந்தத்தெய்வத்தின் அனுக்கிரகம் தேவை வாழ்வில் சோகமா வீட்டிலோ வியாபாரஸ்தலத்திலோ திருடு போகாமல் காவல் செய்துகொள்ள வேண்டுமா? அன்னிய உறவின் ஆதரவுதேவையா? உறவினர் சொந்தப்பிணக்கா? கல்வியில் மந்தமா சித்தி பெற வேண்டுமா? குடிபோதையால் குடும்பத்தில் தடுமாற்றமா? ஒரே நாளில் கணவன் மனைவி ஸ்திரி புருஷ வசியமா? ஆண்மைக் குறைவால் நிந்திப்பா? சொல்லியும் சொல்ல முடியாத நோய்களா? தலைமுடி உதிர்கிறதா? இன்னும் உங்கள் குறை நிறைகளுக்கு என்னை சந்தித்தால் உண்மையின் சக்தி உண்மையிலேயே விளங்கும் இதற்குக்காரணம் எனது 48 வருடகால உண்மையான சேவையே அது மட்டுமா! 15 காண்ட அடிப்படையில் ஒவ்வொருவரின் ஜனன ஜயிதாவை வாழ்க்கை சித்திரமாக 331 பக்கம் கொண்ட 15 காண்ட அடிப்படையில் ஒருவரின் ஜாதகத்தை ஆணிவேறு அக்குவேறாக தெரிந்துகொள்ள ரூபா 2700/= தபால் செலவு 350/= மட்டுமே.

வெளிநாட்டவர்களுக்கு விஷேட சலுகை உண்டு

E-mail: drpksamy@sltnet.lk Web: www.drpksamy.com

அருள் ஞானசித்தர் தேசபந்து, கௌரவ பேராசிரியர், ஜோதிட கலாநிதி P.K.SAMY(J.D.G.A.N) JP ஐயா
ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்
No.162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO - 13. 011 2470615, 011 2342463, 011 2342464, Fax.0094-11-2344831
நுவரெலியாவில் என் நிறுவனம் துர்க்காதேவி ஆலயம், இல 33,கண்டி வீதி, நுவரெலியா ராஜா: 0775590800,0522235097

அவசர யுகத்தில் மகிமை தரும் இரத்தினக்கல் உங்களுக்கு என் இறைஞான சித்தால் பொருத்தமான இரத்தினக்கற்களைபெற உங்கள் ஜாதகத்துடன் வாருங்கள். கூரை வீட்டில் வாழ்பவர்கள் கூட மாடி வீட்டில் வாழக்கூடிய தகுதியை வாலையமாக ஏற்படச்செய்யும் உங்கள் மாதிசைக்கு தக்கவாறு என்னால் சிபார்சு செய்யும் 22 கரட் தங்க மோதிரத்துடன் வழங்கப்படும் இரத்தினக்கற்களுக்கு கரண்டிகாட் என்னால் வழங்கப்படும். E-mail: drpksamy@sltnet.lk

லண்டனிலிருந்து வெளிவரும் 'ஜேன்ஸ் இன்ரலிஜன்ஸ் ரிவியூ' (JANE'S INTELLIGENCE REVIEW) என்ற சஞ்சிகையில் புலிகள் இயக்கத்தின் நிலை தொடர்பான கட்டுரையொன்று மார்ச் மாதம் பதினொராம் திகதி பிரசுரமாகியிருந்தது. "புலிகளின் சர்வதேச வலைப்பின்னல்; அடுத்த முக்கிய சவால்" என்ற தலைப்பில் கட்டுரை பிரசுரமாகியிருந்தது. உலகளாவிய ரீதியில் இராணுவ, பயங்கரவாத மற்றும் விடுதலை அமைப்புக்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் இந்தச் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அந்தக் கட்டுரையின் தமிழாக்கம் இங்கே பிரசுரமாகிறது. அடுத்தடுத்த வாரங்களில் கட்டுரையின் ஏனைய பகுதிகள் பிரசுரமாகும்.

# புலிகள் எதிர்கொள்ளும் சவால்கள்!

**புலிகளின்** மரபு சார்ந்த படையணி என்ற நிலையை இலங்கை இராணுவம் அழித்தொழித்துவிட்டது. தனது கட்டுப்பாட்டிலிருந்த நிலப் பகுதியையும் இழந்திருக்கும் இந்தப் பிரிவினைவாதக் குழுவுக்குப் பயங்கரவாத உத்திகள் மற்றும் கெரில்லா யுத்தம் போன்ற மரபு சாரா நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர இனி வேறு வழியில்லை. இலங்கையில் தமிழீழ இராஜ்யத்துக்கான வன்செயல் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் புலிகளின் திறன், அதன் எதேச்சாதிகாரத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிர்தப்பிப் பிழைப்பதிலும், சர்வதேச ரீதியாக நிதி சேகரிக்கும் வலைப் பின்னலைப் புலிகள் தொடர்ந்தும் தக்க வைப்பதிலுமே தங்கியிருக்கிறது.

உலகிலேயே மிகவும் வெற்றி பெற்ற மரபு சார் படைத் திறன் கொண்ட கிளர்ச்சிக் குழுக்களில் ஒன்றாக அண்மைக் காலங்களில் புலிகள் இயக்கம் இருந்து வந்துள்ளது. ஒரு சுதந்திர இராஜ்யத்தை உருவாக்கும் தனது நோக்கை ஈடு செய்யக் கூடியதாக தரைப்படை, கடற்படை, விமானப் படையைக் கூட அபிவிருத்தி செய்யும் அளவுக்கு அந்த இயக்கம் அக்கறை செலுத்தி வந்துள்ளது. இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் பெரும் நிலப் பரப்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால் மரபு சார் படையணியைத் தோற்றுவிப்பதற்குத் தேவையான முக்கிய சூழ்நிலைகளும் வளங்களும் அதற்கு இருந்தது.

புலிகள் இயக்கம் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இலங்கை அரசாங்கத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றினைச் செய்து கொண்டது. அப்போது உத்தேச தமிழீழ இராஜ்யத்தின் தலைநகரமாகக் கொள்ளப்படவிருந்தது யாழ். நகரமாகும். அது அப்போது அரசாங்கத்தின் கரங்களில் இருந்தது. இருந்தபோதும் கூட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பெரும் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. தனது படை நடவடிக்கைகளை அன்று தீவிரப்படுத்தியிருந்ததால், புலிகள் இயக்கம் தனது நிலையை ஸ்திரப்படுத்தும் போலத் தெரிந்தது.

புலிகள் இயக்கம் தமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கருதிய இரண்டு நோக்கங்களை முன்னெடுப்பதற்கு யுத்த நிறுத்த ஒப்பந்தம் சந்தர்ப்பமொன்றினை வழங்கியது. அதாவது, புதிதாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கும், சர்வதேச உறவுகளைத் திரும்ப ஏற்படுத்துவதற்கும் வாய்ப்புக்களை வழங்கியது. அமெரிக்காவில் இடம்பெற்ற 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதிய தாக்குதலுக்குப் பின்னர், புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்புகளுடனான தனது தொடர்புகளைக் கைவிட வேண்டியதாயிற்று. இதனால் வட அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடமிருந்து நிதி சேகரிப்பதில் புலிகளுக்கு இடைஞ்சல்கள் ஏற்பட்டன. இதனால் இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திரத் தொடர்புகளுக்கு எதிராக இராஜதந்திரத் தொடர்புகளைக் கட்டியெழுப்பப் புலிகள் இயக்கம் முனைந்தது. நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களின் உதவியுடன் முக்கிய ஐரோப்பிய அரசாங்கங்களுடன் புலிகள் இயக்கம் நெருங்கிய தொடர்புகளை வெற்றிகரமாக ஏற்படுத்திக்கொண்டது.

## தந்திரோபாய ரீதியான தவறான கணிப்பீடுகள்

புலிகள் இயக்கம் யுத்த நிறுத்த காலத்தில் மிக முக்கியமான கணிப்பீடுகளைத் தவறாக மேற்கொண்டது. 2005 ஆம் ஆண்டு நவம்பர் ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தமிழ் வாக்குகள் கிடைக்காமல் செய்யும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் பகிஷ்கரிப்புத் தீர்மானம் அதிலொன்று. ஐ.தே.க. உலகளாவிய ரீதியில் தாராளவாத - பழைமைவாத அரசியலுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்ததால் தமது இலட்சியங்களுக்கு அது இடைஞ்சலாக அமையுமென்று புலிகள் இயக்கம் நினைத்தது. அதேவேளை ஐ.தே.க.வுக்கு எதிரான சுதந்திரக் கட்சி தேசியவாதக் கட்சிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்ததால் அக்கட்சி சர்வதேச சமூகத்துடன் முரண்பட்டுக் கொள்ளக் கூடிய சாத்தியம் அதிகமெனப் புலிகள் கருதினர். இதனால் சுதந்திரக் கட்சியை அதிகாரத்துக்குக் கொண்டுவந்தால் தங்களின் நியாயங்களை முன்னெடுக்க உதவுமெனப் புலிகள் தீர்மானித்தனர்.




புலிகள் அமுல்படுத்திய தேர்தல் பகிஷ்கரிப்பு சுதந்திரக் கட்சி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு வழிவகுத்தது. எனினும் புலிகள் விரும்பிய வேட்பாளர் அதிகாரத்துக்கு வந்ததும், நிலைமைகள் புலிகளுக்கு எதிராக மாறத் தொடங்கின.

மஹிந்த ராஜபக்ஷ ஓர் அதிரடி நடவடிக்கையாக தனது சகோதரரைப் பாதுகாப்புச் செயலாளராக நியமித்தார். ஜனாதிபதியின் சகோதரரான கோதபயா ராஜபக்ஷ ஓய்வுபெற்ற ஓர் இராணுவ கேணலாவார். அமெரிக்காவில் வாழ்ந்து வந்த அவர், பாதுகாப்புச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் இலங்கையின் விவகாரங்களில் பொதுவான பதவி எதனையும் வகித்திருக்கவில்லை. இறுதியில் அவர் பாதுகாப்புச் செயலாளராக இருப்பதை விரும்பாத புலிகள், அவரைக் கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் லக்ஷ்மன் அல்கமவை 1999 ஆம் ஆண்டு புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியொருவர் கொன்றதைப் போன்று கோதபயா ராஜபக்ஷவையும் கொலை செய்ய முயற்சி எடுக்கப்பட்டது. சுதந்திரக் கட்சியை அதிகாரத்திலமர்த்த உதவிய தனது தவறைப் புலிகள் இயக்கம் உணர்ந்து கொண்டது. இதனால் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி கோதபயா ராஜபக்ஷவின் வாகன அணி மீது முச்சக்கர வண்டியொன்றினை ஓட்டிச் சென்று தாக்கத் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரை ஏவியது. எனினும் அந்தத் தாக்குதல் முயற்சி தோல்வியில் முடிந்தது. இதன் பின்னர் கோதபயா இறுதிவரைக்கும் புலிகளால் வெல்லப்பட முடியாத பெரும் எதிரியானார்.

கோதபயா மூன்று அம்சங்களைக் கொண்டு தனது இராணுவ உபாயத்தை மேற்கொண்டிருந்தார். இரண்டு வருட காலத்துக்குள் பாதுகாப்புப் படையினரின் பலத்தை நாற்பது சதவீதத்தால் அதிகரித்ததன் மூலம் துருப்புக்களின் எண்ணிக்கையைக் கூட்டினார். புலிகளின் ஆயுத விநியோக மார்க்கத்தை இலக்கு வைத்து, அவர்களுக்கு வழமையாகக் களவாக ஆயுதங்களை ஏற்றிவந்த ஏழு சரக்குக் கப்பல்கள் தாக்கி மூழ்கடிக்கப்பட்டன; அத்துடன் இலங்கை இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்றுக்கிடையிலான செயற்பாட்டு ஒருங்கிணைப்பில் கணிசமான முன்னேற்றங்கள் காணப்பட்டன. இவையே அந்த மூன்று அம்சங்களுமாகும். இராணுவம் முன்னேற்றகரமான சுடுகலன்களையும் நான்கு F-7GS யுத்த விமானங்கள் போன்ற தொழில்நுட்பம் சார்ந்த திறன் கொண்ட ஆயுதங்களையும் அறிமுகப்படுத்தியது. புதிய பாதுகாப்புச் செயலாளருக்கும், ஜனாதிபதிக்குமிடையிலான நெருக்கமான உறவும் இதற்கு உதவியாக அமைந்தது. ஆயுதக் கொள்வனவில் இருக்கக்கூடிய இடைஞ்சல்களை நீக்குவதற்குப் பல தடவைகள் ஜனாதிபதி வெளிநாட்டுத் தலைவர்களுடன் தொடர்புகொண்டு உதவினார்.


புலிகளிடமிருந்து புதுக்குடியிருப்புப் பகுதியில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

## யுத்தத்தில் தோல்வி

2006 ஆம் ஆண்டு பேச்சுவார்த்தைகள் பின்தள்ளப்பட்டு, யுத்தம் உக்கிரமடைந்தது. கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கு எதிரான முற்றுமுழுதான தாக்குதலாக யுத்தம் மோசமடைந்தபோது யுத்த நிறுத்தம் முறிவடைந்தது. மேலதிக வளங்களுடனும் விமானப் படை மற்றும் கடற்படையினரின் நெருக்கமான ஆதரவுடனும் இராணுவம் 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கிழக்கில் புலிகளைத் தோற்கடித்தது. இலங்கை அரசாங்கம் மிகவும் கூடிய யுத்த இழப்புக்கள் பற்றிய எண்ணிக்கைகளை மட்டுமே வெளியிட்டு வந்தது. இருந்தபோதிலும் கடந்த இரண்டு வருடங்களாக மிகத் தீவிரமாகப் பயங்கரமான மோதல்கள் இடம்பெற்று வருவதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. வட பகுதி யுத்தத்தில் இரு தரப்புகளிலுமே ஆயிரக்கணக்கில் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

2007, 2008 ஆம் ஆண்டுகளில் இராணுவம் தொடர்ச்சியாகப் பல நிலைகளையும் இடங்களையும் கைப்பற்றித் தொடர்ந்தும் ஸ்திரமாக முன்னேறி வந்துள்ளது. இந்த இராணுவ நடவடிக்கையால் 2009 ஆம் ஆண்டு ஜனவரியில் புலிகளின் நிர்வாகத் தலைநகரான கிளிநொச்சி, கடல் தலைமையகம் அமைந்திருந்த முல்லைத்தீவு, கேந்திர முக்கியத்துவம் மிக்க ஆனையிறவு ஆகியவை வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் வடகிழக்குக் கரையோரப் பகுதியிலுள்ள சிறிய நிலப் பகுதியொன்றுக்குள் இப்போது புலிகள் முடக்கப்பட்டுள்ளனர். தற்போது மக்கள் வாழும் முக்கிய பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லை. இடம்பெயர்ந்த மக்களுக்கென பாதுகாப்புப் படையினர் எல்லை நிர்ணயம் செய்துள்ள பாதுகாப்பு வலயங்களுக்குள் பெருமளவு மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

35 கிலோமீற்றர்கள் நீளமும், 2 கிலோமீற்றர்கள் அகலமும் கொண்ட முதலாவது பாதுகாப்பு வலயம் ஏ-35 பாதைக்கு வடக்காக விஸ்வமடு நகரத்துக்கும் புதுக்குடியிருப்பு நகரத்துக்குமிடையில் உருவாக்கப்பட்டது. புலிகளிடம் மிஞ்சியிருந்த பகுதிகளில் ஒன்றரை இலட்சம் மக்கள் சிக்கியிருந்தனரென மதிப்பிடப்பட்டது. இவர்கள் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் வந்து சேர்ந்தால் சுடப்படமாட்டார்களென்று கூறும் துண்டுப் பிரசுரங்களைப் பாதுகாப்புப் படையினர் விமானத்திலிருந்து போட்டனர்.

பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி பாதுகாப்புப் படையினர் முல்லைத்தீவுக்கு வடக்காக கரையோரப் பகுதியில் பாதுகாப்பு வலயத்தை மீள ஏற்படுத்தினர். ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்த மக்களையும், அவர்களுக்கு மத்தியில் மறைந்திருந்த புலிகளையும் இது மீளவும் புதிய பாதுகாப்பு வலயத்தில் குடியேற நிர்ப்பந்தித்தது. முதலாவது பாதுகாப்பு வலயத்தில் புலிகள் புதைத்து வைத்திருந்த ஆயுதங்களை எடுக்காமல் செய்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது போலத் தெரிகிறது. மக்கள் அங்கிருந்து வெளியேறியதும் ஆயுதங்களை மீளப் பெறுவதற்குப் புலிகள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் புதிய பாதுகாப்பு வலயம் அறிவிக்கப்பட்டு 48 மணித்தியாலத்துக்குள் படையினர் உள்ளே சென்று பெருந்தொகையான ஆயுதங்களையும் உபகரணங்களையும் மீட்டெடுத்தனர். நிலத்துக்குக் கீழே மூன்று மீற்றர் ஆழத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 59-1 சீன 130 மி.மீ. ஆட்டிலறித் துப்பாக்கிகள் இரண்டும் இவற்றில் அடங்கும்.

(தொடரும்)

# ஈழப்போராட்டத்தின் இரத்த சாட்சியங்கள் 107



ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள தனுவில் பகுதியில் இருந்து அரச படையினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். புலிகளின் முகாமை படையினரின் சுற்றி வளைப்பில் இருந்து காப்பாற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினர் முன்னணியில் நின்று போராடியிருந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தீவகப் பொறுப்பாளர் மனோ ஒரு காரியம் ஆற்றினார். அந்தத் தாக்குதலில் பங்கு கொண்ட ஏனைய இயக்கங்களைச் சந்தித்துப் பேசினார் மனோ.

இந்தத் தாக்குதலை ஈ.பி.ஆர்.எல்.எவ், புலிகள், ரெலோ, மற்றும் தம்பாபிள்ளை மகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ இராணுவம் ஆகிய நான்கு விடுதலை அமைப்புகளும் இணைந்தே ஐக்கியப்பட்டு நடத்தியிருந்தன. இது குறித்து விடயத்தைத் துண்டுப்பிரசுரமாக அச்சடித்து வெளியிட்டார் ஈ.பி.ஆர்.எல்.எவ். மனோ. துண்டுப் பிரசுரங்களை மக்கள் ஆவலோடு வாங்கிப் படித்தனர்.

அப்போது புலிகள் அமைப்பின் யாழ்.மாவட்ட தளபதியாக இருந்தவர் கிட்டு. கிட்டுவிற்கு இந்தத் தகவல் கிட்டிவிட்டது. இயக்கங்கள் ஒற்றுமைப்பட்டு நிற்பதாக வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம் குறித்து கிட்டு கொதித்தெழுந்தார். தம்மை விடவும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பிற்கு இதுபோன்ற தாக்குதல் சம்பவங்களால் மக்கள் மத்தியில் நல்ல பெயர் உருவாகி வருவதைப் புலிகள் விரும்பியிருக்கவில்லை.

புலிகளின் தீவகப் பொறுப்பாளர் ஞானம் அம்மானை உடனடியாக வந்து சந்திக்குமாறு உத்தரவு பிறப்பித்தார் கிட்டு. கிட்டுவிடம் இருந்து உத்தரவு வந்ததும் ஞானம் அம்மானுக்கு ஒரு விடயம் தெரிந்துவிட்டது. தனது உயிருக்குத் தனது இயக்கமான புலிகளால் ஆபத்து வரப்போகின்றது என்பதை உணர்ந்துவிட்டார்.

உடனடியாக ஈ.பி.ஆர்.எல்.எவ். தீவக அமைப்பாளர் மனோவின் முகாமிற்குத் தனது சகாக்களோடு வந்திறங்கினார் ஞானம் அம்மான். என்னை உடனடியாக முழியன் வரச்சொல்லித் தகவல் அனுப்பியிருக்கிறான். எனக்கென்றால் போனால் திரும்பி வரமாட்டன் போல் தெரிகிறது என்றார் ஞானம் அம்மான்.

கிட்டுவை ஞானம் அம்மான் முழியன் என்றுதான் எப்பொழுதும் கூறுவார். கிட்டுவை ஞானம் அம்மானுக்குப் பிடிக்காது. புலிகளின் தலைவர் பிரபாகரனின் நேரடி வழிநடத்தலில் கிட்டுதான் அப்போது புலிகள் அமைப்பை யாழ்.குடாநாட்டில் வழிநடத்திக் கொண்டிருந்தவர்.

மனோவிடம் இந்த விடயத்தைத் தெரிவித்துவிட்டு ஞானம் அம்மான் அங்கிருந்து புறப்பட்டுவிட்டார். புறப்படும் போது ஒன்றை மட்டும் தெரிவித்திருந்தார். எனது உயிருக்கு ஆபத்து வந்தது என்று அறிந்தால் அதற்குக் காரணம் கிட்டுதான் என்பதை மனோவிடம் தெரிவித்துவிட்டே சென்றிருந்தார்.

புலிகளின் தளபதியான கிட்டுவைச் சந்தித்தார் ஞானம் அம்மான். ஞானம் அம்மானைக் கண்டதும் கிட்டு சீறிப் பாய்ந்தார். ஏன்டா நீ ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்புக்கு ரவுண்ஸ் கொடுத்தாய்?... என்று தகாத வார்த்தைகளில் கண்டபடி ஏசினார் கிட்டு.

**இன்னொரு விடுதலை அமைப்பின் இருப்பையோ, வளர்ச்சியையோ புலிகள் அமைப்பினர் ஆரம்பம் தொட்டு விரும்பியிருக்கவில்லை. தாம் மட்டும்தான் போராட வேண்டும் என்றும் வேறு எந்த அமைப்பும் இருக்கக்கூடாது என்பதும்தான் புலிகளின் விருப்பம். இதுவே இறுதியில் புலிகளின் ஏகபிரதிநிதித்துவம் என்ற தனி இயக்கக் கொள்கைக்கு வழி வகுத்திருந்தது.**

அண்ணை நேவிக்காரன் உள்ளுக்கை வந்திட்டான். எங்கடை முகாமையும் சுற்றி வளைச்சிட்டான். அவங்கள்தான் களத்தில் நின்று அடிபட்டவங்கள். அதுதான் நான் ரவுண்ஸ் கொடுத்தனான் என்றார் ஞானம் அம்மான்.



ஈ.பி.ஆர்.எல்.எவ்.தலைவர் தோழர் பத்மநாபாவுடன் தோழர் டக்ளஸ் தேவானந்தா அமர்ந்திருப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.

அதற்கென்ன ஆமியோ நேவியோ வந்திட்டுப் போகட்டும். நீங்கள் முகாமை விட்டு ஓட வேண்டியதுதானே. நீ பார்த்த வேலையால் ஈ.பி.ஆர்.எல்.எவ்.க்கு மக்கள் செல்வாக்கு அதிகமாகிவிட்டது. இவ்வாறு இலாப நட்டக்கணக்குப் பார்த்து ஞானம் அம்மான் மீது துள்ளிப் பாய்ந்தார் கிட்டு.

இன்னொரு விடுதலை அமைப்பின் இருப்பையோ, வளர்ச்சியையோ புலிகள் அமைப்பினர் ஆரம்பம் தொட்டு விரும்பியிருக்கவில்லை. தாம் மட்டும்தான் போராட வேண்டும் என்றும் வேறு எந்த அமைப்பும் இருக்கக்கூடாது என்பதும்தான் புலிகளின் விருப்பம். இதுவே இறுதியில் புலிகளின் ஏகபிரதிநிதித்துவம் என்ற தனி இயக்கக் கொள்கைக்கு வழி வகுத்திருந்தது.

ஆனாலும் புலிகள் அமைப்பின் போராளிகளும் பல தியாகங்களை ஆற்றியிருக்கின்றார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் புலிகளின் தலைமை தமது போராளிகளைத் தவறாகவே வழிநடத்தியிருந்தது என்பதை குறிப்பிட்டே ஆக வேண்டும். ஞானம் அம்மான் போன்ற துணிச்சலான போராளிகளும் பலர் இருந்திருக்கிறார்கள்.

ஆகவேதான் ஞானம் அம்மான் துணிச்சலோடு ஒரு முடிவிற்கு வந்திருந்தார். தான் மக்களையும் தமது இயக்கப் போராளிகளையும் காப்பாற்றுவதற்காகவே ஏனைய இயக்கங்களுடன் இணைந்து களத்தில் நின்றிருந்த நியாயத்தைக் கிட்டுவிடம் எடுத்து விளக்கியிருந்தார். அத்தோடு தான் எடுத்த முடிவு சரியானது என்று தெரித்திருந்ததோடு இயக்கத்தில் இருந்து தான் ஒதுங்கி இருக்கப்போவதாகவும் தெரிவித்து விட்டார் ஞானம் அம்மான்.

ஞானம் அம்மானின் வீடு அரியாலையில் இருந்தது. கிட்டுவோடு நேரடியாகவே முரண்பட்டுவிட்டு ஞானம் அம்மான் அரியாலையில் உள்ள தனது வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார். ஆனாலும் கிட்டு அவரை நோட்டம் விட்டபடியே இருந்து வந்தார்.

## தேடனார்

இந்தச் சம்பவம் நடந்து இரண்டு மாதங்கள் கழித்து ஞானம் அம்மான் அரியாலையில் உள்ள தனது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவர் சைனட் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாகவே புலிகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால் உண்மையில் அவர் சைனட் அருந்த வேண்டிய காரணம் புலிகள்தான் என்றே கருதப்படுகின்றது. கிட்டுவின் உத்தரவின் பேரில் ஞானம் அம்மான் வீட்டிற்குப் புலிகள் இயக்க போராளிகள் சென்றிருந்ததாகவும், இதனால் புலிகள் தன்னைக் கொல்வதற்கு முன்னர் தானாகவே சைனட் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாகவும் பின்னர் தகவல்கள் கசிந்தன. நல்லதொரு போராளி ஞானம் அம்மான். (சாட்சிகள் - தொடரும்)

கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம் தொடர் இவ்வாரம் பிரசுரிக்கப்படவில்லை. அடுத்த வாரம் தொடரும்....

# மனித நேயர் மார்டின் லூதர் கிங்




**அதனை** ஏற்றுக்கொண்ட கறுப்பின மக்கள் அந்த இளம் பாதிரியாரின் பின்னே சென்றனர்.

1955-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாள் அன்று அந்த நிகழ்வு நடந்த இடம் **மாண்ட் கோமரி.** அமெரிக்காவின் தென் பகுதியான அலபாமா மாநிலம். அந்த இளம் பாதிரியார் வேறு எவருமில்லை, மார்டின் லூதர் கிங்தான். தேவாலய வளாகத்தில் கறுப்பர்கள் பெருந்திரளாக கூடி விவாதித்தனர். முடிவாக டிசம்பர் ஐந்தாம் திகதி பேருந்துப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கான ஏற்பாடுகள் மின்னல் வேகத்தில் நடைபெற்றன.

பேருந்துப் புறக்கணிப்புப் போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. நகராட்சிப் பேருந்துகளில் கறுப்பின மக்களில் ஒருவர்கூட ஏறி அன்றைய தினம் பயணம் செய்யவில்லை. அவர்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு நடந்தே சென்றனர். இந்தக் காட்சிகளை இளம் பாதிரியார் மார்டின் லூதர் கிங் தன் வீட்டுச் சாளரத்தின் வழியே கண்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்தார்.

வெள்ளையர்களைப் போலவே, கறுப்பின மக்களும் சம உரிமை பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்று இறைவனிடம் ஓயாமல் பிரார்த்தனை செய்துவரும் லூதர் கிங்கிற்கு அந்த அறவழி அகிம்சைப் போராட்டம் மிகுந்த மன நிறைவைத் தந்தது.

இந்தப் போராட்டம் நடைபெற்ற அதே நாளில் மற்றொரு சம்பவமும் நடைபெற்றது. அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாகக் கூறி ரோசா பார்க்ஸ் என்ற அந்தப் பெண்மணிக்கு நீதிமன்றம் பதினான்கு டாலர் அபராதம் விதித்தது. இந்த தீர்ப்பு கறுப்பின மக்களிடையே பெருங்கோபத்தை ஏற்படுத்தியது. அன்று மாலையே கறுப்பின மக்களின் கூட்டம் தேவாலய வளாகத்தில் மீண்டும் கூடி விவாதித்தது. "நகராட்சி பேருந்துகளில் தங்களுக்கு சம உரிமை வழங்கும்வரை நகராட்சிப் பேருந்துகளில் ஏறுவதில்லை" என்று முடிவு செய்தனர்.

பேருந்து புறக்கணிப்புப் போராட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் தலைவராக மாட்டின் லூதர் கிங் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டார்.

தன் மீது கறுப்பின மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை எண்ணி லூதர் கிங் மனம் நெகிழ்தார்.

> எதிர்ப்பு தெரிவிப்பதை தவிர நமக்கு வேறு வழியில்லை. பல ஆண்டுகளாக நாம் வியக்கத் தக்க வகையில் பொறுமையைக் கடைப்பிடித்துள்ளோம். ஆனால் அந்த பொறுமையிலிருந்து பாதுகாக்கப்படுவதற்காக நாம் இப்பொழுது அங்கே கூடியுள்ளோம். நாம் நமது கோரிக்கையை உறுதியாக இருந்து அகிம்சை வழியில் போராட வேண்டும். அகிம்சை, அன்பு, மூலமே நாம் வெள்ளைச் சகோதர்களின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்"" இவ்வாறு லூதர் கிங் உருக்கமாகப் பேசியதும் மக்கள் கரவொலி எழுப்பி வரவேற்றனர்.

அவர்களின் அவலநிலையை அகற்றிச் சம உரிமை பெற்றுத் தர தன்னை அர்ப்பணித்துக்கொள்ள உரிமை கொண்டார். தேவாலயப் பாதிரியான இவர், தினம்தோறும் தான் செய்யும் பிரசங்கத்துக்காகக் குறிப்பெடுப்பதில் பதினைந்து மணி நேரத்தை செலவிடுவார். அவரது சொற்பொழிவால் இயேசுவின் அன்பும் கருணையும் மனித நேயமும் நிறைந்திருக்கும். பேசுவதற்கு உரை தயாரிக்காமலே அன்று உடனே நன்றியுரை ஆற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

தேவாலயத்தில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. இடம் போதாமல் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியே சாலையில் காத்திருந்தனர். உடனே தான் பேச வேண்டிய செய்திகளை அவசரமாகக் குறிப்பெடுத்தார். பல்லாயிரக்கணக்கான மக்களிடையே உரையாற்றப் போவது மகிழ்ச்சி அளித்தாலும் மனதிற்குள் சிறிது அச்ச உணர்வும் ஏற்பட்டது.

கம்பீரமான குரலில் லூதர் கிங் உரையாற்றத் தொடங்கினார். "அன்பான நண்பர்களே! சில நேரங்களில் நம் மக்கள் மிகவும் சோர்ந்து போகும் நிலை ஏற்படுகிறது. நம்மை இது நாள் முதல் வரை மிகவும் மோசமாக நடத்தியவர்களுக்கு முக்கியமான செய்தியைக் கூறவே நாம் இங்கு கூடியுள்ளோம். நாம் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டும் அவமானப்படுத்தப்பட்டும் வருவதைக் கண்டு சோர்வடைந்து விட்டோம் என்பதைக் கூறுவதற்காகவே இங்கே கூடியிருக்கிறோம்.

அடக்குமுறையின் காட்டுமிராண்டித்தனமான கால்களால் மிதிக்கப்பட்டு, மிகுந்த பாதிப்புக்குள்ளாகிவிட்டோம் என்பதைத் தெரிவிக்கவே இங்கே கூடியுள்ளோம். எதிர்ப்பு தெரிவிப்பதை தவிர நமக்கு வேறு வழியில்லை. பல ஆண்டுகளாக நாம் வியக்கத் தக்க வகையில் பொறுமையைக் கடைப்பிடித்துள்ளோம். ஆனால் அந்த பொறுமையிலிருந்து பாதுகாக்கப்படுவதற்காக நாம் இப்பொழுது அங்கே கூடியுள்ளோம். நாம் நமது கோரிக்கையை உறுதியாக இருந்து அகிம்சை வழியில் போராட வேண்டும். அகிம்சை, அன்பு, மூலமே நாம் வெள்ளைச் சகோதர்களின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்" இவ்வாறு லூதர் கிங் உருக்கமாகப் பேசியதும் மக்கள் கரவொலி எழுப்பி வரவேற்றனர்.

நன்றி:- ஆச்சா

## முதல் வெற்றி

பேருந்து புறக்கணிப்புப் போராட்டத்தில் கறுப்பு இன மக்கள் முழு வேகத்துடன் ஈடுபட்டதற்கு என்ன காரணம்.? மிக மிக ஏழை மக்களான அவர்கள், தங்களுக்கு இருந்த ஒரே போக்குவரத்து வசதியான



பேருந்துப் பயணத்தைக் கைவிட்டு தினமும் பல மைல்கள் தொலைவு நடந்தே தீர வேண்டிய சிரம நிலையை அவர்கள் மேற்கொள்ளும்படி நேரிட்டதற்கு என்ன காரணம்?

மாண்ட் கோமரி நகரம் ஒன்றரை இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டது. அங்கு நீக்ரோ மக்கள் ஐம்பதாயிரம் பேர்வரை நகராட்சி நடத்தும் போக்குவரத்தில் பயணம் செய்கின்றனர். பயணம் செய்வோரில் எழுவது சதவீதத்தினர் கறுப்பின மக்களே. அரசாங்க வேலைகளிலும், வணிகத்திலும் அவர்கள் நுழைய முடியாது. அவர்களில் ஆண்கள் கூலித் தொழிலாளர்களாகவும், கடுபிடி வேலை செய்பவர்களாகவும் இருக்க, அவர்களின் குடும்பப் பெண்கள் வெள்ளையர்களின் வீடுகளில் வேலைக் காரிகளாகவும், சமையல்காரிகளாகவும், துப்பரவு பணி செய்வோராகவும் பணிபுரிந்து வந்தனர். (தொடரும்)

# இந்தியப் பொதுத் தேர்தலும் இலங்கைப் பிரச்சினைக்கான தீர்வும்!

**இந்தியாவின்** பாராளுமன்றத் தேர்தல் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறவுள்ளது. இதற்கான பிரசாரங்களும் தேர்தல் கூட்டணி அமைக்கும் பணிகளும் தற்போது சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. இந்தியாவின் இரு பெரும் கட்சிகளான இந்திரா காங்கிரஸும், பாரதீய ஜனதாக் கட்சியும் தமது கட்சிகளின் சார்பில் யார் பிர- தமராக முன் நிறுத்தப்படுவர் என்பதை அறிவித்துமுள்ளன. இந்திரா காங்கிரஸ் சார்பில் தற்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கும், பார- தீய ஜனதாக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் அத்வானியும் முன் நிறுத்தப்பட்டுள்ளனர்.

கட்சிகளுக்கிடையிலான தேர்தல் கூட்டணி அமைக்கப்பட்டு வரும் நிலையில் இவ்விரு பிரதான கட்சிகளுடன் கூட்டணி அமைக்காது மூன்றாவது அணி ஒன்றும் உருவாகி வருகிறது. தேர்தலில் யார் வெற்றி பெறுவர் என்பதைத் தற்போது எதிர்வு கூற முடியாத போதும் பெரும்பாலும் காங்கிரஸே மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு வாய்ப்புள்ளது என்பதை இந்திய அரசியல் அவதா- னிகள் சுட்டிக்காட்டுகின்றனர். தேர்தல் முடிவின் மூன்றாவது அணியிலுள்ள பல்வேறு கட்சிகள் இந்திரா காங்கிரஸுக்கே ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அளவில் தேர்தல் பரப்புரையின்போது, இலங்கைத் தமிழர் விவகாரம் முக்கியத்துவம் பெறப்போவதில்லை என்பது நம்மனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். தமிழகத்திலும் கூட தேர்தலில் இலங்கை விவகா ரம் அதிக முக்கியத்துவம் பெறாது. தமிழகத்தில் இலங்கைத் தமிழர் விவகாரத்தை முன்வைத்து அரசியல் நடாத்திவந்த பல கட்சிகள் தற்போது எதிரும், புதிருமான கூட்டணிக்குள் சென்றுவிட்டது. தமது கட்சிக்கு எத்தனை பாராளுமன்றத் தேர்தல் தொ- குதி ஒதுக்கப்படுகிறது என்பதே தற்போது தமிழகக் கூட்டணியின் இருப்பைத் தீர்மானிக்கக் கூடியதாகவுள்ளது.

உணவில் ஊறுகாயைச் சேர்த்துக்கொள்வதைப் போல்தான் இலங்கைத் தமிழர் விவகாரத்தை தமிழகக் கட்சிகள் இப்போது கையாளுகின்றன. தமிழகத்திலும் கூட, இலங்கைத் தமிழர் விவகாரம் இத்தேர்தலில் முக்கியத்துவப்படாதபோது இந்தியத் தேர்தலில் இலங்கைத் தமிழர் விவ- காரம் ஒரு விடயமே அல்ல. இந்திரா காங்கிரஸ் கட்சி இலங்கைத் தமி ழர் விவகாரத்தில் நீண்ட ஈடுபாடுள்ள கட்சி என்கிற வகை- யில், இலங்கை விவகாரத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்ட மாகாண ஆட்சிமுறை ஏற்படுத்த வேண்டுமென தனது கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளது. இது தேர்தலுக்கு மட்டுமான நிலைப்பாடல்ல. இந்திரா காங்கிரஸ் இந்த நிலைப்பாட்டையே தொடர்ந்தும் முன்வைத்து வருகிறது.



அண்மைக்காலமாக இந்திய அரசு, குறிப்பாக இலங்கை அரசுக்கும், புலிகளுக்குமிடையில் தீவிர யுத்தம் நடந்து கொண்டிருக்கும் சூழலில், இலங்கையில் 13ஆவது திருத்தத்திற்கு அமைய தீர்வு காணப்படும் அவசியத்தை வலியுறுத்தி வருகிறது. அரசாங்கத்திற்கும் இந்த விடயத்தில் இந்தியா தனது நிலைப்பாட்டை தெரிவித்தே வருகிறது. இந்திரா காங்கிரஸ் தனது கொள்கை அறிக்கையில் இந்த விடயத்திற்கு அதிக அழுத்தம் கொடுத்துள்ளதால் 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட மாகாண சபை தீர்வுத் திட்டத்திற்கு இந்தியா பூரணமாக முயற்சிக்கும் என்பது தற்போது உறுதியாகியுள்ளது. இந்திரா காங்கிரஸின் தேர்தல் வெற்றியூடாக இது சாத்தியப்படுமென்பதை நாம் எதிர்பார்க்கலாம்.

அண்மையில் அமெரிக்காவுக்கு இலங்கை விவகாரம் தொடர்பாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடச் சென்ற இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் சிவ்சங்கர் மேனன், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஆகியோரைச் சந்தித்ததன் பின் கருத்துத் தெரிவிக்கும் போது ''நீண்ட கால இன மோதலை முடிவுக்குக் கொண்டுவர சிறுபான்மை தமிழ் மக்களுக்கு உண்மையான அதிகாரப் பகிர்வு அவசியமெனவும், இது மக்கள் உணரக் கூடிய வகையில் இருக்க வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

கடந்த வாரம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தமிழக முதல்வர் கருணாநிதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் இலங்கையில் இதர மக்களுக்கு இணையாக உரி மைகள் அளிக்கப்படல் வேண்டுமெனவும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டுமெனவும் இலங்கை அரசை தமது அரசு வலியுறுத்திவருவதாகவும் இது தொடர்பாக பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதையும் சுட்டிக்காட்டியுள்ளதுடன், இந்திய அரசின் நிலைப்பாட்டை இலங்கை அதிபரும் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்திரா காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருமானால், 13ஆவது திருத்தத்திற்கு அமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் தீர்வு நடைமுறைக்கு வர அதிக வாய்ப்புள்ளதாகவும், வடக்கு கிழக்கு மாகாணம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு மீளக் கட்டியெழுப்பப்படும் சூழல் அமையுமென்பதையும் சமகால அரசியல் சூழல் உறுதிப்படுத்துகிறது.

**ஊரோடி**

---




# அரசியல் பழிவாங்கலில் ஆசிரியர் நியமனங்கள்

**மத்திய மாகாண** சபைக்கான தேர்தல் கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி நடைபெற்றதைத் தொடர்ந்து மத்திய மாகாணத்தின் புதிய தமிழ்க் கல்வி அமைச்சராக வே.இராதாகிருஷ்ணன் பதவியேற்றுள்ளார். பேராதனையில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் மார்ச் 7ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாகப் பதவி ஏற்றுக் கொண்ட அமைச்சருக்கு, தமிழ்க் கல்வி அமைச்சக்கு மேலதிகமாக கைத்தொழில், விளையாட்டுத்துறை, இளைஞர் மற்றும் மகளிர் விவகாரம், தோட்ட உட்கட்டமைப்பு, இந்து கலாசார அலுவல்கள், கிரா- மிய அபிவிருத்தி போன்ற ஆறு துறைகளுக்கான பொறுப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து குறித்த அமைச்சரைப் பற்றி மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது. அப்போதைய தமிழ்க் கல்வி அமைச்சராக இருந்த எஸ். அருள்சாமி மற்றும் தற்போது பொறுப்பேற்றிருக்கும் வே.இராதாகிருஷ்ணன் ஆகிய இருவருமே ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டமையே இதற்குக் காரண- மாகும். ஆரம்பம் முதல் குறித்த இருவரும் தமிழ்க் கல்வி அமைச்சைக் குறிவைத்துச் செயற்பட்டு வந்ததோடு, இவ் அமைச்சு தமக்கே வழங்கப்படும் எனவும், அதற்கான உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கிவிட்டார் என்றும் கூறி, தங்களது பிரசாரங்களை மேற்கொண்டிருந்தனர். எனினும் தேர்தல் முடிவுகளின்படி அண்ணளவாக 18,000 வாக்குகளைப் பெற்றுக்கொண்ட இராதாகிருஷ்ணன் வெற்றி பெற, அண்ணளவாக 9000 வாக்குகளைப் பெற்றுக்கொண்ட எஸ். அருள்சாமி தோல்வியைச் சந்தித்தார். இதனால் எந்தவித சங்கடங்களும் இன்றி மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சராக வே.இராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவி ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் மேற்கொண்ட உடனடி நடவடிக்கையாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 61 ஆசிரியர்களின் நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. குறித்த நியமனத்தில் முறை கேடுகள் நடைபெற்றுள்ளதாகவும், தகுதியற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ள அமைச்சர் அவர்கள், நடைபெற்றுள்ள முறைகேடுகளை ஆராய்வதற்கு ஓர் குழு அமைத்துள்ளதாகவும், தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டு மிக விரைவில் நியமிக்கப்படுவார்கள் எனவும் கூறியுள்ளார்.

மலையகத்தில் நிலவிவரும் பாரிய ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனின் பதவிக் காலத்திலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டன. இவரின் முயற்சியினால் குறித்த நியமனங்களுக்கான அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தது. எனினும், துரதிர்ஷ்டவசமான தடைகள் ஏற்படுத்தப்பட்டமையினால் சுமார் இரண்டு ஆண்டுகள் வரை இழுத்தடிக்கப்பட்ட இந்நியமனங்கள் திரு.எஸ்.அருள்சாமியின் பங்களிப்போடு 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 3179 ஆசிரிய நியமனங்களைப் பெற்றுக்கொள்வதற்காகச் சுமார் 12,000 மலையக இளைஞர், யுவதிகள் விண்ணப்பித்திருந்தனர். இவர்களுக்கு எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பன நடாத்தப்பட்டு தேவையானவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். எனி னும் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாகவும் எழுந்த குற்றச்சாட்டுக்களையடுத்து சந்தேகத்திற்கிடமான 61 நியமனங்களை இடை நிறுத்திக்கொண்ட அரசு, ஏனையவர்களுக்கு நியமனங்கள் வழங்கியிருந்தது. இதன் மூலம் மத்திய மாகாணத்தின் 1999 ஆசிரியர்களும், எஞ்சிய 1118 ஆசிரியர்களும் சப்ரகமுவ, ஊவா மாகாணங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நியமனங்களின் மீது ஆரம்பம் முதலே இவை தரமற்ற முறைகேடான நியமனங்கள் எனக் கடுமையான அதிருப்தியையும், விமர்சனங்களையும் வெளியிட்டுவரும் திரு.வே.இராதாகிருஷ்ணனின் கைகளுக்குப் பதவி செல்லுமாயின் கடுமையான நடவடிக்கைகளும், அரசியல் பழிவாங்கல்களும் அரங்கேறும் எனத் தேர்தலுக்கு முன்னரே பரவலான பேச்சுக்கள் அடிபட்டன. அதனாலேயே திரு.எஸ்.அருள்சாமி அவர்களுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்த பலர் தொடர்ந்தும் அவரே பதவிக்கு வரவேண்டும் என அக்கறை காட்டி தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டமையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. இந்நிலையில் பதவி ஏற்றிருக்கும் வே.இராதாகிருஷ்ணன் அவர்கள், நியமனம் பெற்றவர்களின் மீது கைவைப்பது சட்டச் சிக்கல்களை ஏற்படுத்தும் என்ற சூழலில் இடைநிறுத்தப்பட்டவர்களின் நியமனங்களை இரத்துச் செய்துள்ளார். இது ஓர் அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் என்றே முன்னாள் கல்வியமைச்சரின் தரப்பில் இருந்து கூறப்படுகின்றது.

எது எவ்வாறு இருப்பினும், குறைந்த பட்சம் க.பொ.த. உயர்தர சித்தியை அடிப்படை தகுதியாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட இந்த ஆசிரியர்கள் பூரணமான தகுதியுடையவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எனினும் சிறிது சிறிதாகக் கல்வியில் தலையெடுத்து வருகின்ற ஓர் சமுகத்தில் இருந்து இதற்கும் கூடிய கல்வித் தகுதியுடைய இவ்வளவு பெருந்தொகையானவர்களை எதிர்பார்ப்பதும் பொருத்தம் அற்றதாக இருக்கின்ற சூழலி- லேயே க.பொ.த. (உயர்தரம்) நிர்ணயிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. எனவே நியமனம் பெற்றுக்கொண்டவர்களின் தரத்தினை உயர்த்துவதற்குத் தேவையான பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் போன்றவற்றை ஏற்படுத்தி அவர்களை மெருகேற்ற வேண்டியது தமிழ்க் கல்வி அமைச்சரின் பொறுப்பேயாகும். இதனை முன்னாள் தமிழ்க் கல்வி அமைச்சர் ஓரளவு நடைமுறைப்படுத்தியிருந்தார் என்றே தெரிகின்றது. அவ்வாறான செயற் திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமானால் காலப் போக்கில் அனைத்து ஆசிரியர்களின் தரத்தினையும் மெருகேற்றிக் கொள்ள முடியும்.

மலையகத்தில் இருந்து கிடைத்த தகவல்களின்படி குறித்த ஆசிரியர் நியமனங்களின்போது சிற்சில முறைகேடுகள் நடைபெற்றிருக்கக்கூடும் என்றே தெரிகின்றது. அப்போதைய அமைச்சரின் கட்சி சார்பான மேதின ஊர்வலத்தைச் சிறப்பாக நடாத்த இவ் ஆசிரியர்களின் உதவியும் பெற்றுக்கொள்ளப்பட்டது. பெரும்பாலானவர்களின் மாதச் சம்பளத்தில் இருந்த ஒரு தொகையை குறித்த அமைச்சரின் சார்பில் ஆரம்பிக்கப்பட்ட கட்சிக்கு சந்தாவாக செலுத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது போன்ற பல தகவல்கள் அங்கிருந்து கிடைக்கின்றது. ஆனால் ஆசிரியர் நியமனங்களில் தனது தலையீடுகள் எதுவும் இருக்கவில்லை என்றும் அனைத்து நடவடிக்கைகளையும் கல்வித் திணைக்களத்தினரே மேற்கொண்டிருந்தனர் என்று முன்னாள் அமைச்சர் உறுதியாகத் தெரிவிக்கின்றார்.

சுமார் 3179 ஆசிரியர் நியமனங்களைப் பெற்றுக் கொள்வதாக 12000 மேற்பட்டவர்கள் விண்ணப்பித்த சூழலில், அதுவும் அரசியல் பின்னணியில் நடைபெற்ற இந்தச் செயற்பாடுகளில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை எனச் சத்தியம் பண்ணிக் கூறுவதோ அல்லது முறைகேடுகளே நடைபெறக் கூடாது என எதிர்பார்ப்பதோ மக்களை ஏமாற்றும் செயலாகவும், அரசி யல் நோக்கம் கொண்டவையாகவுமே அமையும்.

அதற்காக அவற்றை அனுமதிக்கவும் முடியாது. அதேவேளை முறைகேடுகள் நடைபெற்றிருக்குமாயின் அவற்றால் எதிர்காலத்தில் குறித்த சமுகத்திற்கு ஏதாவது பாதிப்புக்கள் ஏற்படுமாயின் அவற்றை நிவர்த்தி செய்து கொள்வதற்கான செயற்பாடுகளைச் செய்வதே சிறந்ததாக அமையும். அதை விட்டுவிட்டு எத்தனையோ எதிர்பார்ப்புகளோடு எத்தனையோ தடை- களைத் தாண்டி மலையக இளைஞர், யுவதிகள் பெற்றுக் கொண்ட நியமனங்களை ஒரேயடியாக இரத்து செய்வது என்பது வெறும் அரசியல் நோக்கம் கொண்டதாகவே புத்திஜீவிகளினால் நோக்கப்படுகின்றது.

நியமனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த இளைஞர், யுவதிகள் சென்ற வழிமுறைகள் தவ- றானவையாக இருக்கலாம். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்புகளும் இலட்சியங்களும் புறந்தள்ளப்பட முடியாதவை.

**ராஜூ**

உண்மையிலேயே இலக்கை அடைய வேண்டும் என்ற இலட்சியத்தோடு நடைமுறை சாத்தியமானது என எண்ணி தவறான வழிமுறைகளைப் பின்பற்றிய இளைஞர், யுவதிகளைத் தண்டிப்பதை விடுத்து அவர்களைத் தண்டிப்பதன் மூலம் சுயலாபங்களுக்காக அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் வெளிப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமாயின் எதிர்காலத்தில் தற்போதைய தமிழ்க் கல்வி அமைச்சரும் மலையக இளைஞர், யுவதிகளால் பழிவாங்கப்பட வேண்டிய நிலைமை தோன்றுவதைத் தவிர்க்க முடியாது.



காலையும் மாலையி லும் -பகை
காய்ந்திடு தொழில்பல பழகிவெம் போர்
நூலையும் தேர்ச்சி கொள்வோர் - கரி
நூறினைத் தனிநின்று நொறுக்கவல் லார்.

- சுப்பிரமணிய பாரதியார்



# சுயநலமும் சுயம்வரமும்

**சிங்காபுரி** எனும் நாட்டை முடியழகன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் மக்களுக்குப் பலவகைகளிலும் வரி விதித்தான். கஜானாவில் செல்வம் குவிந்துகொண்டே வந்தது.

ஆனால் அவன் அந்தச் செல்வத்தைக் கொண்டு நல்ல திட்டங்கள் தீட்டி நாட்டைச் செழிப்பாக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. அரசு ஊழியர்களுக்குத் தகுந்த ஊதியம் வழங்கவில்லை. கஞ்சத்தனத்தில் இமயமாய் இருந்தான்.

வயது ஏறிக்கொண்டே போனாலும் முடியழகன் திருமணம் செய்யவில்லை. அமைச்சர்களின் கட்டாயத்தினால் சமீப காலமாக சுயம்வரங்களுக்குச் சென்று வருகிறான்.

ஒருநாள் மங்காபுரி நாட்டிலிருந்து சுயம்வரத்தில் கலந்துகொள்ளுமாறு மன்னன் முடியழகனுக்கு ஓலை வந்தது.

அவன் அந்நாட்டு இளவரசி செந்தேவி பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். அழகான அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினான். அமைச்சர்களை அழைத்து, தான் சுயம்வரத்தில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னான். அத்துடன், "அமைச்சர்களே! நீங்கள் எல்லோரும் குதிரைகளில் மங்காபுரிக்குச் செல்லுங்கள். நான் பல்லக்கில் வந்துவிடுகிறேன். உடனே புறப்படுங்கள்" என்று அவசரப்படுத்தினான்.

"மன்னா... அங்கு செல்ல இரண்டு நாட்களாகும். உணவுக்கு என்ன செய்வது?" என்று வினவினர்.

"நமது உணவுச்சாலையில் இரண்டு நாட்களுக்கான உணவை வாங்கிச் செல்லுங்கள். வேறு பணம் எதுவும் கேட்காதீர்கள்" என்றான். இது எதிர்பார்த்த பதில்தானே என்று மன்னரைச் சபித்தபடி அமைச்சர்கள் வேண்டாவெறுப்பாக வயதான குதிரைகளில் ஏறிச் சென்றனர்.

மன்னருக்கு ஒப்பனை முடியும்போது நண்பகல் ஆகிவிட்டது. புதுமாப்பிள்ளை போலாகிவிட்ட மன்னர் பல்லக்கில் ஏறி அமர்ந்துவிட்டார்.



பல்லக்குத் தூக்கிகள் அரைவயிற்று அளவு உணவருந்தி பல்லக்கைத் தூக்கிக்கொண்டு வயல்கள், ஆறுகள் மற்றும் ஒற்றையடிப் பாதைகளில் ஓடினர்.

"பல்லக்குத் தூக்கிகளே... உங்களின் வேகம் போதாது. இப்படியே மெதுவாகப் போனால் சுயம்வரத்துக்குப் போக முடியாது. வேகமாகச் செல்லுங்கள்" என்று அவர்களை மாடுகளை விரட்டும் வண்டிக்காரனைப் போல விரட்டினான் முடியழகன். பகல் உணவு சரியாக உண்ணாததால் பல்லக்குத் தூக்கிகள் நால்வரும் சோர்வடைந்தனர்.

இரவு வந்ததும் ஒரு சத்திரத்தில் தங்கினர். இரவில் பல்லக்குத் தூக்கிகளான சோமன், இராமன், சடையன், தாளன் ஆகியோர் ஒன்று கூடினர்.

"தாளா... பகல்ல சரியா சாப்பிடலப்பா! மன்னர் சாப்பிட்டுச் சாப்பிட்டு ஓய்வெடுத்து ரொம்பவும் கனமாகிவிட்டார். தூக்கமுடியவில்லை" என்று சோமன் சோர்வாகச் சொன்னான். மற்றவர்களும் அவன் கருத்தை ஆமோதித்தபடி சத்திரத்தில் படுத்து உறங்க ஆரம்பித்தனர்.

காலையில் எழுந்து மன்னனைப் பல்லக்கில் அமர வைத்துத் தூக்க ஆரம்பித்தனர். அடிக்கடி மன்னன் அவர்களைச் சீக்கிரமாகச் செல்ல அவசரப்படுத்தவும் நான்கு பேருக்கும் கோபம் வந்தது. மன்னனிடம் கோபத்தைக் காட்ட முடியுமா? பல்லைக் கடித்துக்கொண்டு தம் பணியைச் செய்தனர்.

சற்று நேரம் ஆகியிருக்கும். உடனே ஒருவன், "மன்னா... தாளனுக்கு வயிறு வலியாம். எனக்குக் கால் வலி உயிர் போகிறது. சோமனுக்குத் தலைவலியாம். நாங்கள் நால்வரும் இந்தக் காட்டுக்குள் சென்று மூலிகைகள் பறித்து வைத்தியம் செய்து சற்று ஓய்வெடுத்து விட்டு வந்து விடுகிறோம்" என்று காட்டுக்குள் புகுந்துவிட்டனர்.

மன்னனுக்குக் கடும் கோபம். 'சரியாக மாட்டிக் கொண்டோமே! இம் முறையும் சுயம்வரம் வீணாகி விடுமே' என்று முடியைப் பிய்த்துக் கொண்டான் முடியழகன்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அவன், "மடையர்கள் சரியாகப் பழி வாங்கிவிட்டார்களே! இனி எப்படிப் பயணம் செய்வது?" என்று புலம்பிக் கொண்டிருந்தான். அப்போது-

சடாமுடியோடும், செவ்வண்ண அங்கியோடும் ஒரு முனிவர் 'நமச்சிவாய' என்ற நாமத்தைச் ஜெபித்தபடி அவனை நோக்கி வந்துகொண்டிருந்தார். அவரைப் பார்த்ததும் முடியழகனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. உடனே தனக்கு நேர்ந்த கதியை அவரிடம் விவரித்தான்.

அவன் சொன்னதை அமைதியாகக் கேட்ட முனிவர் சிரித்துவிட்டு, "மன்னா... உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்காவிட்டால் எந்த அரண்மனைப் பணியாளரும் விசுவாசத்தோடு பணிபுரியமாட்டார். அதனால்தான் பல்லக்குத் தூக்கிகள் தகுந்த தருணம் பார்த்து தங்களைப் பழிவாங்கிவிட்டனர். அதனால் நீங்கள் சுயம்வரத்துக்குச் செல்வது தடைப்பட்டுவிட்டது. அதைத் தாங்கள் உணர்ந்து இனிமேலாவது கஜானாவை நிரப்புவது மட்டுமே கடமை என்று எண்ணாதீர்கள். முதலில் நான் யாரென்று தெரியுமா? என்னிடம் ஏமாந்துவிட்டீர்களே!" என்றபடி

## பாப்பா முரசு சிறுகதை

தன் சடாமுடி வேஷத்தைக் கலைத்தார். மன்னன் ஆச்சரியப்பட்டான். அவர், முன்னாள் பல்லக்குத் தூக்கி முத்தப்பர்.

"முத்தப்பரே... எனக்குத் தகுந்த புத்தி புகட்டிவிட்டீர். இனிமேல் நமது நாடு சிறப்பாகத் திகழும். தங்களையும் என் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்கிறேன்" என்று மகிழ்வோடு கூறினான் முடியழகன். மன்னனது அறிவிப்பைக் கேட்ட முத்தப்பர் வியப்பின் எல்லைக்கே சென்றுவிட்டார். 'தான் அமைச்சரா?' என்று மனதுக்குள் மகிழ்ந்தார்.

"மன்னர் வாழ்க... அமைச்சர் முத்தப்பர் வாழ்க" என்று வாழ்த்துக் கூறியபடி பல்லக்குத் தூக்கிகள் மன்னனை நோக்கி வந்தனர்.

முத்தப்பர், "மன்னா! இந்த நால்வரும் தங்களது சம்பளம் அரைவயிற்றுக்குக் கூடப் போதவில்லை என்று என்னிடம் முறையிட்டபோது அவர்களை இந்த நாடகத்தை நடத்தும்படி நான்தான் யோசனை சொன்னேன். என்னை மன்னித்து விடுங்கள் மன்னா" என்றார். மற்ற நால்வரும்கூட மன்னனிடம் மன்னிப்புக் கேட்டனர்.

"யாரும் மன்னிப்புக் கேட்க வேண்டாம். வாருங்கள், சிங்காபுரி சென்று நல்லாட்சி அமைப்போம்" என்று மன்னன் முடியழகன் மகிழ்வோடு உத்தரவிட்டான்.

நாடு திரும்பிய அவனுக்கு இளவரசி செந்தேவியின் சுயம்வரத்தைத் தள்ளிவைத்து விட்டதாக நற்செய்தி காதில் விழுந்தது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 07.04.2009

**வர்ணம் தீட்டும் போட்டி இல.790**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 788

**பரிசுக்குரியவர்:** எம்.ஜு.இன்லாம் அஹமட், 92B, இல.104, 'ராஸ்ட் ஹவுஸ்' வோகைமு நிந்தவல்லை, மாத்தறை.

பாராட்டுக்குரியவர்கள்

1. செல்வி டா.டினேஷ்கா, விஷ்ணு கோவில் வீதி, காரைதீவு-10.
2. வை.விவு, மீள்குடியேற்றம் நொச்சிமுனை, மட்டக்களப்பு.
3. ஏ.எம்.அல்.அப்ஸர், ஓடாவியார் வீதி, ஏறாவூர்-02.
4. நிக்லஸ் அஷ்மிதா, நல்லையா வீதி, மட்டக்களப்பு.
5. K. சுகன்யா, மொல்லிகொட லேன் கம்பொளை.
6. றுக்ஷிலா பிச், சொய்சா தொடர்மாடி, மொறட்டுவ.
7. ஏ.ஜி.நி. நெத்மினி, ஸ்டேஸ் வீதி, கொழும்பு-14.
8. O.S ஹென்றி, லொயிட்ஸ் அவனியு, மட்டக்களப்பு.

# ஆத்திசூடி

## உள்ளற்க உள்ளம் சிறுகுவ

உள்ளத்தில் மாசு விளைவிக்கும் எண்ணங்களை எண்ணுதல் அறவே கூடாது.

-திருவள்ளுவர்

# பாப்பா பாட்டு

## படிக்கணும்... சிறக்கணும்!

நல்ல நல்ல புத்தகம் தேடி
நல்லாப் படிக்கணும்- அதை
நலமாய் முடிக்கணும்- உன்
உள்ளம் என்றும் இனிமை
பொங்க
உயரப் பறக்கணும்- அது
உலகில் சிறக்கணும்- இந்த
மண்ணில் உள்ள உயிர்கள்
எல்லாம்
மகிழ்ந்தே சிரிக்கணும்- உன்
மனசை விரிக்கணும்- என்றும்
கண்ணைப் போலத் தமிழைப்
போற்றி

வாழ்த்தித் துதிக்கணும்-
என்றும்
ஏற்றி மதிக்கணும்
நல்லவர் தீயவர் கலந்து
வாழும்
மண்ணைப் புரியணும்- நாளும்
உனக்குத் தெரியணும்- இந்த
மண்ணில் இருந்தே
விண்ணைத் தொடுகிற
வித்தை தெரிஞ்சுக்கணும்
நன்றாய் புரிஞ்சுக்கணும்!

# தெரிந்து கொள்ளுங்கள்

## பிரபஞ்சத்தை அறிந்த விஞ்ஞானி!

**அமெரிக்க** விண்வெளி ஆராய்ச்சியாளரான எட்வின் பி. ஹப்பிள்தான் (1889- 1953) நமது பால்வெளி வீதிக்கு அப்பால் உள்ள நட்சத்திர மண்டலங்களைக் கண்டுபிடித்தவர். பிரபஞ்சம் என்பது தொடர்ந்து விரிவடைந்து கொண்டிருக்கிறது என்றும் இவர் கண்டுபிடித்தார். பிரபஞ்சம் தோன்றியது குறித்த "பெருவெடிப்புக் கொள்கை"க்கு அடிப்படையாக அமைவது இந்த ஆய்வுதான்.



ஹப்பிளின் கண்டுபிடிப்புகளுக்கு முன்னால், விண்வெளியில் மங்கலாகத் தோன்றிய அனைத்தும் "நெபுலா" (லத்தீன் மொழியில் "மேகம்" என்று பொருள்.) என்றே அழைக்கப்பட்டன. இந்த ஹநெபுலாக்களில் பெரும்பாலானவை நமது பால்வெளி வீதிக்கு உட்பட்ட சூரியக் குடும்பம் போல நட்சத்திர மண்டலங்கள்தான் என்று ஹப்பிம் கண்டுபிடித்தார். பிரபஞ்சத்தில் அப்படி லட்சக்கணக்கான நட்சத்திர மண்டலங்கள் இருக்கின்றன.

ஹப்பிள் ஒரு விண்வெளி ஆராய்ச்சியாளர் என்று அறிந்த பலருக்கு அவர் இராணுவ வீரராகவும், வழக்கறிஞராகவும் இருந்தவர் என்பது தெரியாது.

வானவியலில் பட்டம் பெற்ற ஹப்பிள் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். ஆனால் வழக்கறிஞர் தொழில் பயிற்சியை விட்டுவிட்டு வானவியலில் முனைவர் பட்ட ஆராய்ச்சியில் இறங்கினார். அவர் ஆராய்ச்சியை முடிக்கும்முன்பே ஜெர்மனி மீது போர் தொடுப்பதாக அறிவித்தது அமெரிக்கா. 1919-ஆம் ஆண்டு வரை அமெரிக்க இராணுவத்தில் பணிபுரிந்த ஹப்பிள், கலிபோர்னியாவில் உள்ள மவுண்ட் வில்சன் விண்வெளிக் கண்காணிப்பகத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அப்போது அங்கு விண்வெளியை ஆராய்வதற்கு உலகிலேயே மிகப் பெரிய தொலைநோக்கி அமைக்கப்பட்டிருந்தது. அங்குதான் பிரபஞ்சம் பற்றிய பல முக்கியமான கண்டுபிடிப்புகளை ஹப்பிள் நிகழ்த்தினார்.

ஹப்பிள் இன்று இல்லாவிட்டாலும் அவரது பெருமையைப் பறைசாற்றும்விதமாக ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

# விடுகதை

1. சுமக்கத் தெரிந்த அண்ணன் அவர் கூடவே உதைக்கவும் தெரிந்தவர்; இவர் யார்?
2. சுடும் போதும் சாகாதவன் ஆனால் தடுக்கி விழுந்தால் இறந்து விடுவான். இவன் யார்?
3. சுள்ளென்று இவன் இருப்பான். சோற்றுக்கு நல்ல சுவை ஊட்டுவான்; இவன் யார்?
4.சுற்றிச் சுற்றிச் சுழல்வான்; வீரவிளையாட்டிற்கு இவன் பேரைச் சொல்வார்; இவன் பெயரென்ன?
5.சுற்றும் போது மட்டும்தான் இவன் சுகம் தருவான். சுற்றாமல் நின்றாலோ நமக்கு வேதனைதான். இவன் யார்?
6.சுற்றிவிட்டால் இவன் சுழன்று சுழன்று ஆடிடுவான். இவன் யார்?
7.சுடுபட்டுச் சிவந்தவன் இவன் வீடுகட்ட உதவுவான். இவன் யார்?
8.செடியைச் சுற்றிலும் செந்துருக்கம்; இது என்ன?
9. செடியில்லாமல் சிரிக்கும் பூ காய்க்காமலே கனிந்த பூ- என்ன பூ?
10.செடியில் விளையாத பஞ்சு தறியில் நூற்காத நல்ல நூல் கையால் தொடாத துணி; இது என்ன?

விடுகதை
விடைகள்
1. கழுதை
2. மண் பானை
3. ஊறுகாய்
4. சிலம்பாட்டம்
5. மின்விசிறி
6. பம்பரம்
7. செங்கல்
8. மிளகாய்ப்பழம்
9. உப்பு
10. சிலந்தி வலை




# 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

## மாதிரி வினாத்தாள் -II •(கடந்த வாரத் தொடர்ச்சி)

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

கடந்த மாதம் அமலனின் தாயும் தந்தையும் தமது வீட்டுக்குப் பொருட்கள் வாங்கி வந்த போது கிடைத்த இரண்டு பற்றுச்சீட்டுகளிலிருந்து பெற்ற விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து இல. 48 முதல் 61 வரையிலான வினாக்களுக்கு விடை அளிக்குக.

க.மு.சேகர் அன் சன்ஸ்
மதுரங்குளி
திரு.இராசரத்தினம் அவர்கள் 1999.06.10

| அளவு | விபரம் | காசு | |
|---|---|---|---|
| | | ரூபா. | சதம் |
| 750 கிராம் | மாசி | 250 | 00 |
| 3 லீற்றர் 500 மி.லீ | தேங்காய் எண்ணெய் | 175 | 00 |
| 04 போத்தல் | வினாகிரி | 320 | 00 |
| 650 மி.லீற்றர் | மண்ணெய் | 6 | 50 |
| 2 கி. கிராம் 250 கிராம் | பருப்பு | 99 | 00 |
| 5 பைக்கற் | பிஸ்கட் | 80 | 00 |
| | | 930 | 50 |

நாதன் ரெக்ஸ்ரைல்ஸ்
பிரதான வீதி, அனுராதபுரம்,
திருமதி லீலா இராசரத்தினம் 1999.06.12

| அளவு | விபரம் | காசு | |
|---|---|---|---|
| | | ரூபா. | சதம் |
| 1 மீற். 50 செ.மீ. | நிறப் பப்ளின் | 63 | 00 |
| 02 | படுக்கை விரிப்பு | 318 | 00 |
| 06 | சேர்ட்டுக்கள் | 1296 | 00 |
| 04 மீற். 50 செ.மீ | சீத்தை | 252 | 00 |
| 75 செ.மீற்றர் | இறேந்தை | 12 | 00 |
| 01. மீற்றர் 50 சென்ரி மீற்றர் | இலாக்ஸ்ரிக் நாடா | 16 | 50 |
| | | 1957 | 50 |

48. பொருட்களை வாங்கி வருவதற்காக அம்மா செலவு செய்த மொத்தப் பணம் எவ்வளவு என்பதை சொற்களில் எழுதுக.

..............................................................................................................

49. பொருட்களை வாங்கி வருவதற்காக அப்பாவைவிட அம்மா எவ்வளவு பணம் அதிகமாகச் செலவு செய்துள்ளார்? ரூபா .................. சதம் ..............

50. 1 லீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை எவ்வளவு? ரூபா .................. சதம் ..............

51. ஆறு பிஸ்கட் பைக்கற்றுக்களை விலைக்கு வாங்கிட எவ்வளவு பணம் செலவு செய்ய வேண்டும்? ரூபா .................. சதம் ..............

52. மூன்று போத்தல் மண்ணெண்ணெய் வாங்கப்பட்டிருந்தால் எவ்வளவு பணம் செலவாகியிருக்கும்? (1 போத்தல் = 650 மி.லீ) ரூபா .................. சதம் ..............

53. 500 கிராம் பருப்புக்கு எவ்வளவு பணம் செலவாகும்? ரூபா .................. சதம் ..............

54. அம்மா ஐந்து மீற்றர் நிறப் பப்ளின் விலைக்கு வாங்கினரெனில் அதற்காக செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு? ரூபா .................. சதம் ..............

55. 1 1/2 போத்தல் வினாகிரியும் 1 கி. கிராம் 500 கிராம் பருப்பும் வாங்க எவ்வளவு பணம் தேவை? ரூபா .................. சதம் ..............

56. படுக்கை விரிப்பு ஒன்றும், இரண்டு சேர்ட்டுக்களும் 1 மீற்றர் சீத்தையும் விலைக்கு வாங்கும்போது எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்? ரூபா .................. சதம் ..............

57. 2 மீற்றர் இறேந்தையும், 2 மீற்றர் 50 செ.மீற்றர் இலாஸ்ரிக் நாடாவும் விலைக்கு வாங்கும்போது 100 ருபா தாளொன்றைக் கொடுத்தால் மிகுதிப் பணமாக எவ்வளவு கிடைக்கும்? ரூபா .................. சதம் ..............

58. ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை 10 ருபாவினால் குறையுமாயின் ஆறு லீற்றர் தேங்காய் எண்ணெய் வாங்கிட எவ்வளவு பணம் தேவை? ரூபா .................. சதம் ..............

59. படுக்கை விரிப்பொன்றின் விலை 15 ருபாவினால் கூடினால் ஆறு படுக்கை விரிப்புக்களை வாங்கிடத் தேவைப்படும் பணம் எவ்வளவு? ரூபா .................. சதம் ..............


60. அடுத்த மாதத்தில் நாதன் ரெக்ஸ்ரைல்ஸில் விலைக்கு வாங்கிய பொருட்களுக்காக அம்மா ரூ. 2525 கொடுக்க வேண்டியிருந்தது. அவர் அதில் 4/5 பங்கை மட்டும் செலுத்தினார். அப்படியானால் அம்மாவினால் செலுத்தப்படாத பணம் எவ்வளவு? ரூபா .................. சதம் ..............

61. அப்பா அடுத்த மாதத்தில் விலைக்கு வாங்கிய பொருட்களின் பெறுமதி ரூ. 4240 ஆகும். அதனை 8 மாதங்களில் தவணை முறையில் கட்டிட அப்பா இணங்கினார். முதல் இரண்டு மாதங்களிலும் அப்பா செலுத்த வேண்டிய பணத்தின் கூட்டுத்தொகை எவ்வளவு? ரூபா .................. சதம் ..............


நாம் வாழும் சூழலில் நடைபெறுகின்ற காணமுடிகின்ற சம்பவங்கள் சில கீழேயுள்ள அட்டவணையின் முதலாவது கூட்டில் காட்டப்பட்டுள்ளன. அச்சம்பவங்களினால் ஏற்படும் பெறுபேறுகள் மூன்றாவது கூட்டில் (தொடர் ஒழுங்கில்லாமல்) காட்டப்பட்டுள்ளன. முதலாவது கூட்டில் குறிப்பிடப்படும் சம்பவங்களுக்குப் பொருத்தமான விடையை மூன்றாவது கூட்டிலிருந்து தெரிந்து அதற்குரிய இலக்கத்தை இரண்டாவது கூட்டில் புள்ளிக் கோட்டில் எழுதுக. (உமது வசதிக்காக முதலாவது வரிசை பூரணப்படுத்தப்பட்டுள்ளது.)

| சம்பவம் | சரியான விடைக்குரிய இலக்கம் | பெறுபேறுகள் |
|---|---|---|
| காற்றில் எப்போதும் தூசு சேர்தல் | 2 | (1) நீர் ஒன்று சேர்தல் |
| 62. நீரினால் கழுவுண்டு போவதால் சிறு மண் பகுதி வெளியேறுதல் | ........................ | (2) சிறு மண் படிவு சேர்தல் |
| 63. இற்றுப்போகின்ற மரப் பகுதிகள் மண்ணோடு சேர்தல் | ........................ | (3) தீங்கு விளைவிக்கும் சிறு உயிர்கள் வெளியேற்றப்படல் |
| 64. நீர் மட்ட உயரத்தைக் கூட்டுதல் | ........................ | |
| 65. பயற்றம் விதைகள் சில நீரில் ஊற விடப்படல் | ........................ | (4) குறிப்பிட்ட அளவு நீர்மட்டம் பாத்திரத்தின் மேல் உயர்தல் |
| 66. வயலில் தென்னோலை மட்டை, மரக்கட்டைகளை நாட்டுதல் | ........................ | (5) குருவிகள் வருகை குறைதல் |
| 67. மரமொன்றின் பெருந்தொகையான இலைகளை பொலித்தீன் பையினால் மூடி சில மணித்தியாலங்களுக்கு கட்டி வைத்தல் | ........................ | (6) வெப்பத்தை உணர்தல் |
| | | (7) சரளைக்கல் உருவாதல் |
| 68. காய்ந்த செங்கல் ஒன்றை நீருள்ள வாளியில் ஆழ்த்துதல் | ........................ | (8) நீர்ச் சக்கரத்தின் வேகம் கூடுதல் |
| 69. இரசாயனப் பசளை இட்டபின்பு நீர் ஊற்றாதிருத்தல் | ........................ | (9) தாவரம் வாடிப் போதல் |
| 70. வயல்களில் வெள்ளைத் துணித் துண்டுகளைத் தொங்கவிடல் | ........................ | (10) கன்றுகள் உருவாகுதல் |
| 71. சிறிதளவு சுண்ணாம்பை பாத்திரமொன்றிலிட்டு அதில் குளிர் நீரை விட்டுப் பாத்திரத்தை கையால் பிடித்துப் பார்த்தல் | ........................ | (11) நீர் குளிர்ச்சி அடைதல் |
| | | (12) மண் கறுப்பு நிறமாதல் |


கீழ்வரும் ஒவ்வொரு சொல்லிலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எழுத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.




Toothbr_sh (72) ..........................................



Spo_n (73) ..........................................



Bicy_le (74) ..........................................



Tr_e (75) ..........................................

"நான் ஒரு சிங்க இராஜா ................ " எனும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும் அமைதல் வேண்டும்.

..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

### வினாத்தாள் II இற்கான விடைகள்

48. ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஏழு ருபா ஐம்பது சதம்
49. ரூபா 1027
50. ரூபா 50
51. ரூபா 96
52. ரூபா 19.50
53. ரூபா 22
54. ரூபா 210
55. ரூபா 186
56. ரூபா 647
57. ரூபா 40.50
58. ரூபா 240
59. ரூபா 1044
60. ரூபா 505
61. ரூபா 1060
62. 7 (சரளைக்கல் உருவாதல்)
63. 12 (மண் கறுப்பு நிறமாதல்)
64. 8 (நீர்ச் சக்கரத்தின் வேகம் கூடுதல்)
65. 10 (கன்றுகள் உருவாதல்)
66. 3 (தீங்கு விளைவிக்கும் சிறு உயிர்கள் வெளியேற்றப்படல்)
67. 1 (நீர் ஒன்று சேர்தல்)
68. 4 (குறிப்பிட்டளவு நீர் மட்டம் பாத்திரத்தில் மேல் உயர்தல்)
69. 9 (தாவரம் வாடிப் போதல்)
70. 5 (குருவிகள் வருகை குறைதல்)
71. 6 (வெப்பத்தை உணர்தல்)
72. u (Tooth brush)
73. o (Spoon)
74. c (Bicycle)
75. e (Tree)
76. - 80 (வாக்கியங்களை அமைக்கவும்)



விஜயகாந்த் - மீராஜாஸ்மின்
மரியாதை

## மினிசினி

தனக்கும், ரம்யா கிருஷ்ணனுக்குமிடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை எனக் கூறியுள்ளார் த்ரிஷா.

முதன் முறையாக இயக்குநர் சொல்வதை மட்டும் கேட்டு அவருடைய பணிகளில் தலையிடாமல் "விண்ணைத் தாண்டி" படத்தில் நடித்து வருகிறார் சிம்பு.

நடிப்பில் மட்டுமல்ல கவர்ச்சியிலும் தன்னால் தேசிய விருது வாங்க முடியும் என விளம்பரம் செய்கிறார் ப்ரியாமணி.

சாமி இயக்கிவரும் "சரித்திரம்" படம் அறுபதுகளில் இருந்து தொண்ணூறு வரையான காலகட்டத்தைப் பிரதிபலிக்கின்றதாம்.

தான் நடித்துவரும் படங்களைப் பற்றி ஏடாகூடமாக விமர்சித்து தயாரிப்பாளர் சங்கத்தின் கடும் எச்சரிக்கைக்கு ஆளாகியிருக்கிறார் ஜெய்.



அனுஷ்கா
அருந்ததி

# படப்பிடிப்பில் மனைவி

பா.விஜய் தற்போது ஞாபகங்கள் என்ற படத்தில் நாயகனாக நடித்து வருகிறார். படப்பிடிப்பு ஊட்டியில் நடந்து வருகிறது. கலைஞரின் கை வண்ணத்தில் உருவான தாய் காவியம் படத்தில் நாயகனாக நடிக்க முடிவெடுத்து படப்பிடிப்புக்கும் போனார்கள். என்ன பிரச்சினையோ? படம் நகரவில்லை. அப்படியே அந்த திட்டத்தை கைவிட்டு விட்டு ஞாபகங்கள் படத்தில் நடிக்க வந்துவிட்டார் பா.விஜய். இப்படத்தில் ஸ்ரீதேவிகா பா.விஜய்க்கு ஜோடியாக நடிக்கிறார். சினிமா பின்னணியில்லாத மனைவி இதை எப்படி எடுத்துக் கொள்வார்? சினிமா என்றால் கட்டிப்பிடித்து ஆட வேண்டியிருக்குமே? போன்ற கேள்விகளுக்கு, கவிஞர் சொன்ன ஒரே பதில், "என் மனைவி என்னைப் புரிந்தவர்!" இந்த நம்பிக்கை ஒரு புறம் இருந் தாலும், வேறு சந்தேகங்களுக்கு இடம் தராத வகையில் படப்பிடிப்புக்கு மனைவியையும் அழைத்து வந்து விடுகிறாராம்.

# நமீதாவை நசுக்கிய ரசிகர்கள்!

மலையாளம் படமான பிளாக் ஸ்டாலியனுக்காக கேரளாவுக்கு ஷூட்டிங் போயிருந்த நமீதாவை ரசிகர்கள் மொய்த்து எடுத்துவிட்டனராம். நமீதா நடித்த கவர்ச்சிகரமான தமிழ்ப் படங்கள் மூலம் கேரளாவிலும் நமீதாவுக்கு எக்கச்சக்க ரசிகர்கள். இந்த நிலையில் பிளாக் ஸ்டாலியன் என்ற மலையாளப் படத்தில் நடித்து வருகிறார் நமீதா. பிரமோத் பப்பன் இயக்குகிறார். கலாபவன் மணிதான் நாயகன். இப்படத்திற்காக பெரும் தொகையை அவருக்குச் சம்பளமாக கொடுத்துள்ளனராம். சமீபத்தில் அதிராம்பள்ளி பகுதியில் ஷூட்டிங் நடந்துள்ளது. அங்கு நமீதா வந்திருப்பதைக் கேள்விப்பட்டு நூற்றுக்கணக்கான ரசிகர்கள் திரண்டோடி வந்துள்ளனர். நமீதாவை கிட்டப் போய்ப் பார்க்க ரசிகர்கள் முண்டியடித்ததால், அவருக்கு படப்பிடிப்பு முடியும் வரையில் பலத்த பாதுகாப்பு அளித்துள்ளனர். ஆனால் அதையும் தாண்டி பொங்கிப் பெருகி விட்டனர் ரசிகர்கள். நமீதாவை முற்றுகையிட்ட ரசிகர்களிடமிருந்து அவரை அரும்பாடுபட்டு மீட்டனராம். இருந்தாலும் இதனால் நமீதா அப்செட் ஆகவில்லையாம். மாறாக தன் மீது ரசிகர்கள் வைத்துள்ள அன்பைப் பார்த்து நெகிழ்ந்து போய்விட்டாராம்.



கோபிஷாந்த் - பாவனா சுப்ரமணியம்

# சென்னையில் விருது

தெலுங்கு வருட பிறப்பான யுகாதியை முன்னிட்டு சென்னையில் பிரமாண்ட விழா ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறது ஸ்ரீகலா சுதா தெலுங்கு அசோசியேஷன். இந்த முறை சிறந்த பட விருதை அருந்ததிக்கு வழங்குகிறார்கள்.

சிறந்த நடிகர் தருண், சிறந்த நடிகை பூமிகா, சிறந்த பின்னணிப் பாடகி சுனிதா, சிறந்த இயக்குநர் ஜகரல்லாமுடி ராதாகிருஷ்ணா என்று பட்டியல் நீள்கிறது. புதுவருடக் கொண்டாட்டத்தை விட்டுவிட்டு சென்னைக்கு வருவார்களா என்றால், "இந்த விருது பெருமைக்குரிய விருது என்பதால் கட்டாயம் வருவாங்க. ஒவ்வொரு வருடமும் தவறாம வந்து கொண்டே இருக்காங்க" என்றார் இந்த அமைப்பின் செயலாளர் பிரசாத்.

# பள்ளிப் பருவக் குதூகலம்

லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் சார்பில் அவரது சகோதரர் சுபாஷ் சந்திரபோஸ் தயாரித்திருக்கும் படம் பட்டாளம். விஜய் தொலைக் காட்சியின் கனாக் காணும் காலங்கள் தொடரை இயக்கிய ரோஹன் கிருஷ்ணா பட்டாளத்தை இயக்கியுள்ளார். 13 முதல் 18 வரையான பள்ளிப் பருவத்தின் குதூகலம், கோபம், விளையாட்டு, காமம், காதல் என சகல விஷயங்களும் அடங்கியது இந்தப் பட்டாளம். பள்ளி ஒன்றின் நிர்வாகியாக இதில் நடித்துள்ளார் நதியா. அவர் மாணவர்களின் பிரச்சினைகளை மனோரீதியாக அணுகி தீர்ப்பதே படத்தின் கதை. ரோஹன் கிருஷ்ணாவின் மனைவி ஷ்பா ரோஹன் படத்தின் கதையை எழுதியிருக்கிறார். படத்தில் நதியாவின் உடைகளை வடிவமைத்தவரும் இவரே. நதியா தவிர படத்தில் நடித்திருப்பவர்கள் பெரும்பாலும் மாணவர்கள். சென்னையிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ரோஹனின் அசிஸ்டெண்டுகள் ஏறி இறங்கி, இவர்களைத் தேர்வு செய்துள்ளனர். ஜாஸி கிஃப்ட் படத்துக்கு இசையமைத்துள்ளார். நா.முத்துக்குமார் வரிகளில் இவர் இசையமைத்த பனி விழும் காலமா பாடலை கொடைக்கானலில் படமாக்கியுள்ளனர். நா. முத்துக்குமாருடன் யுகபாரதி, நெல்லை பாரதி ஆகியோரும் பாடல்கள் எழுதியுள்ளனர்.





Shrishanth (Rejoy) 06.04.2009

சுவிஸில் வசிக்கும் பரன்தாமன் (பரன்) - சுபானி தம்பதியரின் செல்வப் புதல்வன் Shrishanth (Rejoy) தனது 4ஆவது பிறந்தநாளை சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் 06.04.2009 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா மற்றும் இந்தியாவில் வசிக்கும் அப்பம்மா, தனுசா அக்கா, அஜி சித்தப்பா மற்றும் இந்தியாவில் வசிக்கும் பற்குணம் பெரியப்பா, ராஜி பெரியம்மா, தனுராஜ் அண்ணா மற்றும் சுவிஸில் வசிக்கும் அலஸ்ரன் மாமா, மாலினி அத்தை, மச்சாள்மார்கள் ராபி, றோயல், றொனால் மற்றும் சுவிஸில் வசிக்கும் லோகன் மாமா, ரஞ்சி அத்தை மச்சான்மார்கள் ஆரோன், சாரோன் மச்சாள் ஒமேகா மற்றும் சுவிஸில் வசிக்கும் கஜன் சித்தப்பா, சித்தி மற்றும் சுவிஸில் வசிக்கும் குமரன் மாமா, நளினி அத்தை, மச்சான் மினகல் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் இவரை கர்த்தர் துணை கொண்டு பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்துவோர்:

T.P:-0438182330 / 31 / 32
(Fax) 0764004747

Indian Music Today Zurich
நிறுவனத்தினர் Swiss

# வாழ்நாள் சாதனை

பாடகர், நடிகர், இசையமைப்பாளர், தயாரிப்பாளர் என எஸ்.பி.பி.க்கு பல முகங்கள். ஆனாலும், பாடகராக அவர் சென்ற தொலைவு பிரமிக்கத் தக்கது. இன்றுவரை பாடிக் கொண்டிருக்கும் இவர் இது வரை ஏறக்குறைய நாற்பதாயிரம் பாடல்கள் பாடியிருக்கிறார். இதுவொரு கின்னஸ் சாதனை. 2001 இல் வழங்கப்பட்ட பத்மஸ்ரீ, சில தேசிய விருதுகளைத் தவிர்த்து அவரது பெருமை பெரிதாக கொண்டாடப்பட்டதில்லை. இந்நிலையில் தெலுங்கு அசோஸியேஷன் ஆஃப் நார்த் அமெரிக்கா வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு எஸ்.பி.பி.யைத் தேர்வு செய்துள்ளது.



# திரை விமர்சனம் - அருந்ததீ

அனுஷ்காவின் வீரத்தையும், ஆந்திரா காரத்தையும் நிரப்பிக்கொண்டு வந்திருக்கிற படம். ஆவி, பிசாசு, அமானுஷ்யம் என்று மிக்சியில் அடித்து "இரத்த ஜூஸ்" கொடுக்கிறார்கள். அடிக்கிற ஏசியிலும் வியர்த்துக் கொட்டுகிறது. ஆங்கிலப் படங்களுக்கு சவால் என்று சவடால் விடுகிறவர்களுக்கு மத்தியில், நிஜமாகவே சவால் விட்டிருக்கிறார் இயக்குநர் கோடி ராமகிருஷ்ணா. யாருக்கும் அடங்காத ஒருவனை தனது வாள் வீச்சில் வீழ்த்தி வீட்டிற்குள்ளேயே சமாதி கட்டுகிறாள் சமஸ்தான இளவரசி அருந்ததீ. குற்றுயிரும், குலை உயிருமாக கிடக்கிறவன் உள்ளேயே ஆவி ரூபத்தை அடைந்தாலும், அருந்ததீயை பழிவாங்க. போகிற வருகிறவர்களை நள்ளிரவில் அழைத்து சமாதியை உடைக்க சொல்கிறான். அவளோ, மீண்டும் பிறப்பெடுத்து வருகிறாள். சமாதியை உடைத்துக் கொண்டு வெளியே வருகிற காமுகனும், சக்தியை திரட்டி அவனை தீர்த்துக் கட்ட முனையும் அருந்ததீயும் க்ளைமாக்சில் அனல் பந்துகளாக மோத கிடுகிடுக்கிறது தியேட்டர். படம் முடிந்து வெளியே வந்த பின்னும் பின்னாலேயே விரட்டுகிறது "பொம்மாயீப்ப்ப்ப்ப்..." என்ற பயங்கர குரல்!

அனுஷ்கா, பூச்சட்டி ரோஜாவாக சில காட்சிகளும், தீச்சட்டி நெருப்பாக பல காட்சிகளுமாக அருந்ததீயாக வரும், அனுஷ்காவின் நடிப்பு கிரேட் கிரேட்! இந்த ஆத்மாவாக நடித்திருக்கும் சோனு சூட், பார்க்கவே பயங்கரம். அதிலும் இலரது வில்லத்தனங்கள் வெந்த புண்ணில் வேதனையைத் திணிக்கிறது. நல்லவராக நடித்திருக்கிறார் சாயாஜிஷிண்டே. கடைசிவரை போராடி ஆவியைக் கொல்ல உதவுகிறார். ஒளிப்பதிவாளர் செந்தில் குமாரும், விஷ்வெல் எபெக்ட்ஸ் ராகுல் நம்பியாரும் படத்திற்கு இன்னும் திகில் சேர்த்திருக்கிறார்கள். பின்னணி இசை மிரட்டல். ஒட்டுமொத்தத்தில் திரையரங்கை அதிரவைக்கிறது அருந்ததீ.




## சொல்லி அடிக்குமா கோவா?

**கடந்த** சில வாரங்களுக்கு முன்பே துவங்க வேண்டிய கோவா படம், ஜெய் "கட்டையை" போட்டதால் நொண்டியடித்துக் கொண்டிருந்தது. இப்போது கொஞ்சம் முன்னேற்றம்! படப்பிடிப்பிற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கோவாவில் வில்லியாக நடிக்கப் போகிறார் ஸ்நேகா. நெகட்டிவ் ரோல்களில் நடித்தால்தான் மார்க்கெட்டில் நிற்க முடியும் என்று சில முக்கிய ஹீரோக்கள் எக்குத்தப்பான கதைகளுக்கு வலை வீசிக் கொண்டிருக்க, ஹீரோயின்களும் இப்படி இறங்கியிருப்பதுதான் ஆச்சரியம். உயிர் படத்தில் நடித்ததால்தான் சங்கீதாவுக்கு மார்க்கெட். இப்போதும் படையப்பா என்றால் ரஜினிக்கு முன்னாடி நிற்பவர் ரம்யாகிருஷ்ணன்தான். இனிமேல் "கோவா" என்றால் ஸ்நேகா நினைவுக்கு வரவேண்டும் என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.




## நமீதாவின் ஒத்துழைப்பு

**வைகை** படத்தின் ஆடியோ வெளியீட்டு விழா கலர்புல்லாக இருந்தது. அதில் படப்பிடிப்பாளர்களுக்கு தீனி போட வந்திருக்கும் நமீதாவை மேடைக்கு அழைக்கிறோம் என்றார் தொகுப்பாளர் அமலன். சொன்ன மாதிரியே அவரை சூழ்ந்து கொண்ட புகைப்படக்காரர்கள் வளைத்து வளைத்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். சளைக்காமல் வளைந்து வளைந்து போஸ் கொடுத்தார் நமீதா! அந்தப் படப்பிடிப்பு சில நிமிடங்கள் சென்றது. "மொதல்ல எங்கக்கா நமீதாவுக்கு வணக்கம் சொல்லிக்கிறேன்" என்று தனது உரையை ஆரம்பித்தார் கஞ்சா கறுப்பு. இந்த படத்திலே நடிக்கனும்னு எங்கிட்ட கதை சொல்ல வந்தாரு டைரக்டரு. வைகை ஆறு, மதுர வீதின்னு அவரு சொல்ல, எங்க ஊரு ஞாபகம் வந்திரிச்சி. எவ்வளவு நாளு வேனும்னாலும் கால்ஷீட் தர்றேன்னு சொல்லிட்டேன்" என்றார் கறுப்பு. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலைங்கிற மாதிரி ஆறாவதா வைகையையும் சேர்த்திருக்காரு டைரக்டர். காதலும் காதல் சார்ந்த இடமும்னு அவர் சொல்லியிருப்பது ரொம்ப அழகா இருக்கு என்று பாராட்டினார் வசனகர்த்தா ஈ.ராமதாஸ்.

## இறுதி நம்பிக்கை!

**இந்திக்குப்** போயுள்ள ஷ்ரியா அங்கு தொடர் தோல்விகளைக் கொடுத்ததால் இராசியில்லாத நாயகிகள் வரிசையில் சேர்ந்துவிட்டார். ஷ்ரியா கடைசியாக நடித்து வெளிவந்த மிஷன் இஸ்தான்புல் பெரும் தோல்விப் படமாகியுள்ளது. இப்போது ஷ்ரியா கைவசம் உள்ள ஒரே நம்பிக்கை ஏக்- தி பவர் ஆப் ஒன் என்ற படம்தானாம். இதுவும் கைவிட்டு விட்டால் ஷ்ரியாவை இந்தியில் தேட வேண்டியிருக்கும் என்கிறார்கள். எனினும், ஷ்ரியாவுக்கு தமிழில் கந்தசாமி, ஜக்குபாய், குட்டி, தோரணை, சிக்குபுக்கு என ஏகப்பட்ட படங்கள் கைவசம் உள்ளதாம்.



## கமலின் விவகாரமான ஆலோசனை!

**இயக்குநர்** சசிகுமாரின் அடுத்த படம் பசங்க. ஆனால் இந்தப் படத்தை இவர் இயக்கவில்லை. சிறுவர்களை மையப்படுத்தி எடுக்கப்படும் இந்தப் படத்தை இயக்குநர்கள் சேரன், தங்கர்பச்சான் ஆகியோரிடம் உதவி இயக்குநராக இருந்த பாண்டிராஜ் இயக்குகிறார்.

படத்தின் பாடல்கள் மற்றும் முன்னோட்டம் படம் வெளியீட்டு விழா, சென்னை சத்யம் தியேட்டரில் நடந்தது. பாடல்களை, இசைமேதை பாலமுரளிகிருஷ்ணா வெளியிட, கலைஞானி கமல்ஹாசன் பெற்றுக்கொண்டார். டிரைலரை கமல்ஹாசன் வெளியிட, இயக்குநர் அமீர் பெற்றுக்கொண்டார். விழாவில் கமல் பேசியபோது, "என் படங்களைப் பார்த்துதான் புதிதாக வருகிறவர்கள் படம் எடுப்பதாக," அமீர் பேசும்போது சொன்னார். இதை, என் தகுதிக்கு மீறிய பாராட்டாகவே எடுத்துக்கொள்கிறேன். என்னைவிட நல்ல நல்ல படங்களை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல படங்களை அடையாளம் காண, செக்ஸ் படங்களையும் தரம் பிரித்து அனுமதிக்க வேண்டும் என்றார்.

## பின்னணியில் நடிகை?

**அசின்** விவகாரத்திலே போலிஸில் புகார் கொடுத்த கடலை வடிவிடம், "உன் பையன் இருக்கிற இடம் உனக்குத் தெரியும். சொல்லு" ன்னு மிரட்டுறாங்களாம். பையன் மும்பையில் இல்லை, சென்னையிலோ, தூத்துக்குடியிலோ இருக்கலாம்னு போலிஸ் தேட ஆரம்பிச்சிருக்கு. இந்த நேரத்திலேதான் இன்னொரு புரளியும் கிளம்பியிருக்குது. அசினுக்கு களங்கம் ஏற்படுத்துற திட்டத்தோடு, அவர் கூடவே இருந்த அந்தப் பையனுக்கு இப்படி ஒரு அசைன்மென்டை கொடுத்ததே இன்னொரு கேரள நடிகைதானாம். இதனால், பையன் பிடிபட்டா இந்த சதியை பின்னணியில் இருந்து தூண்டி விட்டது யாருன்னு விசாரிக்க னும் னு சொல்லியிருக்காராம் அசின்.

## முகப்பில்:-
## பூனம் பஜ்வா

## நச்சரித்த தொலைக்காட்சிகள்!

**பட்டாளம்** பிரமோஷனுக்கு "நதியாவ வரச்சொல்லுங்க" என்று எல்லா சேனல்களும், லிங்குசாமியை நச்சரிக்க, நதியாவும் அழைப்பை ஏற்றுக்கொண்டு வரவுள்ளார். முதலில் நதியா கேரக்டரில் ஜெயராம்தான் நடிப்பதாக இருந்ததாம். ஆனால், அந்த நேரத்தில் அவர் பிஸியாக இருந்தமையால் வேறு யார் இந்த கேரக்டருக்கு பொருத்தமாக இருப்பார்கள் என்று விவாதித்தபோது "பளிச்" என்று நினைவுக்கு வந்தவர் நதியாதானாம். ஆண் கேரக்டரை பெண்ணாக்கி விட்டார்கள்.




## ஐஸ்வர்யா பொம்மைகள்

**ஐஸ்வர்யா** ராயின் உருவத்தில் பாலிவுட் பார்பி என்ற பெயரில் உலகப் புகழ் பெற்ற பார்பி பொம்மைகள் தயாரிக்கப்படவுள்ளனவாம். உலகப் புகழ் பெற்ற பார்பி பொம்மைகளை, உலகப் புகழ் பெற்ற நடிகைகளின் முகங்களை வைத்து இதற்கு முன்பு உருவாக்கியுள்ளனர். பியான்ஸ் நோல்ஸ், எலிசபெத் டெய்லர், டயானா ராஸ் ஆகியோருக்கு அந்தப் பெருமை கிடைத்தது. இந்த வரிசையில் தற்போது ஐஸ்வர்யா ராயும் இணையவுள்ளார். ஐஸ்வர்யாவின் முகத்தை வைத்து உருவாக்கப்படவுள்ள பார்பி பொம்மைகளுக்கு பாலிவுட் பார்பி என பெயர் சூட்டவுள்ளனர். இதுதொடர்பாக பார்பி பொம்மை தயாரிப்பாளர்களான மேட்டல் நிறுவனத்துடன், ஐஸ்வர்யா ராயின் ஏஜென்டுகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனராம்.

ஏற்கனவே இலண்டனில் உள்ள மேடம் டுஸ்ஸாத் அருங்காட்சியகத்தில் ஐஸ்வர்யா ராயின் முழு உருவ மெழுகு பொம்மை இடம் பெற்றுள்ளது. அவரது மாமனார் அமிதாப் பச்சனின் பொம்மையும் அங்கு இடம் பெற்றுள்ளது. இந்த நிலையில், தற்போது பார்பி வடிவில் ஐஸ்வர்யாவுக்கு புதுப் பெருமை கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அங்கம் -07

## ஒரு நடிகையின் கதை

"நீ எவ கூட வேணாப் போ! என்ன வேணாலும் செய்! எனக்கு அதப் பத்தி எந்தக் கவலயும் கிடையாது! ஆனா என்னோட நேரத்தை ஏன் வீணடிக்கிற? பன்னிரெண்டு மணிக்கு வந்திருக்க... லைட்டிங் செட் பண்ணி ஒரு ஷாட் எடுத்ததும் லஞ்ச் பிரேக் விட்டுடுவ! உன்னோட அரிப்புக்காக எங்களையும் கஷ்டப்படுத்துற... தயாரிப்பாளரையும் நஷ்டப்படுத்துறியேடா நாயே?!" என கடுமையாக திட்ட... எல்லார் முன்னிலையிலும் திட்டியதால் அவமானமடைந்த வம்பு "தே..." எனக் கடுமையாக பேச, பதிலுக்கு வசீகரமும் தடித்த ஆங்கில வார்த்தைகளை பிரயோகிக்க... ஏக களேபரம்! அதன் பின் இருவரையும் யூனிட் ஆட்கள் சமாதானப்படுத்தி வைக்க... படப்பிடிப்பு நடந்தது! இந்த விஷயம் தயாரிப்பாளரான ஹனி'.பாதருக்கு தெரியவர ரொம்பவே சந்தோஷப்பட்டார்! ஒரு நாள் அல்ல... ஒரு வாரம் அல்ல... கிட்டத்தட்ட 75 நாட்கள் திமர் திமர் என படப்பிடிப்பை கேன்ஸல் செய்து ரொம்பவே நஷ்டப்படுத்தி வந்தார் வம்பு! இதை தட்டிக் கேட்க இயலவில்லை தயாரிப்பாளரால்! ஆனால் வசீகரம் தைரியமாக செருப்பால் அடித்த மாதிரி கேட்டு விட்டாரே என்பதால் சந்தோஷப்பட்டுக் கொண்டார். இந்தக் காதல் கசமுசா வம்புவின் அப்பாவுக்கு எட்டியதும் மகனைக் கூப்பிட்டு கண்டித்தார். இந்நிலையில் வம்புவின் தாயாரின் முடிவு எவ்வாறிருந்தது?

(தொடரும்)








## வெந்தணலில் வேகுகிறேன்

ஆசை பல ஒன்று திரட்டி
அனுப்பி வைத்தேன் என் மடலை
வந்த பதில் சொன்ன வார்த்தை
உலுப்பிக் கொன்றதிங்கே.

நித்தம் வைத்த பாசமிங்கு
நீர்க் குமிழி போன்றதோ
உயிர்பின் மீது சுவாசங்கள்
உன்னை தினம் தேடுதே.

காற்று வீசும் அந்தி மாலை
மயக்கப் பொழுதில் சந்தித்தோம்
சிரித்து மகிழ்ந்த
கடற்கரையோரங்கள்
இன்றும் மனதில் நிற்குதே.

பிடிச்ச பிடிதானென்று
பின்வாங்கிக் கொண்டாயே.
சறுக்கலுற்ற காதலினால்
நித்தம் இங்கே வேகிறேன்.

சொன்ன வார்த்தை தவறென்று
அன்பே நான் நினைக்கவில்லை.
சத்தியங்கள் பொய்க்குமென்று
கடைசிவரை நம்பிக்கையில்லை.

அழகை மட்டும் கண்டுகொண்ட
பாவி மகள் நானடி
உள்ளே உந்தன் நிலைதனை
அறியாதது ஏன் தானோ.

-வே.அகிலேஸ்வரன், மிருசுவில்
நலன்புரி நிலையம்.



## நானும் ஓர் வினாக்குறியே...

ஒரு நொடிப் பார்வையிலே - என்
இதயம் கவர்ந்த காதலனே
என் துயர் அறிய
ஏன் இன்னும் வரவில்லை.

தூங்கவில்லை என் விழிகள்
துக்கம் என் மனமுழுவதும்
எண்ணங்கள் தந்தாய் நெஞ்சில்
ஏமாற்றம் தனையும் தந்தாய்.

எத்தனை துயர்கள் வரினும்
என் மனம் உனையே நினைக்கும்.
புரியாத புதிராய் நானும்
புயலுக்குள் சிக்கினேன் அன்பே.

சோகங்கள் வரலாம் வாழ்வில்
சோகமே வாழ்வாகலாமா?
விடை கூறு காதலா நீயும்
வினாக் குறியாய் காத்திருக்கின்றேன்
நானும்...

-எஸ்.டயானா.

## பூமித் தாய்க்கோர் புதல்வன்!

விண்கற்கள் மோதி
உடைந்துபோன
விண்ணோடமானேன்
நான்
விண்மீன்களைத் தேடிச் சென்றது
ஏனைமா?
எலிக்கூட்டமே
பூமிப்பந்தை தாண்டும்
எண்ணமில்லா உங்களுக்கு
வாலில்லை.
என்பதற்காய் - நீர்
மாண்டீரா
புவியினிலே பிறந்து
அதிலேயே
இரை கௌவி - அதன் மீதே மடிந்து
விடுவதா?
அண்டத்தை ஆள்வதற்காய்
பூமித்தாய்
பெற்றெடுத்த புதல்வன்
நான்.

-மாசில்லான் ஞானராஜ்,
மன்னார்.

## அவளின் புன்முறுவல்

விழிகள் மூடி உறங்க முடியவில்லை
உன் ஞாபகம் மூட விடுவதுமில்லை.
உன் நினைவுகள் நித்தமும்
அலைபாய்வதால் பாடத்தில்
கவனம் செல்வதில்லை.

கல்லூரிப் பருவம் காதல்
பருவமாகிவிட்டது.
வகுப்பறையில் முதன் முதலில் என்று
சந்தித்தேனோ அன்றே
என்னை உன்னிடம் இழந்துவிட்டேன்.

உதட்டிலே மாயங்கள் புரிகின்ற
உயிர் வரைக்கும் வேதனை தருகின்ற
இந்த அழகை உனக்குத் தந்தவன்
ஒருநாள் உன்னையே என்னிடம்
தந்துவிடுவான் என்று நினைத்தேன்.

நெஞ்சினில் இன்றும் நிழலாடுகின்றது
கடைசியாய் நீ சிந்திவிட்டுச்
சென்ற புன்முறுவல்..

உன்னைப் பார்த்தவுடன் மயங்காத
எதுவும் உலகில் கிடையாது
என்று நினைத்தேன்.
சுனாமி வந்து உன்னைத்
தூக்கிச் சென்றபோதுதான்
உண்மை புரிந்தேன்.

யாருக்காவும் கண்ணீர் வடித்ததில்லை
என் வாழ்வு - இன்று
கண்ணீருக்கே அடிமையாகிவிட்டது.

சுனாமியே! என்னவனைப் பிரித்து
என்னை மாத்திரம் பூமியில்
ஏன் விட்டுச் சென்றாய்
அவளுடன் என்னையும் அழைத்துச்
சென்றிருந்தால்...

என் வாழ்க்கைக்கு நட்சத்திரமாய்த்
திகழ்ந்த என்னவளின் புன்சிரிப்பிற்காகக்
காத்திருக்கின்றேன் - சுனாமியே -
என்னை
அவளிடமே ஒப்படைத்துவிடு!

எஸ்.ஷுபா,
கொழும்பு-14.

## வெறுப்பு




**அரசியல்** பக்கம் தலை வைத்துப் படுக்கமாட்டேன் என்று நடிகை அமீஷா பட்டேல் கூறியிருக்கிறார். பாலிவுட் முன்னணி நடிகைகளில் ஒருவரான அமீஷா பட்டேல் தேசிய வாதக் காங்கிரஸ் கட்சி சார்பில் குஜராத் மாநிலத்தில் ராஜ்கோட் தொகுதியில் போட்டியிடப் போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதனை மறுத்துள்ள அமீஷா, தான் தற்போது நிறையப் படங்களில் நடித்து வருவதாகவும், மேலும் பல பட வாய்ப்புகள் வாயிற் கதவைத் தட்டுவதாகவும் கூறியுள்ளார். இதனால் எனது கவனம் முழுவதும் சினிமாவில்தான் உள்ளது. அரசியல் பக்கம் தலை வைத்துப் படுக்க வாய்ப்பே இல்லை. எந்த அரசியல் கட்சியிலும் சேரமாட்டேன். எந்தக் கட்சிக்காகவும் பிரசாரம் செய்யமாட்டேன் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார் அமீஷா பட்டேல்.



## திருமணம்

**பாலிவுட்** நடிகை இஷா கோபிகருக்குத் திருமணம் ஆகவிருக்கிறது. தமிழில் விஜய், அரவிந்த்சாமி, விஜயகாந்த் உள்ளிட்டோருடன் நடித்தவர் இஷா கோபிகர். பாலிவுட்டில் இருந்து கோலிவுட்டுக்கு வந்த இவருக்கு அடுத்தடுத்து தமிழ் பட வாய்ப்புகள் கிடைக்காததால் மீண்டும் மும்பைக்கே சென்றுவிட்டார். இவரும் மும்பையைச் சேர்ந்த ரோத் நரங் என்ற ஓட்டல் அதிபரும் காதலித்து வருகிறார்கள். ரோத்தை இஷா-கோபிகர் திருமணம் செய்யவிருப்பதாக பாலிவுட்டில் செய்திகள் பரவி வருகின்றன. இதுகுறித்து இஷா கோபிகர் கூறுகையில், கடந்த ஆண்டு ரோத்தைச் சந்தித்தேன். இருவரும் நட்பாகப் பழகினோம். பின்னர் காதலிக்கத் தொடங்கினோம். எங்களது காதலை இரு வீட்டாரும் ஏற்றுக் கொண்டனர். இதனால் திருமணம் செய்ய முடிவு செய்தோம். தற்போது எனக்குப் பட வேலைகள் பாக்கி இருப்பதால் திருமணத்தைத் தள்ளி வைத்துள்ளோம். திருமணத் திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றார்

## கண்ணீர்



**தமிழ்** சினிமாவில் கனவுக் கன்னியாக வலம் வந்த அசின், இந்தியில் இப்போது பிஸி. அதுவும் இந்தி கஜினி ரிலீசுக்குப் பிறகு சொல்லவே வேண்டாம். அம்மணிக்கு நம்பர் ஒன் நாயகிகளில் ஒருவராகப் பிரமோஷன் கிடைத்திருக்கிறது. இதற்கிடையில் அசினுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. மும்பையில் நடந்த ஒரு விருது வழங்கும் விழாவுக்கு நடிகர் அமிதாப் பச்சன் வந்திருக்கிறார். விழாவில் பேசிய அமிதாப், அசின் ஒரு திறமையான நடிகை என்று பாராட்டினார். இதனைக் கேட்டு அந்த விழாவுக்கு வந்திருந்த அசின் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். பாலிவுட் சூப்பர் ஸ்டாரே தன்னைப் பாராட்டிவிட்டார் என்று தன் நண்பர்களிடம் பெருமிதம் பொங்கச் சொல்லி வருகிறாராம் அசின்.

# பஸ் நடத்துநர் சூப்பர் ஸ்டாரானது எப்படி!




## சிவாஜிராவ்/ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு:

**எஸ்.எஸ்.சந்திரன்,** ஜெய்சங்கர், விஜயசக்கரவர்த்தி ஆகியோரும் நடித்திருந்தனர். இசை இளையராஜா. "மானின் இரு கண்கள் கொண்ட மானே மானே", அது எப்போதும் பெரியவங்க ஆசி", "என்னதான் சுகமோ நெஞ்சினிலே" போன்ற பாடல்கள் புகழ் பெற்றவை.

### வித்தியாசமான படம் "அதிசயப் பிறவி"

கூடு விட்டுக் கூடு பாய்ந்தார், ரஜினி! எமலோகத்தில் கலாட்டா!

ரஜினிகாந்த் புதுமாதிரியான வேடம் தாங்கி நடித்த படம் "அதிசயப்பிறவி."

தெலுங்கில் பிரமாண்டமான படங்கள் எடுப்பதில் புகழ் பெற்ற நடூர்ணசந்திரராவ், தமது லட்சுமி புரொடக்ஷன்ஸ் சார்பில் "யமுடிக்கி மொகுடு" என்ற படத்தைத் தயாரித்தார்.

அதை அவரே, "அதிசயப்பிறவி" என்ற பெயரில் தமிழில் தயாரித்தார். எஸ்.பி.முத்துராமன் டைரக்ட் செய்தார்.

பஞ்சு அருணாசலம் வசனம் எழுத, இளையராஜா இசை அமைத்தார்.

### புது மாதிரியான கதை.

ரஜினி இரண்டு வேடத்தில் நடித்த படம். எமலோகக் கலாட்டாக்களில் ரசிகர்களை கலகலக்க வைத்த படம்.

ஒரு ரஜினி அப்பாவி. இன்னொரு ரஜினி "அடிதடி" பேர்வழி. தவறு எங்கே நடந்தாலும் தட்டிக் கேட்கும் ரஜினி, காதலி கனகாவுடன் (இந்தி நடிகை) ஆட்டம், பாட்டம் என்று ஜாலி பண்ணுகிறார்.

அப்பாவி ரஜினி, பணக்காரர். பெற்றோர் சதிகாரர்களால் கொல்லப்பட்ட நிலையில் நவுதி செந்தாமரையிடம் வளர்கிறார். ரஜினி வாலிப பருவத்தை எட்டியதும் உயில்படி சொத்து அவர் கைக்கு வந்துவிடும். அப்போது சொத்தை பிடுங்கிக்கொண்டு அவரைத் தீர்த்துவிட வேண்டும் என்பது செந்தாமரையின் திட்டம்.

### எமலோகத்தில் குழப்பம்

இந்த நேரத்தில் எமலோகத்தில் ஒரு குழப்பம் ஏற்படுகிறது. யாரோ ஒருவனின் உயிரைப் பறிக்க வந்த சித்திரகுப்தன் தவறுதலாக "அடிதடி" ரஜினியின் உயிரைப் பறித்து விடுகிறான். எமலோகத்தில் எமதர்மன் ரஜினியைப் பார்த்துக் குழப்பம் அடைகிறான். அப்போதுதான் ஆள் மாறாட்டம் தெரியவருகிறது. ரஜினியிடம், "நீ திரும்பவும் பூலோகம் சென்றுவிடு" என்கிறார், எமதர்மன்.

அதற்குள் ஒரு விபரீதம் நடந்து விடுகிறது. "அடிதடி" ரஜினியின் உடலை அவரது உறவினர்கள் எரித்து விடுகிறார்கள்.

இதனால் கோபத்துடன் மறுபடியும் எமலோகத்தில் எமதர்மனைச் சந்திக்கிறார், அடிதடி ரஜினி. "நீ விரும்பினால் யாருடைய உடலிலாவது சேர்ந்து கொள்ளலாம்" என்று அவரை தாஜா செய்கிறார், எமதர்மன். சம்மதிக்கும் அடிதடி ரஜினியிடம் பல "ரஜினி"க்கள் காட்டப்படுகிறார்கள். (ரஜினி நடித்த படங்களில் அவர் நடித்த கேரக்டர்களை ஒவ்வொன்றாகக் காட்டுகிறார்கள்) இது எதையும் பிடிக்காத "அடிதடி" ரஜினி, கடைசியில் அப்பாவி ரஜினியை "ஓகே" சொல்கிறார்.

### ரஜினியின் "சுயதரிசனம்"

"நீ லாயக்கில்லை" என்று யாராவது என்கிட்ட சொன்னா, "நான் லாயக்கு"ன்னு நிரூபிப்பேன்.



பெங்களூரில் கண்டக்டராக இருந்தபோது சினிமாவில் நடிக்க வேண்டுமென்று ஒரு வெறியே இருந்தது. என் தந்தையோ, "ஆமா, நீ பெரிய மன்மதன்! சினிமாவிலே சேர்ந்து ஹீரோவாகப்போறே" என்று இளப்பமாகச் சொன்னார். அதுவே எனக்கு பெரிய சவாலாக இருந்தது.

நான் ஹீரோவாக வேண்டும் என்று ஆசைப்பட்டதே கிடையாது. வில்லனாகத்தான் வரவேண்டுமென்று நினைத்தேன். முதலில் கன்னடப் படத்தில்தான் நடிப்பேன் என்று நினைத்தேன். தமிழில்தான் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆரம்பம் முதலே தமிழ் கற்றுக்கொண்டு என் சொந்தக் குரலில் பேசவேண்டுமென்று தீர்மானமாக இருந்து அதைச் செயல்படுத்தி வந்தேன்.

அதுபோல் "அந்தா கானூன்" இந்திப் படத்தின் சண்டைக் காட்சிகளில் நடிக்கும்போது, அஸிஸ்டண்ட் மாஸ்டர்களெல்லாம் என்னை மதிக்கவே மாட்டார்கள். டப்பிங்டில் ஷாட்டுக்கு என்னை அழைக்கும்போது கூட, சொடக்குப் போட்டுத்தான் கூப்பிடுவார்கள். நான் விதம் விதமாக ஸ்டைல் செய்வதற்கு என்னை அனுமதிக்கவே மாட்டார்கள். தாங்கள் சொல்லிக் கொடுப்பதை அப்படியே செய்ய வேண்டுமென்பார்கள்.

"அந்தா கானூன்" ஹிட்டாகி, "கங்குவா" ஹிட்டாகி, அடுத்து "ஜான் ஜானி ஜனார்த்தன்" உருவானபோது எனக்குக் கிடைத்த மரியாதையே வேறு.

### 1985-இல் அளித்த ஒரு பேட்டியில் ரஜினி கூறியது

இப்போது அப்பாவி ரஜினியின் உடலுக்குள் "அடிதடி" ரஜினியின் ஆத்மா புகுந்து கொள்கிறது.

(பயணிக்கும்)

# பொட்டுக்களின் பலன்கள்




**குங்குமப்பொட்டு:-**

மங்களகரமான வாழ்க்கை அமையும். பிறர் மதிக்கும் மகா உன்னதமான பொட்டு. மகிழ்ச்சியைக் கொடுக்கும். திருமகள் கடாட்சம் கிடைக்கப் பெறுவர். குடும்பத்தில் அமைதி, ஆனந்தம் தாண்டவமாடும். வறுமை நீங்கும், ஆயுள் அதிகரிக்கும், பிறர் நம்மை வசியம் செய்ய முடியாது, மாங்கல்ய பாக்கியம் தரும், குடும்பத்திற்கு சகல சௌபாக்கியங்களை அளிக்கும்.

குங்குமம், விபூதி அணிந்த பெண்கள் வாழ்வில் சகல சௌபாக்கியங்களும், சிவ சக்தியின் பூர்ண அருள் கடாட்சமும், தெய்வ பக்தியும், திடமான எண்ணங்களும், ஆழ்ந்த நினைவாற்றலும், பிறரை மதிக்கும் மனப்பான்மையும் எதையும் சிந்தித்து செயல் ஆற்றும் வல்லமையும், எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் உயர்ந்த சிந்தனையும், சாமர்த்தியமும் கொண்ட அதிர்ஷ்டசாலிகளாகத் திகழ்வர். அவர்கள் வாழ்க்கை மேன்மை அடையும்.



**ஸ்டார் பொட்டு:-**

ஸ்டார் பொட்டு அணிபவர்கள் பெரும் பாலும் ஆடம்பர வாழ்க்கையில் அவதிப்படுபவர்கள். மனதில் சதா கவலைகள் இருந்து கொண்டே இருக்கும். ஒரு இடத்தில் நிலையாய் அவர்களால் இருக்க முடியாது. முறபோக்கு சிந்தனையாளர்கள். அவசரப் புத்தியால், தடுமாறுவார்கள். எதையும் அலட்சியமாக நினைக்கும் மனப்போக்கு உடையவர்கள். அதிக கோபம் உடையவர்கள். இதனால் தலைவலி, உடல் உபாதைகளை சந்திக்கும் துர்ப்பாக்கியசாலிகள். இவர்களுக்கு நண்பர்களைவிட விரோதிகள்தான் அதிகமிருப்பார்கள்.

**மச்சப் பொட்டு:-**

மச்சப் பொட்டு அணிபவர்கள், தந்திரசாலிகள். பிறரை எளிதில் நண்பர்களாக்கிக் கொள்வார்கள். வாக்கு சாதுரியம் உள்ளவர்கள். காலத்தைத் தன் வசமாக்கிக் காரியங்களைச் சாதிக்க வல்லவர்கள். பிறரை நம்புவது போல் பேசி மற்றவர்களைக் கவர்ந்து இழுக்கும் காரியவாதிகள். பொன், பொருள், ஆடை ஆபரணங்களை அதிகம் நேசிப்பவர்கள். பல சோதனைகளை அநாவசியமாக எதிர்நோக்கி தன் காரியங்களை வெற்றிகரமாக முடித்துக் கொள்பவராகத் திகழ்வார்கள்.

**பிறை நிலவு:-**

வண்ண முகத்தில் பிறை நிலவு பொட்டு வைத்துக் கொள்பவர்கள் பெரும்பாலும் ஞாபக மறதியைக் துணையாகக் கொண்டவர்கள். எதையும் நினைப்பார்கள். செயலாக்க துணிய மாட்டார்கள். பொறுமை இல்லாத அவசரக்காரர்கள். பிறர் தம்மைப் பாராட்ட வேண்டும் என்ற புகழ் விரும்பிகள். செய்யும் தொழிலில் நிம்மதி இருக்காது. அடிக்கடி இடம் மாறிக் கொண்டே இருப்பார்கள். பிறர் எதைச் சொன்னாலும் நம்பி விடும் இயல்பு உடையவர்கள். காலத்தையும் நேரத்தையும் தவறவிடும் அதிர்ஷ்டம் அற்றவர்கள்.

**சர்ப்பப் பொட்டு(பாம்பு வடிவம்):-**

பெரும்பாலும் பெண்கள் அறியாமையாலேயே இந்தப் பொட்டு இட்டு வலம் வருகிறார்கள். ஜாதகத்தில் நாகதோஷம் உள்ள பெண்கள் மட்டும் அணிந்து -நாக தேவதையை வலம் வரவேண்டும். வெள்ளிக்கிழமை இராகு கால நேரத்தில் சர்ப்பப் பொட்டுடன் நாக தேவதைக்கு பால் அபிஷேகம் செய்து, மஞ்சள் பூசி- குங்குமப் பொட்டு இட்டு வழிபட்டுவந்தால் புத்திர பாக்கிய தோஷம் நீங்கி சந்தான பாக்கியம் கை கூடும். குடும்பத்தில் அமைதி நிலவும். தெய்வ அனுக்கிரகம் கிடைக்கும். பிரிந்த கணவர் கூடுவார்.

**குங்குமம்- சந்தனப்பொட்டு:-**

குங்குமப் பொட்டுடன் சந்தனப்பொட்டு அணியும் பெண்மணிகள் தெய்வ பக்தி, அமைதி, சலனம் இல்லாத மனம், தெய்வ கடாட்சம், கிடைக்கப் பெற்றவர்கள். இனிய வார்த்தைகளால் பிறரைத் தன் வசமாக்கிக் கொள்ளும் சாதுரியசாலிகள். அதிர்ஷ்ட தேவதை இவர்களை ஆராதிக்கும்.

உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இவர்கள் கைராசிக்காரர்கள். இவர்களிடம் பொருட்கள் சேரும். எடுத்த காரியங்கள் பலிதமாகும். செல்வச் செழிப்பும், ஆரோக்கியமும் இவர்களை விட்டு நீங்காது.

**ஸ்வஸ்திக் பொட்டு:-**

பெண்கள் பெரும்பாலும்-விரத நாட்களிலும், வளர்பிறை சதுர்த்தியிலும், முக்கியமான பண்டிகை நாட்களிலும் மட்டும் பயன்படுத்தினால், புகழ், கல்வி அபிவிருத்தி, பொருள் சேர்கை நிகழும். மனதிற்குப் பிடித்த மணவாளனை வாழ்க்கைத் துணையாய் அமையப் பெறுவர். தனம், தான்யம், மக்கட்பேறு ஆகியவை குறையில்லாமல் குடும்பத்தில் எல்லா நலன்களும் வந்து சேரும். மற்ற நாட்களில் அணியக் கூடாது.

**ஸ்டிக்கர் பொட்டு:-**

மகளிர் தங்கள் விருப்பப்படி, தாங்கள் உடுத்திக் கொள்ளும் புடைவையின் நிறத்திற்குத் தக்கபடி வண்ணமயமான ஸ்டிக்கர் பொட்டுக்களைத் தினம், தினம் பயன்படுத்துகிறார்கள். பார்ப்பதற்கு அழகாக இருக்குமே தவிர அவற்றால் எந்தவித நற்பலன்களும் இல்லை. அதற்கு மாறாகப் பலவித வாழ்க்கைப் போராட்டங்கள், பிரச்சினைகள். காலதாமதமான திருமணம்- திருமணம் ஆன பெண்ணிற்கு குழந்தையின்மை, குடும்பத்தில் சந்தோஷம் இன்மை, குடும்பத் தகராறு குழப்பங்கள், மனக்கவலை, பணக்கஷ்டம் இவை இவர்களை ஆட் கொள்கின்றன.

அது மட்டுமல்லாது, சில தரக்குறைவான தயாரிப்புகளைப் பயன்படுத்தினால் பெண்களின் நெற்றியில் ஸ்டிக்கர் பொட்டு தழும்புகளையும் வேறு பல சரும அலர்ஜிகளையும் கூட ஏற்படுத்துவதுண்டு.

## ஓர் செய்தி

### பாடசாலைகளில் பாலியல் கல்விப் போதனை



**மேற்கத்திய** நாடுகள் பலவற்றின் பாட விதானங்களில் பாலியல் கல்வியும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் பின்தங்கிய பிரதேசங்களில் அல்-குவைதா, தலிபான் போன்ற அமைப்புகள் பெண்கள் கல்வி கற்கும் பாடசாலைகளைத் தாக்கி வருகின்றன. இலங்கையில் பாலியல் கல்வியைப் பாடசாலைகளில் போதிப்பதா? இல்லையா? என்று பல வருடங்களாகவே சமூகவியலாளர்களும், கல்வியலாளர்களும் விவாதித்து வருகிறார்கள். பூப்பெய்துவது என்பது பெண் பிள்ளைகளின் உடல் பரிணாம வளர்ச்சிப் போக்கில் ஒரு கட்டமென்பதைப் புரிந்து கொள்ளாத வகையில் இன்னமும் இங்கே பிள்ளைகள் இருப்பதும் வேதனைக்குரியது.

சுகாதார அமைச்சின் பால்வினை நோய், மற்றும் எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அண்மையில் 15 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவ, மாணவியர்களிடையே ஆய்வொன்றினை நடத்தியது. 29 சதவீதமான மாணவர்கள் ஆபாசப் படங்கள் பார்க்கிறார்கள் என்றும், 72 சதவீதமான மாணவர்கள் பாலுணர்வு உள்ளவர்களாக இருக்கின்றனர் என்றும் இந்த ஆய்வில் கண்டறியப்பட்டது. 43 சதவீதமானவர்கள் எதிர்ப்பாலாருடன் உறவுகளில் ஈடுபடுகின்றனர் என்றும் மற்றும் 43 சதவீதமானவர்கள் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுகின்றனரென்றும் அந்த ஆய்வு தெரிவித்தது. எனவே பாலியல் கல்விப் போதனை அவசியமானதெனவே கருதப்படுகிறது. ஆனால் இந்தப் போதனையைப் பாடசாலைகளில் அமுல்படுத்துவதற்கு முன்னதாக உடல் சம்பந்தப்பட்ட விஞ்ஞானபூர்வ அம்சங்களோடு இலங்கையின் சமூக, சமய, கலாசார அம்சங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டு பாடவிதானங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்று கல்வியலாளர்கள் கருதுகின்றனர். எந்த வயதில் அல்லது எந்தத் தரத்தில் இந்தப் போதனை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

## உங்கள் பிரச்சினை என்ன?

**சமூகத்தில்** பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து 'உங்கள் பிரச்சினை என்ன?' என்ற இந்தப் புதிய பகுதி மூலம் கலந்துரையாடலாம். அரசியல், பொருளாதார, சமூக, கலாசார விடயங்கள் மட்டுமல்ல, குடும்பத்தில், அலுவலகத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் எம்மோடு பகிர்ந்து கொள்ளலாம். இயன்றவரை உங்கள் பிரச்சினை தீர ஆலோசனைகள் தரப்படும்.

**வத்சலா கணபதிப்பிள்ளை,**
**யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** எங்களுக்கு மூன்று பெண் பிள்ளைகள். மூவருக்கும் முறையே ஒன்பது, ஆறு, மூன்று வயதுகளாகின்றன. கடைசிப் பிள்ளை மிகவும் அமைதியானது. மூத்த பிள்ளைகள் இரண்டும் சேர்ந்து கடைசிப் பிள்ளையை எப்போதுமே பகிடி பண்ணிச் சீண்டிக் கொண்டே இருப்பார்கள். அந்தப் பிள்ளை என்ன செய்தாலும் ஏதாவது சொல்லிப் பகிடி பண்ணுவார்கள். ஆரம்ப காலங்களில் இதனை நானோ கணவரோ பெரிதுபடுத்தவில்லை. பெற்றோர்கள் என்ற வகையில் மூன்று பிள்ளைகளையும் நாம் சமமாகவே பார்க்கிறோம். இவ்வாறு தொடர்ச்சியாகச் சின்னப் பிள்ளையைச் சீண்டி வந்தால் அவள் மனோரீதியாகப் பாதிக்கப்பட்டு விடுவாளோ என்று பயப்படுகிறோம்.

**பதில்:-** சிறிய பிள்ளைகள் சீண்டி விளையாடுவது ஒன்றும் புதுமையானதல்ல. காலங்காலமாக நடைபெற்று வருவது தான். சிலவேளைகளில் அது மலவீனமான பிள்ளையைப் பலம் பெறச் செய்கிறது. ஆனால் பெரிய பிள்ளைகளின் சீண்டல் விளையாட்டுக்கள் சின்னப் பிள்ளையைப் பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். சகலவற்றுக்குமே கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் இருக்க வேண்டும். இருந்தாலும் காலம் செல்லச் செல்ல இந்தச் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டுக்கள் குறைந்து போய்விடும். இவ்வாறான சில்மிஷங்களில் கிடைக்கும் முஸ்பாத்தியும், மனத்திருப்தியும் நாளடைவில் நின்று போய்விடும். சின்னப் பிள்ளையைப் பாதுகாப்பதாக நினைத்துக் கொண்டு நீங்கள் அளவுக்கு மீறிய செயற்பாடுகளைக் காட்ட முனைந்தால் நாளடைவில் அந்தப் பிள்ளை உங்களிலேயே தங்கியிருக்கக் கூடிய நிலையை ஏற்படுத்திவிடும். சின்னப் பிள்ளைக்கு உடல் அல்லது உள ரீதியாகப் பாதிப்பு ஏற்படுமென்றால் மட்டும் தலையிடுங்கள். நீங்கள் ஒரு பிள்ளையில் அதிக கவனம் எடுக்கிறீர்களென்ற உணர்வு மற்றப் பிள்ளைகளுக்கு ஏற்படாமலும் பார்த்துக் கொள்ளுங்கள்.


## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

முரசு வாசகர்களுக்கான போட்டி -168

ரூபா. 1000/- பரிசு

கேள்வி:-
சாக்லட் பிஸ்கட் எத்தனை டிகிரியில் எத்தனை நிமிடம் பேக் செய்யப்பட வேண்டும்.?

168

பெயர் : ..........
முகவரி : ..........
..........
..........
தே.அ. அட்டை இல : ..........
விடை : ..........
கையொப்பம் : ..........

☞ சரியான விடையை எழுதி அனுப்பி வைப்பவர்களில் அதிர்ஷ்டசாலி ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

☞ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும். (பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

☞ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி


வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி
முரசு பரிசுப் போட்டி -168
தினமுரசு வார மலர்
தபால்பெட்டி இல - 1772
கொழும்பு.

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 07.04.2009

பரிசுப் போட்டி இல -166
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

எஸ்.ஸ்கொலஸ்டிகா,
142, மாத்தளை ரோட்,
கட்டுகஸ்தோட்டை.


## சாக்லெட் பிஸ்கட்டுகள்



**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| மைதா மா | - 100 கிராம் |
| வெண்ணெய் | - 50 கிராம் |
| பொடித்த சீனி | - 50 கிராம் |
| கொக்கோ பவுடர் | - அரைத் தேக்கரண்டி |
| முட்டை | - அரை |
| வெனிலா எசன்ஸ் | - சில துளிகள் |
| பால் | - சிறிதளவு |

**பிஸ்கட்டுகளின் நடுவே வைக்கும் கிரீம் செய்ய:**

| | |
|---|---|
| வெண்ணெய் | - 20 கிராம் |
| ஐசிங் சீனி | - 50 கிராம் |
| கொக்கோ பவுடர் | - ஒரு தேக்கரண்டி |

**செய்முறை:-**

மைதா, பேகிங் பவுடர், கொக்கே மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து இருமுறை மாவு சல்லடையில் சலித்துக் கொள்ளவும். பொடித்த சீனியையும், வெண்ணெயையும் நன்றாகக் குழைத்துக் கொள்ளவும்.

முட்டையை உடைத்து, நன்றாக அடித்து அத்துடன் வெனிலா எசன்ஸ் சேர்க்கவும்.

சீனியையும் வெண்ணையையும் சேர்த்துக் குழைத்துக் கலவையில் சிறிது சிறிதாக ஊற்றி அடிக்கவும்.

சலித்த மாவை குழைத்த கலவையுடன் சேர்த்து மிருதுவான ஒரு கலவையாக செய்து கொள்ளவும்.

கைகளினால் கலக்கவும் (கரண்டி உபயோகிக்கக் கூடாது).

ஒரு பட்டர் பேப்பர் பை செய்து கொள்ளவும். அதில் ஸ்டார் அச்சைப் போட்டுக் கொள்ளவும்.

அந்த அச்சின் நுனிப்பாகம் கால் அங்குலம் வெளியே தெரியுமாறு இருத்தல் வேண்டும். அந்தப் பையில் இந்தக் கலவையை போட்டுக் கொள்ளவும்.

நெய் தடவி மாவு தூவிய தட்டில் முக்கோணமாகவோ, நீளமாகவோ பிழிய வேண்டும்.

ஒரே வடிவில் இரண்டு இரண்டு பிஸ்கட்டுகளாக பிழிந்து கொள்ள வேண்டும்.

பிஸ்கட்டுகளை 380 டிகிரி (F) சூட்டில் 20 நிமிடம் பேக் செய்யவும்.

ஐசிங் சீனி, கொக்கே, வெண்ணெய் இவற்றை நன்றாகக் குழைத்துக் கொள்ளவும். பேக் ஆனதும் நன்கு ஆறவிட்டு, இரண்டு இரண்டு பிஸ்கட்டுகள் நடுவில் கிரீம் தடவி ஒட்டவும்.



**ஆகவே** பகல் இடைவேளையின்போது அங்கேயே தங்கியிருக்க அனுமதிக்கும்படியும் காவல்காரனைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். கட்டுமரப் பகுதியை முடித்து, நாரிக்கின் கருவி களுடன் வைக்கப்போகிறேன். அவர்களிடம் சொல்லவும். மூன்று மணிக்கெல்லாம் அவர்கள் அதை எடுத்துச் சென்றுவிட வேண்டும். எவனோ சோமாறி கவனிக்கிறான். அவனை முந்திக்கொண்டு நாம் வேலையை முடித்துவிடலாமென்று பார்க்கிறேன்."

நாரிக்கும், கெனியரும் சம்மதித்தார்கள். கட்டடத்துறை வேலையாட்களின் முன்வரிசையில் அவர்கள் இருந்துகொள்ள வேண்டியது. அவர்களது அணி செல்ல வேண்டிய சமயம் பார்த்து, இரண்டு ஆட்கள் கேட்டுக்கு வெளியே ஒரு சண்டையை ஆரம்பித்து அமளி செய்யவேண்டியது என்று முடிவு செய்தோம். மஸ்ஸானி, ஸான்ட்டினி என்ற இரண்டு பேர்- மாத்யூவின் ஊர்க்காரர்கள்- அந்த உதவியைச் செய்வதாக வாக்களித்தார்கள். என்ன, எதற்கு என்று எதுவும் அவர்கள் கேட்டுக்கொள்ளவில்லை. சிநேகிதம் என்றால்



அப்படியல்லவா இருக்க வேண்டும்!

நாரிக்கும் கெனியரும் அந்த அமளிதும-ளியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது. அந்தப் பூசல்களில் தங்களுக்கு அக்கறை இல்லை போலவும், தங்கள் அலுவலைக் கவனிக்க விரைகிற மாதிரியும் அவர்கள் தங்கள் பொருள்களுடன் வேகமாக வெளியேறிவிட வேண்டியது. இதுதான் எங்கள் திட்டம். இது நல்லபடி நிறைவேற ஒரு சான்ஸ் இருக்கிறதென்று நாங்கள் அனைவரும் நம்பினோம். அந்தக் கடைசிப் பகுதியை மட்டும் வெளியே கொண்டு வந்துவிட்டோமா-பிறகு இரண்டொரு மாதங்களுக்கு மூச்சுப் பேச்சு விடாமல் சும்மா இருக்க வேண்டும். ஏனென்றால், நாங்கள் கட்டுமரம் தயாரித்து வருவது குறைந்தபட்சம் ஓர் ஆளுக்காவது தெரிந்திருக்கிறது. வேறு சிலர் கூட இருக்கிறார்களோ என்னவோ!

அதை யார் தயாரிக்கிறார்கள், எங்கே ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க அவர்கள் காத்துக்கொண்டிருப்பார்கள்.

ஒரு வழியாய் மணி இரண்டரை ஆயிற்று. ஆட்கள் வெளியே வரத் தயாரானார்கள். அஜர் பட்டியல் எடுத்து வேலைக்குப் போவதற்கு முப்பது நிமிடம் பிடித்தது. அவர்கள் கிளம்பினார்கள். நாலு நாலு பேராகச் செல்லும் என்பது போல் நடு வரிசையில் இருந்தான் ஸெலியர்.

நாரிக்கும், கெனியரும் முன் வரிசையில் இருந்தார்கள். மஸ்ஸானியும், ஸான்ட்டினியும் பன்னிரண்டாவது வரிசை. ஸெலியர் பத்தாவது வரிசை. இது நல்ல ஏற்பாடென்று எனக்குத் தோன்றியது. ஏனென்றால், நாரிக் தனது பொருள்களையும், சாரத்தையும் ,கட்டுமரத்துக்கான துண்டையும் எடுத்துக்கொள்ளும்போது, பெரும் பகுதி ஆட்கள் உள்ளே சென்றிருக்க மாட்டார்கள். ஸெலியர் கேட்டை நெருங்கிக் கொண்டிருப்பான். அல்லது அதற்குச் சற்று அருக கச் சென்றிருப்பான்.

மாத்யூவின் ஆட்கள் இருவரும் வெறி பிடித்தவர்கள் போல் ஒருவரை நோக்கி ஒருவர் கூச்சல் போட்டுக்கொண்டிருப்பார்கள். ஆதலால், எல்லோரும் என்ன விஷ யமென்று திரும்பிப் பார்ப்பது நிச்சயம்- ஸெலியர் உள்பட.

நாலு மணி.

அனைத்தும் ஒழுங்காய் நடந்தேறிவிட்டன. கட்டுமரத்தின் பகுதி, தேவாலயத்தில் கட்டடப் பொருள்களின் குவியலுக்கு அடியில் கிடந்தது. அதற்கு மேற்கொண்டு செல்ல அவர்களால் முடியவில்லை. ஆனால் இப்போது அது பத்திரமாய்த்தான் இருந்தது.

ஜூலியட்டைப் பார்க்கப் போயிருந்தேன். அவள் வீட்டில் இல்லை. திரும்பிச் செல்லுகையில் நிர்வாகப் பிளாக்கைத் தாண்டிச் சென்றேன். மஸ்ஸானியும், ஸான்ட்டினியும் நிழலில் நின்றுகொண்டிருந்தனர். தண்டனைச் சிறைக்கு அவர்களை அழைத்துச் செல்ல வேண்டும். அதற்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

சண்டைபோல் நடித்ததற்குத் தண்டனை. பாவம்! நான் அவர்களுக்கு அருகாகச் சென்று,''எவ்வளவு காலம்?'' என்றேன்.

''ஒருவாரம்,'' என்றார்கள்.

ஒரு கார்ஸிகா காவல்காரன், ''சே ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேரும்! ஆனால் சண்டை அடித்துக் கொள்கிறார்கள். என்ன வெட்கக் கேடு!'' என்றான்.

நான் முகாமுக்குத் திரும்பிச் சென்றேன். மணி ஆறு. போர்ஸே குதூகலத்துடன் திரும்பி வந்தான். ''எனக்குக் கான்ஸர் ஏற்பட்டிருந்தது, பிறகு டாக்டர், 'தப்பாகச் சொல்லிவிட்டேன். உனக்கு ஒன்றுமில்லை' என்று சொன்னால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது எனக்கு,'' என்றான்.

மாத்யூவும் எனது மற்ற நண்பர்களும் கும்மாளமடித்து, திட்டத்தை நான் அமைத்த விதம் குறித்து என்னைப் பாராட்டினார்கள். நாரிக்குக்கும், கெனியருக்கும்கூட மகிழ்ச்சி. எல்லாம் அருமை யாய் முடிந்துவிட்டது.

மாலையில் சூதாட்டக்காரர்கள் வந்து என்னைத் தங்கள் ஆட்டத்தில் சேரும்படி அழைத்தும்கூட இராத்திரி பூராவும் தூங்கினேன். தாங்க முடியாத தலை வலி என்று பாசாங்கு செய்துவிட்டேன். உண்மையில், என் கால்கள் துடித்துக்கொண்டிருந்தன எப்போதடா கிளம்புவோம் என்று. கிட்டத்தட்ட வெற்றியின் விளிம்பைத் தொட்டாயிற்று என்பதில் எனக்கு மகிழ்ச்சி. திட்டத்தில் ரொம்பக் கஷ்டமான அம்சம் எதுவோ அது முடிந்துவிட்டது.


அன்று காலை, புதை காட்டைப் பார்த்துக் கொண்டிருந்த ஆள், கல்லறை ஓரிடத்தின் அருகே உள்ள பாதைகளைக் கூட்டிச் சுத்தம் செய்துகொண்டிருந்தான். அங்கே செல்வது புத்திசாலித்தனம் அல்ல. ஆகையால் தற்காலிகமாக இருக்கட்டும் என்று சுவரில் இருந்த பொந்தில் கட்டுமரப் பகுதியை வைத்தான் மாத்யூ. தினந்தோறும் காலையில் கல்லறைக்கு விரைந்து ஒரு மர மண்வெட்டியைக் கொண்டு மண்ணைச் சரிவரத் தள்ளிவிடுவேன். பாதையைக் கூட்டிவிட்டு, இரண்டு மடங்கு வேகத்துடன், என் மலத் தொட்டி வேலைக்குத் திரும்பி விடுவேன். மண்வெட்டியையும், துடைப்பத்தையும் நான் வேலை செய்யும் இடத்தில் மூலையில் வைத்து விடுவேன்.

எழுதியது: ஹென்றி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

தப்பி ஓடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கிக் கச்சிதமாய் நாலு மாதமாகிவிட்டது. கட்டுமரத்தின் கடைசிப் பகுதி எங்களிடம் வந்து சேர்ந்து ஒன்பது நாளாகிறது. இப்போது தினந்தோறும் பகலில் மழை பெய்து கொண்டிருக்கவில்லை. சில சமயங்களில் இரவு பூராவும் பெய்தது.

குறிப்பிட்ட இரண்டு தினங்களுக்காக என் புலன்கள் அனைத்தும் கூர்ந்து காத்துக் கொண்டிருந்தன. கட்டுமரத்தின் கடைசிப் பகுதியை மாத்யூவின் தோட்டத்தில் இருந்து எடுத்துச் சென்று விலாப்புறத்தில் எல்லாப் பகுதிகளும் இணை கிற மாதிரி கட்டுமரத்தில் பொருத்த வேண்டிய இடத்தில் பொருத்த வேண்டும். அது ஒரு நாள் பகல் வெளிச்சத்தில் மட்டும் செய்யக் கூடிய காரியம்.

(பட்டாம்பூச்சி பறக்கும்)



**கடந்த** வாரம் ஜனாதிபதி அவர்களால் அழைக்கப்பட்ட கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொள்ளாமல் விட்டதுடன் ஏன் கலந்து கொள்ளவில்லையென அவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்துவரும் கருத்துக்களும் ''ஆட முடியாதவள் அரங்கு பிழை என்றாளாம்'' என்கிற வகையிலேயே அமைந்துள்ளது. ஒரு புறம் வன்னி மக்களின் துயரைப் பற்றிப் பேசும் இக்கூட்டமைப்பினர் அம்மக்களின் பிரச்சினையைத் என்பது மிகத் தெளிவடைகிறது.

இதற்காகவே புலித்தலைமை வன்னிக்குள் உள்ள மக்களை அனைத்து உரிமைகளையும் நசுக்கி, அவர்களைச் சாவின் வாசலில் நிறுத்தி வைத்துள்ளது. புலிகளின் ஊடகங்களைப் பார்த்தால் தின மும் இத்தனை பேர் கொல்லப்படுகிறார்கள். இத்தனை பேர் காயப்படுகிறார்கள் என்கிற தகவல்களையும் அவலம் நிறைந்த புகைப்படங்களையும் பிரசுரிப்பதையே

# வன்னி மக்களின் துயரைப் பிரசார ஆயுதமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பயன்படுத்துகின்றனர்

தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை நிராகரிப்பது இவர்களின் உண்மையான அரசியல் முகத்தை மக்களுக்குக் காட்டுகிறது.

வன்னியில் மக்கள் கொல்லப்படுவதற்கும் பாதிப்புக்குள்ளாவதற்குமான சூத்திரதாரிப் பொறுப்பைப் புலித் தலைமைதான் ஏற்க வேண்டும். வன்னிக்குள் உக்கிரமான போர் நடைபெற்று வருகிறது. போருக்குள் சிக்குண்ள மக்கள் தம்முயிரைப் பாதுகாத்துக்கொள்ள போர் பிரதேசத்தை விட்டு வெளியேறத் துடிக்கின்றனர். இம்மக்களை புலித் தலைமைதான் தடுத்து வைத்திருக்கிறது. சாவுக்குத் தின்னக் கொடுக்கிறது. உயிர்தப்ப வன்னிக்குள் இருந்து வெளியேறிவரும் மக்களைப் புலிகள் சுட்டுக் கொல்கிறார்கள், அச்சுறுத்துகிறார்கள், தம்மை பாதுகாப்பதற்கான இறுதி ஆயுதமாக புலித்

> **ஜனாதிபதி என்கிற வகையில் அவருடன் பேசுவதன் மூலமே மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும், ஜனாதிபதியுடன் பேசாது, அவர் விடுத்த அழைப்பை நிராகரித்ததன் மூலம் வன்னி மக்கள் படுகின்ற அவலத்தைக் குறைப்பதற்கான வாய்ப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பயன்படுத்திக்கொள்ளத் தவறி இருக்கின்றனர். இவர்களது உண்மையான நோக்கம் வன்னி மக்களல்ல, பிரபாகரன் தலை மையைக் காப்பாற்றுவதேயாகும். இதற்காகவே தொடர்ந்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வன்னி மக்களின் மரணத்தையும் வாழ்வின் சிதைவையும் கண்ணீரையும் பிரசார ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.**

தலைமை மக்களைப் பயன்படுத்தி வருகிறது.

வன்னிக்குள் இருந்து வெளியேறி வவுனியாப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு இடைத்தங்கல் முகாம்களில் தங்கி இருப்பவர்களும், புலிகளின் ஆதிக்கத்திலிருந்து தினமும் தப்பிவரும் பொதுமக்களும் தெரிவிக்கின்ற கருத்துகளின் அடிப்படையைப் பார்க்கின்றபோது, மக்களின் சாவு-களைக் காட்டி, இந்த விவகாரத்தை மக்கள் படு-கொலை, மனித உரிமைகளை மீறுதல் என்கின்ற வகையில் பிரசாரப்படுத்துவதன் மூலமே சர்வதேச சமூகத்தின் தலையீட்டின் மூலம் தம் மீதான இலங்கை இராணுவ நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதே புலிகளின் வியூகமாக இருக்கிறது நோக்காகக் கொண்டிருக்கிறார்களே ஒழிய, இந்த மக்களைப் போரில்லாத பிரதேசத்திற்கு நகர அனுமதிக்கிறார்கள் இல்லை.

மக்களை பலிகொடுக்க கடை விரித்திருப்பது இந்தப் புலித் தலைமைதான் என்பது சித்த சுவாதீ-னமான அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். சர்வதேச சமூகத்திற்கும் இது நன்கு தெரியும். சர்வதேச சமூகமும், சர்வதேச மனித உரிமை நிறுவனங்களும் மக்களை வெளியேறிச் செல்ல புலிகள் அனுமதிக்க வேண்டுமென்றே தொடர்ந்தும் கோரி வருகின்றன.

அப்படி இருக்கையில் இந்த உண்மையை மூடி மறைத்து, வன்னி மக்களுக்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நீலிக் கண்ணீர் வடிப்பது அவர்கள் அரசியலில் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காகப் போட்டிருக்கும் நாடகப் பாத்திரத்தைக் காப்பாற்றுவதற்காகவேதான். அரசை நோக்கி விமானக் குண்டுவீச்சை நிறுத்துங்கள், உணவு, மருந்துகளை அனுப்புங்கள் என அறிக்கைப் போர் நடாத்தும் இவர்கள் ஏன் புலித்தலைமையை நோக்கி, இந்த மக்களை வன்னிக்குள்ளிருந்து வெளியேறிச் செல்ல அனுமதியுங்கள் எனக் கோர முடியாதுள்ளது.

**—பிரசாத்—**

ஜனாதிபதி என்கிற வகையில் அவருடன் பேசுவதன் மூலமே மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும், ஜனாதிபதியுடன் பேசாது, அவர் விடுத்த அழைப்பை நிராகரித்ததன் மூலம் வன்னி மக்கள் படுகின்ற அவலத்தைக் குறைப்பதற்கான வாய்ப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பயன்படுத்திக்கொள்ளத் தவறி இருக்கின்றனர். இவர்களது உண்மையான நோக்கம் வன்னி மக்களல்ல, பிரபாகரன் தலைமையைக் காப்பாற்றுவதேயாகும். இதற்காகவே தொடர்ந்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வன்னி மக்களின் மரணத்தையும் வாழ்வின் சிதைவையும் கண்ணீரையும் பிரசார ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

நமது மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் விரோத அரசியலையும் பொறுப்பற்ற தனத்தையும் உணர்ந்துகொள்ள இவர்களின் இந்த நடவடிக்கை மக்களுக்கு இன்னுமொரு வாய்ப்பை அளித்துள்ளது. மக்களை மரணத்தின் வாசலில் நிறுத்தி, தினமும் பலி கொடுக்கும் புலித் தலைமையின் அரசியலுக்குத் தொடர்ந்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் முண்டு கொடுத்து நிற்பது நமது மக்கள் நலனில் நின்று கண்டிக்கப்பட வேண்டிய முக்கியத்துவமான அரசி யல் விடயமாகி உள்ளது.


# "உறவுகளைத் தேடுகிறோம்"













வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். அவர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாகச் சந்தித்து வருகின்றார். அவர்களின் தேவைகள், குறை பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார்.


வவுனியாவில் தங்கியிருக்கும் அமைச்சர், நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களின் கல்வி, சுகாதாரம், மருத்துவம், தொடர்பாடல், தொழில் வாய்ப்புகள் போன்ற தேவைகள் குறித்து அதிகாரிகளுடனும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றார்.


அந்த மக்களுக்குத் தனியே அரசின் உதவிகள் மட்டுமல்லாது அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினதும், ஏனைய உதவி நிறுவனங்களினதும் உதவிகளையும் பெற்றுக் கொடுக்கவும் முயற்சித்து வருகின்றரர்.

வன்னி மக்களின் பிரச்சினைகளுக்கு மட்டுமல்லாது, வவுனியா வாழ் மக்களின் கோரிக்கைகள், தேவைகள் தொடர்பிலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உறவுகள், வன்னியிலிருக்கும் தமது உறவுகளின் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றனர். இவர்கள் உயிரோடு இருக்கின்றார்களா, இருந்தால் இன்னும் வன்னியில் புலிகளின் பிடியில் தான் இருக்கின்றார்களா, இல்லையெனின் இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வந்துவிட்டார்களா, அல்லது காயமடைந்து விட்டார்களா என்று எதுவும் தெரியாமல் தவிக்கின்றனர். மக்கள் தங்கியிருக்கும் நிலையங்களில் போய் அவர்களைப் புகைப்படங்கள் எடுத்து முரசு பிரசுரித்தால் உறவுகளைத் தேட வசதியாக இருக்கும் என்ற பல கேள்விகள் வந்து சேர்ந்துள்ளன. அந்த வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்த போது பிடிக்கப்பட்ட புகைப்படங்களின் ஒரு பகுதியை இவ்வாரம் முரசில் பிரசுரிக்கின்றோம். ''உறவுகளைத் தேடும்'' எமது உறவுகளுக்கு உதவுவதே எமது நோக்கமாகும். இந்த முயற்சி தொடரும்..









# மூன்றாவது



# திருமலை பேக்கரி உணவுகள் விஷமானது எப்படி?

முழு இலங்கையையுமே அதிர வைத்த மூன்று சம்பவங்கள் கடந்த மாதம் இடம்பெற்றன. இரண்டு சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையிலும், ஒரு சம்பவம் தென் மாகாணத்தின் மாத்தறையிலும் இடம்பெற்றன. திருகோணமலையில் ஆறு வயதுப் பாலகி ஜுட் வர்ஷா கப்பம் கோரிக் கடத்திக் கொல்லப்பட்டமை மனித நேயம் கொண்ட அனைவரையும் கோபத்தில் கொப்பளிக்க வைத்தது. அடுத்து மாத்தறையில் ஜெர்மன் சின்னமுத்து என்றழைக்கப்படும் ருபெல்லா நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு மரணமான 13 வயதுச் சிறுமியின் விவரமும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. பேக்கரி உணவுகள் நஞ்சானதால் ஒருவர் மரணமானதும் இருநூறுக்கும் மேற்பட்டோர் சுகவீனமுற்றதும் மீண்டும் திருகோணமலையைச் செய்திச் சரமாக்கியது.



திருகோணமலையில் இரண்டு பேக்கரிகளில் தயாரிக்கப்பட்ட மா உணவுப் பொருட்கள் நஞ்சாகியதாகக் கடந்த 23 ஆம் திகதி காலையில் வெளிவந்த அதிர்ச்சிச் செய்தி முதலில் புலிகளையே சந்தேகக் கண்ணோடு திரும்பிப் பார்க்க வைத்தது. இந்தப் பேக்கரிகளில் தயாராகிய உணவுப் பொருட்கள் பல்வேறு கடைகளிலும் விற்பனைக்கென விநியோகிக்கப்படுவது வழக்கம். பாண், கறி பணிஸ், பணிஸ் எனப் பல வகையறாக்கள் தயாரிக்கப்படுவது வழக்கம்.

பேக்கரியில் தயாரான கறி பணிஸ்களை வாங்கிக்கொண்டு மீன்பிடிக்கச் சென்ற கடல் தொழிலாளர்கள் சிலர் உணவு நஞ்சாகியதால் சுகவீனமுற்றனர். அறுபது வயது வயோதிபர் ஒருவர் மரணமானார்.

காலை உணவாகவும், மதிய ஆகாரமாகவும் பாண், பணிஸ்களை வாங்கிச் சென்ற மாணவ, மாணவியர்களையும் வாந்தியும் மயக்கமும் வாட்டியெடுத்தது. ஆஸ்பத்திரிகள் நிரம்பி வழிந்தன. அனைத்துப் பாடசாலைகளும் இழுத்து மூடப்பட்டன. பேக்கரி உணவுகள் சாப்பிட்ட மேலும் பலர் உள ரீதியான பாதிப்புக்களுக்கு இலக்கானார்கள். உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் பேக்கரி உரிமையாளர்கள் இருவரையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினார்கள். இவர்கள் இருவரும் ஆறாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட மா மற்றும் உப பொருட்களின் மாதிரிகள் இரசாயனப் பரிசோதனைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பேக்கரிகளும் சீல் வைத்து மூடப்பட்டன.


பங்கஸ் பக்டீரியாக்களே உணவுப் பொருட்கள் பழுதானமைக்குக் காரணமென்று தெரிவிக்கப்படுகிறது. எவ்விதமான சதிகார வேலைகளும் இடம்பெறவில்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருந்தாலும் இந்தளவுக்குப் பாதிப்புக்களையும் பரபரப்பையும் ஏற்படுத்துவதற்குக் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

திருகோணமலையிலுள்ள பிறிமா நிறுவனம் உற்பத்தி செய்யும் கோதுமை மாவையே உணவுப் பொருட்கள் தயாரிப்புக்குப் பேக்கரிகள் பயன்படுத்தி வருகின்றன. அப்படியானால் குறிப்பிட்ட இரண்டு பேக்கரிகளிலும் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் மட்டும் பாதிப்புக்களை ஏற்படுத்தியமைக்கான காரணங்கள்தான் என்ன?

பேக்கரி உணவுப் பொருட்கள் தயாரிப்பதற்கென தனியான தரம் கொண்ட மா இருக்கிறது. இதனை முதலாம் தர மா என்று அழைக்கலாம். இதற்கு அடுத்தபடியாகத் தரம் குறைந்த மா ஒன்றும் சந்தையில் இருக்கிறது. இந்த இரண்டாம் தர மா பேக்கரி உணவுப் பொருட்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுவதில்லை. ஏனெனில் முதலாம் தர மாவே உரிய அளவுக்கு நொதிப்பதோடு, உணவுப் பொருட்கள் உரிய அளவுக்கு ஊதிப் பெருப்பதற்கும் உதவியானவையாக உள்ளன.

இரண்டாம் தர மா ரொட்டி, பிட்டு, அப்பம் போன்ற உணவுப் பொருட்களின் தயாரிப்புக்களுக்காவே பயன்படுத்தப்பட்டு வருபவை. முதலாம் தர மாவை விட இரண்டாம் தர மா விலை குறைந்தது. இரண்டாம் தர மாவை பேக்கரி உணவுப் பொருள் தயாரிப்புக்குப் பயன்படுத்த வேண்டுமானால் அவற்றை நொதிக்க வைப்பதற்கு விஷேட இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். அதற்கென விஷேடமான பவுடர் வகைகளை பேக்கரி உரிமையாளர்கள் பயன்படுத்துகின்றனர். அப்பம் சுடுவதற்குத் தேவையான மாவை நொதிக்க வைப்பதற்கு கள்ளு, ஈஸ்ற் போன்றவை பயன்படுத்தப்படுவதுண்டு. அதனைப் போன்றே பாண், பணிஸ் போன்ற பேக்கரி உணவுப் பொருட்களைத் தயாரிப்பதற்கு இந்தப் பவுடரை பேக்கரி உரிமையாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். கூடுதல் இலாபம் பெறுவதற்காகக் குறைந்த தரம் கொண்ட மாவையும், பவுடர் வகையையும் பயன்படுத்தியதே உணவுப் பொருட்கள் பழுதானமைக்குப் பிரதான காரணம். ஒன்றில் பயன்படுத்தப்பட்ட தரம் குறைந்த மாவில் பூஞ்சணம் பிடித்திருக்கலாம். அல்லது அளவுக்கதிகமான இரசாயனப் பவுடர், உணவுப் பொருள் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டிருக்குமென்றே பொதுவாகச் சந்தேகிக்கப்படுகிறது.

உணவுப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகளில் திடீர்ப் பரிசோதனைகள் நடத்த வேண்டிய பொறுப்பு சுகாதாரப் பரிசோதகர்களுக்கு உண்டு. அரசாங்கம் சம்பளமும், பயிற்சியும் கொடுத்து நாடு பூராவுமே இவர்களை நியமித்திருக்கிறது. ஆனால்



இவர்களில் சிலர் அரசாங்கத்தில் சம்பளமும் கடை உரிமையாளர்களிடம் கிம்பளமும் வாங்கிக்கொண்டு செயற்படுகிறார்கள். இதனால்தான் இவ்வாறான பிரச்சினைகளுக்கு மக்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. கொழும்பு போன்ற ஜன நெருக்கடி மிக்க இடங்களில் உள்ள உணவுச் சாலைகளில் பெரும்பாலும் சுத்தம் பேணப்படுவதில்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாக ஒப்புக்கு இரண்டொரு வழக்குகளையே சுகாதாரப் பரிசோதகர்கள் மாதாந்தம் தாக்கல் செய்கிறார்கள். கொழும்பிலுள்ள பெரும்பாலான உணவுக் கடைகளின் சமையலறைகளுக்குச் சென்று பார்த்தால் வயிற்றைக் குமட்டிக்கொண்டு வரும் என்று கூறப்படுவதில் உண்மைகளும் இல்லாமலில்லை.

# நெரிச்சல் வெளி

"நாம் மிருகங்களைக் கொல்கிறோம். அது கொலையாகக் கருதப்படுவதில்லை. ஆனால் மனிதர்களைக் கொன்றால் அதைக் கொலை என்கிறோம். நம்மை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது மொழி ஒன்றுதான். ஆக,



ஜெயலலிதா

நாம் பேசும் மொழியை மிருகம் பேசுவதில்லை என்பதாலேயே அதைக் கொன்றால் அது கொலையாகக் கருதப்படுவதில்லை. அப்படியானால் மொழி என்பது எவ்வளவு பெரிய வன்முறை?" என்றார் மார்க்கி தெ ஸாத். மொழி அடிப்படையிலான தேசியம் என்பது எவ்வளவு வன்முறைக்கும் பாசிஸத்துக்கும் இட்டுச்செல்லக்கூடியது என்பதையறிய நாம் வேறெந்த வரலாற்றையும் தேடிப் போக வேண்டியதில்லை.

இன்றும் மீதமிருக்கும் மக்களை அழிக்கின்ற தமிழ்வீறையே உலகெங்குமுள்ள மொழித் தேசிய வெறியர்கள் காண்பித்து வருகிறார்கள். அந்த மக்களின் அழிவிலும் அவலத்திலும் கிடைக்கப்போவது மொழித் தேசியக்காரர்களின் நடப்பும் இறுமாப்புத் திருப்தியுமேயொழிய, மக்களுக்கான எந்தத் தீர்வும் கிடையாது என்பதை புலித் தமிழர்களின் உள்மனமும் அறியும். தீர்வெதையும் விரும்பாத, வெறும் ரோசச் சண்டியர்களின் பொங்குகையே உலகப் புலித் தமிழர்களின் குரலாக ஒலிக்கிறது.

மூக்கிலிருந்து சளி வருவதால் சளிக்குக் காரணம் மூக்குதான். எனவே சளியை நிற்பாட்டுவதற்கு மூக்கை வெட்ட வேண்டும் என்பதற்கப்பால் யாரையும் சிந்திக்க விடுகிறவர்களாக இவர்கள் இல்லை. யுத்தத்துக்கும், இன்றைய மக்கள் அழிவுக்கும், முந்திக்கொண்டு எதிர்த்தரப்பை மட்டுமே குற்றம்சாட்டிக் கூச்சலிடுகிற, மனிதாபிமானிகளுக்குள் மறைந்திருப்பது வெறும் புலியபிமானத் தமிழ் வெறியே. புலி இருக்கும்வரை இந்தச் சளியும் (சண்டையும்) இருக்கும் என்பதைப் புரிந்துகொள்வதே மக்களை அழிவிலிருந்து காப்பதற்கான முதல் வழி! யாராலும் திருத்தவோ மாற்றவோ முடியாத புலிகளின் ஆட்டம் முடிவுக்கு வருவதில்தான் தமிழ்மக்களின் நிம்மதியான வாழ்வுக்கான முயற்சிகள் துவங்க முடியும். தமிழீழக் கனவை மறந்து, தமிழ் மக்களின் வாழ்வு பற்றி அக்கறைப்படுபவர்களின் கண்ணீருக்கே மனிதாபிமான அர்த்தமிருக்க முடியும்.

உலக நாடுகளின், உள்நாட்டிலுள்ள சகோதர இனங்களின், ஏன் உள்நாட்டுத் தமிழர்களின் நம்பிக்கையை எல்லாம் இழந்து, வெறுமனே மக்களின் வாழ்வைச் சிதைத்துக் கொண்டிருக்கிற ஆயுதக்குழுவாய் அடையாளம் காணப்பட்டுவிட்ட புலிகளை, தங்களது ஆதிக்க, ரோசக் கனவுகளுக்காகக் காப்பாற்றிவிட வேண்டும் என்கிற கடைசி இனவெறிக் குரலை எழுப்பிக் கொண்டிருப்பவர்களாக இன்று உலகப் புலித் தமிழர் சிலரும், அயலகத் தமிழ் அடிப்படைவாதிகள் சிலருமே மிஞ்சியிருக்கிறார்கள்.

ஈழத்தமிழர்களுக்காக வழிந்தோடிய தமிழகத் தலைவர்களின் கண்ணீர் எல்லாம் அவரவரது தேர்தல் வெற்றிக்காக இப்போது திருத்தியமைக்கப்படுகின்றன. தற்கொலை ஊக்குவிப்புகளையும் கண்ணீரையும் சற்று ஒத்திவைத்துவிட்டு கதிரைகளைப் பிடிக்கும் கூட்டணிச் சேர்க்கைகளில் இறங்கியிருக்கிறார்கள். இங்கிருந்து அங்கே போய் இவர்களுக்கிடையில் சுழித்தோடிக்கொண்டிருந்த "நடிகர் திலக" லிங்கத்தார் போன்றோரெல்லாம், புலி அணி எது புலியெதிரணி எது என்று கண்டு ஒரு அசட்டுச் சிரிப்பைக்கூட சிரித்துவைக்க முடியாதவாறு குழம்பி, இனி அசைவதற்கு எந்த நாடு சரிவரும் என்று ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள்.

வைகோவும் ராமதாஸும் இடதுசாரிகளும் அ.தி.மு.க. தலைமையின்கீழ் வாக்குக் கேட்க இருப்பதால் அவர்களது ஈழ ஒப்பாரிக் கண்ணீரின் பின்னால் இருக்கப்போகும் நாடகத்தன்மையை அனைவரும் இலகுவில் விளங்கிக்கொள்ளக் கூடியதாய் இருக்கும். உலகத் தமிழினத்தின் தலைவராகக் கருதப்படும் கலைஞர், காங்கிரஸ் கூட்டிலிருப்பதால் அங்கிருந்து வரும் கண்ணீர் புலித் தமிழர்க்குப் புகைச்சலைக் கிளப்புவதாகவே இருக்கும்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தா.பாண்டியன் போன்றோரது திடீர்த் தமிழ்த் தேசிய எழுச்சியானது, அவர்கள் காங்கிரஸ் கூட்டிலிருந்து விலகி வந்துவிட்டதால் காங்கிரஸை எதிர்ப்பதற்கும், தமிழ்த் தீவிரவாதிகளின் வாக்குகளைக் குறிவைத்ததும் என்பதை விளங்கிக் கொள்வதில் ஒன்றும் சிரமமில்லை.

அவர் கொழும்பு வந்து சரஸ்வதி மண்டபத்தில் அமிர்தலிங்கம் நினைவுப் பேருரையாற்றுகையில், புலிகளின் கொலையரசியலைக் கண்டித்து முழங்கியதையும், புலிகளின் அழிவில்தான் ஈழத் தமிழர்களுக்கு இனி நிம்மதியான வாழ்வு உருவாக முடியும் என்று புரிந்து கொண்டிருந்ததையும் எல்லோருமறிவர். பின்னர், அங்குள்ள அரசியல் தேவைக்காகவே புலி ஆட்ட அணிகலன்களைத் தேடி எடுத்து அவர் அணிந்து கொண்டிருக்க வேண்டும். புலிகளைக் காப்பாற்றித் தமிழ் மக்களை மேலும் மேலும் அழிக்கும் உணர்ச்சியாவேச அரசியலில் வாக்குப் பெட்டிகளை நிரப்பிவிட அவர் பொங்கியதைக் காணமுடிந்தது.

இப்போது அவரும் அ.தி.மு.க. அணியில் சேர்ந்துவிட்டதால் ஆவேசத்தின் சுருதியைத் தனியே கலைஞருக்கும் காங்கிரஸுக்கும் எதிரானதாகச் சிறிது மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவின் நிலைப்பாட்டோடு முரண்படாமல் ஈழத் தமிழர்க்கான கண்ணீரைவிட வேண்டியிருக்கும். அதாவது, புலிகளை அழிக்க வேண்டும். இலங்கையில் தமிழ் மக்களைக் காக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறவிதமாக வீராவேசத்தின் சுக்கானைத் திருப்பிப் பிடிக்க வேண்டும்.

இவ்விதமாக, புலிகளையும் மக்களையும் தெளிவாக வேறு பிரித்து அறியும் அவர்தம் மாக்சிய ஞானத்துக்கு வந்துசேரவும் தேர்தல் வாக்குகளின் தேவை உதவுவதாக அமையும். இவ்விடத்தில் பிரபல இந்திய மார்க்சியரான இஜாஸ் அஹமது அவர்களின் கருத்துக்களைத் தருவது பொருத்தமானது:

"பெரும்பாலான தேசியங்களின் தாக்கம், கலாசார பன்முகத்தன்மையை நோக்கியோ; உள்ளார்ந்து கொள்வதை நோக்கியோ, பல்முரண் தன்மையை உள்ளடக்கியது நோக்கியோ



வைகோ

இல்லை. மாறாகத் தனித்ததொரு தன்மையை, சுத்திகரித்தலை அல்லது பெரும்பான்மைவாதத்தை நோக்கித்தான் இருக்கிறது. இந்தச் சாய்வினால்தான் நமது காலத்தில் தேசியம் என்பது இனவாத - நிறவாதத்துக்கு நெருங்கிய சொந்தமாக இருக்கிறது.... நம் காலத்தின் தேசியங்கள் ஒடுக்குமுறையானதாகவும் இன்னும் பாசிசமாகவும் வந்துவிட்டது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சமத்துவம், உலகமயமான நாகரிகம், பல்கலாசாரம் போன்றவற்றை அது மறுத்துவிட்டது. எல்லாப் பாசிஸங்களும் அதி தேசியக் கருத்தியலினால்தான் கட்டப்பட்டன."

வெறும் தேசியவெறி கொண்டு நடத்தப்படும் போர் மக்களை வன்முறைக்கும் பாசிஸத்துக்குமே அடிமையாக்கிவிடும் என்பதை நாமும் கண்டுவிட்டோம். இதிலிருந்து மீள்வதற்கு நாம் - எட்ட இருந்து கண்ணீர் சிந்தும் உலகத் தமிழர்களையோ, தமிழகச் சகோதரர்களையோ நம்பியிருக்க முடியாது என்பதையும் புரிந்துகொண்டுவிட்டோம்.

— சுல்தான் —

மனதுக்கு நிம்மதி

# முழு மனத்தோடு பாராட்டுங்கள்!

பிறர் தன்னை வியந்து போற்ற வேண்டும். தன்னிடம் அமைந்துள்ள சிறந்த குணங்களுக்காகத் தன்னைப் பிறர் வியந்து போற்ற வேண்டும் என்ற ஆசை ஒவ்வொருவரிடமும் வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்திலிருந்தே இருப்பது இயற்கை. பிறர் தன்னை வியந்து போற்ற வேண்டும் என்ற ஆசை நிறைவேற்றப்படுமேயானால் பிறகு வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியங்களைத் தேடிக்கொள்வது அவருக்குச் சாத்தியமாகும்.

இந்த ஏக்கம் தீரவில்லை என்று வைத்துக் கொள்வோம். அதாவது, ஒருவரது நல்ல குணங்களையும், சிறந்த காரியங்களையும் நாம் பாராட்டக் கூடிய சாதனைகளையும் வியந்து போற்ற யாருமில்லை என்றால், பிறகு அந்த மனிதர் தீயவர்களின் வலையில் விழுந்துவிடக் கூடிய அபாயம் உள்ளது. போலியான புகழ்ச்சி மூலம் அவரைக் கவர்ந்து அதற்கு விலையாக ஆர்ப்பாட்டங்களிலும், கலகங்களிலும் வன்முறையிலும் கூட அவரை ஈடுபட வைத்துவிடுவார்கள்.

எந்தக் குணங்களும் செயல்களும் வியந்து போற்றப்படுகின்றன என்பதைப் பொறுத்து, வாழ்க்கையையே மாற்றிவிடக் கூடிய ஒரு நல்ல, அல்லது கெட்ட திருப்பமாக இந்த உள்மனத் தேவை அமைய ஏதுவுண்டு.

ஆக்க சக்தியாளர் என்ற முறையில் வியந்து போற்றுவது என்னும் உத்தியை நல்ல முறையில் பயன்படுத்துங்கள். உயர்ந்த இலட்சியங்களையும் சிறந்த சாதனைகளையும் அடையுமாறு உங்கள் சொந்த உலகத்திலுள்ள மனிதர்களை ஊக்குவிப்பீர்கள்.

ஒவ்வொரு மனிதருடனும் ஒவ்வொரு முறை பேசும் போதும் அல்லது எழுதும் போதும் அவரது நற்குணங்களையும் சாதனைகளையும் உடைமைகளையும் வியந்து போற்ற வேண்டும் என்பது வெளிப்படை.

இதை எப்போதாவது ஒருமுறை செய்து பயனில்லை. ஒவ்வொரு முறையும் செய்ய வேண்டும். ஒவ்வொரு தடவையும் ஒரு நீண்ட பாராட்டுப் பட்டியல் வாசிப்பது என்பது இயலாத காரியம்தான். மனப்பூர்வமாக ஏதேனும் ஒன்றையாவது கட்டாயம் புகழ்ந்து பேச வேண்டும். எவருடன் உரையாடினாலும் அல்லது யாருக்குக் கடிதம் எழுதினாலும் ஒரு பாராட்டு வாக்கியத்தோடுதான் முடிக்க வேண்டும்.

முழுமனத்துடன் வியந்து போற்றுவது எப்படி என்பதை ஆராய்வோம்.

இரு வழிகள் உண்டு:

1.செயல் மூலம் உங்கள் வியப்பைத் தெரிவிக்கலாம்:

உங்கள் வியப்பைக் கண்கூடாகக் காட்டலாம். பல ஆண்களுடைய கவனத்தைக் கவர்ந்த ஓர் அழகிய பெண்ணிடம் அவள் அழகை அவர்கள் வியந்து போற்றுகிறார்கள் என்று சொல்ல வேண்டிய தேவை இல்லை.

அழகிய பெண்கள், கவர்ச்சியான ஆண்கள், மற்றும் சுவாரசியமான ஈர்ப்புச் சக்தியுள்ள ஆண்- பெண்கள் இவர்களை மட்டுமே கண்கூடாக வியக்க வேண்டும் என்பது கிடையாது. சில பொருட்களை நாம் பார்க்கும் பார்வையிலேயே அந்த வியப்பு வெளிப்படையாகத் தோன்றக் கூடும்.

சிலரது உடைமைகள் வித்தியாசமாகவும் வனப்புடனும் இருக்கும். அந்தப் பொருட்கள் குறித்து அவர்கள் கர்வம் கொண்டிருக்கக் கூடும். அவற்றை யாரேனும் பார்த்து வியக்கிறார்கள் என்று வெளிப்படையாகத் தெரியும் பட்சத்தில் அவர்கள் அதைக் கவனிக்கத் தவறமாட்டார்கள் மகிழ்ச்சி கொள்வார்கள். நன்றி பாராட்டுவார்கள். சும்மா உட்கார்ந்திருக்காதீர்கள். எழுந்து போய்க் கலையழகு மிகுந்த, அல்லது வேறு வகையில் (குறிப்பிடத்தக்க) அந்தப் பொருளைக் கூர்ந்து கவனித்து உங்கள் வியப்பையும் புகழ்ச்சியையும் காண்பியுங்கள்.

2. உங்கள் பாராட்டை பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் தெரிவியுங்கள்.

உங்கள் தோற்றத்தால் காட்டுகின்ற பாராட்டைத் தவிர வார்த்தை வழியாகத் தெரிவிக்கின்ற பாராட்டும் உண்டு. வெளிப்படையாகவும், முழுமனத்தோடும், ''உங்களுடைய (பொருளைக் குறிப்பிட்டு) நான் பெரிதும் வியக்கின்றேன்''.... அல்லது ''நீங்கள் சொன்னது அருமையான யோசனை!''... அல்லது அற்புதமாகச் செய்திருக்கிறீர்கள்!''... அல்லது ''உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்!'' என்று கூறுங்கள்.

நீண்ட பிரசங்கம் செய்ய வேண்டிய அவசியமில்லை. சொல்லப் போனால் அப்படிச் செய்யாமல் இருப்பதே நல்லது. நாலு பேருக்கு மத்தியிலும் சரி மனோதத்துவ ரீதியிலும் சரி, அடித்தளத்திலிருந்து வருகின்ற ஒருசில பாராட்டு வார்த்தைகளே மிகுந்த பலனளிக்கும். சிலருக்கு, பாராட்டுக்குரிய தன்மைகள் சற்றுக் கூடுதலாக இருக்கக்கூடும். சிலருக்குக் குறைவாக



இருக்கக்கூடும். அது இயற்கை. ஆனாலும் நீங்கள் வியந்து போற்றக் கூடிய ஒரு குணத்தை (அல்லது பல குணங்களை) நீங்கள் முயன்று கண்டுபிடிக்க வேண்டும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாராட்ட வேண்டும் என்பது உங்களுக்கு ஞாபகம் இல்லாமல் போய்விடக்கூடும். அதுதான் பிரச்சினை.

அதற்கு, 'சபாஷ் விளையாட்டு' என்று பெயர். அதன் விதிமுறைகளை நீங்கள் பின்பற்றுவீர்களேயானால், வாய்ப்பு எழும்போதெல்லாம் ஒவ்வொரு மனிதரையும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் தவறாமல் பாராட்டிவிடுவீர்கள்.

''சபாஷ் விளையாட்டை'' ஆடுகின்ற முறை இதுவே:

1.உங்களுக்கு நீங்களே சவால் விட்டுக் கொள்ளுங்கள் -''நான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிடமும், உண்மையிலேயே வியந்து பாராட்டக்கூடிய குணம் ஏதாவது ஒன்றையேனும் கண்டுபிடிக்கப் போகின்றேன்'' என்று.

2.அவரிடத்தில் (ஆண் அல்லது பெண்) நீங்கள் கண்ட குணம் குறித்து நேரிடையாகவும் மனப்பூர்வமாகவும் பாராட்டுத் தெரிவியுங்கள். (விளையாட்டு விதிகளின்படி, ஒரு மனிதரை ஒரே நாளில் பல முறை சந்திக்க நேர்ந்தால் ஒவ்வொரு முறையும் பாராட்ட வேண்டிய அவசியம் கிடையாது. ஒரு தடவை பாராட்டினால் போதும். ஆனால் பொருத்தமாக இருந்தால் எத்தனை முறை வேண்டுமானாலும் பாராட்டலாம்.)

3.பல நிமிடம் ஒருவரோடு பழக நேரிட்ட பின்னரும் அவரை நீங்கள் முழுமனத்துடனும் வெளிப்படையாகவும் பாராட்ட ஒரு வாய்ப்பும் கிடைக்கவில்லை என்றால் விளையாட்டில் நீங்கள் தோற்றவர் ஆவீர்கள். உங்கள் பர்ஸிலிருந்து ஐந்து ரூபாய் எடுத்து ஒரு டப்பாவிலோ உண்டிப் பெட்டியிலோ போட்டு வையுங்கள். பணம் சேர்ந்தவுடன் இந்த 'அபராதக் கணக்'கில் சேர்ந்த பணத்தை வங்கியில் ஒரு தனிக் கணக்குத் திறந்து அதில் போடுங்கள்.

வாழ்க்கையின் மிக முக்கிய பாடங்களில் ஒன்றைக் கற்றுக் கொண்டவர் ஆவீர்கள். வியந்து பாராட்டத்தக்க தன்மை ஒன்றையேனும் ஒவ்வொரு மனிதரிடத்திலும் உண்டு என்ற உண்மையை உணர்ந்தவர் ஆவீர்கள்.

உங்களுடைய சகவாசத்தை மக்கள் ஆவலோடு எதிர்பார்ப்பார்கள்.

ஏனெனில், உற்சாகப்படுத்தக்கூடிய பாராட்டை நீங்கள் தருவீர்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். பாராட்டுக்காக ஏங்கும் அவர்களது உள்மனம், உங்களது புகழ்ச்சியையும் அதனால் நிகழக்கூடிய பொலிவையும் எதிர்பார்த்து நிற்கும்.

நீங்கள் உங்கள் செல்வாக்கை எக்கச்சக்கமாகக் கூட்டிக் கொள்வீர்கள்.

உங்கள் ஆக்க சக்தியைப் பெரிதும் பெருக்கிக் கொள்வீர்கள்.

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.313 க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

க.சயந்தினி, தரம் -04, சீநிய புஸ்பம் மகளிர் மகாவித்தியாலயம், கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. கந்தசாமி சித்திரா, சுளிபுரம் பத்திரகாளி கோவிலடி, சுழிபுரம்.
02. பூவியர் லூட் நிவேதிகா, தரம் -06, புனித மரியாள் பாடசாலை, ஊர்காவற்துறை.
03. ஜெயக்குமார் (ரமேஸ்) கிசாந்தன், கண்டிவீதி, தாண்டிக்குளம், வவுனியா.
04. சிவலிங்கம் மயூரன், அளுத்மாவத்தை, கொழும்பு -15.
05. நிமலரூபன், வாழைச்சேனை, பேத்தாளை, மட்டக்களப்பு.
06. கிங்ஸ்ரன், பாலையூற்று, திருகோணமலை.
07. சீ.சாந்தகுமார், நடுக்குடா, மன்னார்.
08. இ.துளசி, பீரிஸ் றோட், கல்கிஸை.
09. சிறிசாந்த், கல்யாணி மாவத்தை, வத்தளை.
10. சி.தமயந்தினி, பிரதான சந்தை வீதி, கொடிகாமம்.

### குறுக்கெழுத்துப் போட்டி 315

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | ■ | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | ■ |
| 19 | 20 | ■ | 22 | ■ | 24 |
| ■ | 26 | 27 | ■ | 29 | 30 |
| ■ | 32 | 33 | 34 | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

01. வசிட்டரின் மனைவி
10. வழிப்பறிக் கொள்ளையை இவ்வாறும் அழைப்பர். (திரும்பியுள்ளது)
13. இவனுக்குப் புல்லும் ஆயுதம்.
19. பாதை என்றும் சொல்லலாம். (திரும்பியுள்ளது)
26. வேகம்.
29. பாதத்தின் பின்பகுதியை இப்படி அழைப்பர்.
32. இருத்தல்.

**மேலிருந்து கீழ்**

01. தகாத வழி.
04. சமுகத்தை வழிநடத்திச் செல்பவன்.
05. அறிவு.
14. கூவுதல், அழைத்தல் என்றும் சொல்லலாம். (தலைகீழ்)
24. கேள்வி என்பதன் எதிர்ப்பதம்.
27. சந்திரன். (தலைகீழ்)
29. பொருந்து. (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 313- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ண் | 2 மா | 3 வத் | 4 ரு | ■ | 6 தீ |
| 7 ச | 8 ரி | ■ | 10 ண் | 11 சி | 12 ல |
| 13 ரு | ■ | 15 சு | 16 ச் | 17 ரி | 18 க |
| 19 ச | 20 ம | 21 ரி | ■ | ■ | 24 ம் |
| ■ | 26 ம் | 27 த் | 28 ம | ■ | 30 ரு |
| 31 ரை | 32 க | ■ | 34 ஆ | ■ | ■ |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 07.04.2009 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-315
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## ஞாபகச் சக்தியின் அதிசயம்



இது நம் அனைவருக்குமே நிகழும் அதிசயம். ஒரு வாசனை, ஓர் ஒலி அல்லது ஒரு காட்சி கூட நமக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தரும். ஆனால் நம் மனதை ஆழ்ந்து செயல்படுத்தாவிட்டால் எப்போது, எங்கு அந்த ஒலியைக் கேட்டோம், காட்சியைக் கண்டோம், வாசனையை நுகர்ந்தோம் என்று தெரியாது.

இந்த விஷயம் குறித்து கனடா நாட்டு நரம்பியல் நிபுணரான வில்டர் பென்பீல்டு 1951ஆம் ஆண்டு ஆய்வு மேற்கொண்டார். அந்த ஆய்வில் அவர் கண்டுபிடித்த விஷயங்கள்: நமது மூளை அதிதிறன் வாய்ந்த ஒரு 'டேப் ரிக்கார்டரை' போன்றது. சாதாரண 'டேப் ரிக்கார்டரை' போலவே மூளையாலும் பதிவு செய்த விஷயங்களைத் தேவையானபோது ஓடவிட முடியும். மூளையில் உள்ள அந்தப் பதிவுகள் நிரந்தரமானவை.

அவற்றை நினைவுபடுத்திப் பார்க்கும் திறன் வேண்டுமானால் மனிதருக்கு மனிதர் மாறுபடலாம். ஆனால் விமானத்தின் 'கறுப்புப் பெட்டி'யைப் போல மூளையில் பதிவான விஷயங்கள் நாம் உயிரோடு இருக்கும் வரை அழிவதில்லை. குறிப்பிட்ட நேரத்தில் கண்ட காட்சி அல்லது ஒலி மட்டும் மூளையில் பதிவாவதில்லை. அதனுடன் சம்பந்தப்பட்ட உணர்வும் கூட பதிவாகிறது. எனவே திரைப்படத்தில் கதாநாயகன் சிறுவயதில் பிரிந்த தனது சகோதரனை அவன் தங்களின் 'குடும்பப் பாடலை' பாடுவதைக் கொண்டு தெரிந்து கொள்வதாக வந்தால் கிண்டல் செய்யாதீர்கள்!





"வேண்டாமாம்மா..... நீ வீட்டுக்குள்ள போ!"

சோபனா அங்கிருந்து நகர்ந்தாள். போகும்போதே தன் உதடுகளில் படிந்திருந்த இரத்தத்தை அவள் துடைத்துக்கொண்டதை நாராயணன் நம்பூதிரியால் கவனிக்க முடியவில்லை.

தனது அறைக்குள் நுழைந்த சோபனா கதவை மூடிவிட்டுப் படுத்துக் கொண்டாள். ஒரே மூச்சில் தேவைக்கும் அதிகமான இரத்தம் கிடைத்து விட்டதில் அவள் மிகவும் திருப்தி அடைந்தாள்.

நாராயணன் நம்பூதிரி, எரியாத விளக்குடன் தனது அறைக்குத் திரும்பி வந்தார்.

மறுபடியும் விளக்கைப் பற்ற வைத்தார். இம்முறை தீப்பெட்டியுடன் தொழுவத்துக்குச் சென்றார்.

அப்போதும் பசுமாட்டின் கழுத்திலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. ஆனால், அது இறக்கவில்லை.

உடனடியாக ஏதாவது செய்யாவிட்டால், பசுமாடு இறந்து போகும் என்று நினைத்தவர், அவசர அவசரமாக வீட்டிலிருந்து வெளியேறி அருகிலிருந்த பாஸ்கரனின் வீட்டை அடைந்தார்.

"பாஸ்கரா.... பாஸ்கரா.... கொஞ்சம் எழுந்து வா!" கதவைத் தட்டியபடி குரல் கொடுத்தார்.

சற்று நேரத்துக்குள் பாஸ்கரன் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான்.

"என்ன திருமேனி.... என்ன நடந்தது?" பாஸ்கரன் எதிர்பார்ப்புடன் விசாரித்தான்.

"எல்லாத்தையும் விபரமா சொல்றேன்... நீ முதல்ல சட்டையை மாட்டிட்டுக் கிளம்பு."

தொழுவத்துக்கு வந்து பசுவைப் பரிசோதித்த பாஸ்கரன் கூறினான்: "திருமேனி மாடு சாகலை. இதை இங்கே

**தமிழில் - சிவன்**

சாகவிடாம உடனே இடம் மாத்தணும்."

"உன் இஷ்டப்படி என்ன வேணும்னாலும் செஞ்சுக்க... நான் வர்றேன்." நாராயணன் நம்பூதிரி வீட்டுக்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டார். படுக்கையில் கிடந்தாலும் உறக்கம் அவரை நெருங்கவில்லை. நடந்த சம்பவங்கள் மீண்டும் மீண்டும் அவர் கண்ணுக்கு முன்பாகத் தெளிவடைந்து கொண்டிருந்தன.

பொழுது விடிந்ததும் நாராயணன் நம்பூதிரி தொழுவத்துக்குச் சென்று பார்த்தார். அதுவரை குடும்பத்தில் இலட்சுமிகரமாகத் திகழ்ந்த பசுமாட்டின் எந்த ஓர் அடையாளமும் அப்போது இங்கு தென்படவில்லை.

கன்றுக்குட்டி மட்டும் ஓயாமல் குரல் எழுப்பிக்கொண்டிருந்தது. பாஸ்கரன் தொழுவத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தியிருந்தான்.

'ஏதோ ஒரு மிருகம் பசுவைத் தாக்கியிருக்கிறது!' என்று தாமாகவே ஒரு முடிவுக்கு வந்து ஆறுதலடைந்தார் நம்பூதிரி.

கடந்த நான்கு நாட்களாக சோபனா கோயிலுக்குச் செல்லவில்லை. அதே போல் சமையல் அறைக்குள்ளும் நுழையவில்லை. ஆனால், புதிது புதிதான சமையல் முறைகளை, வழக்கத்துக்கு மாறாக அவள் பாட்டிக்குக் கற்றுக் கொடுத்தாள். பாட்டிக்கோ நடப்பதெல்லாம் ஒரே ஆச்சரியமாக இருந்தது.

"நாம இப்படிச் செஞ்சா என்ன?" சோபனா கோயிலுக்குச் செல்ல முற்பட்டபோது, நாராயணன் நம்பூதிரி கேட்டார்.

"எதைப் பத்திச் சொல்றீங்க?"

"கோயிலுக்கு ஒரு பூசாரியை நியமிச்சுட்டா என்ன?"

"அதுக்குன்னு தனியா செலவு பண்ணணுமே!" சோபனா தனது கருத்தைத் தெரிவித்தாள்.

"அதுக்கு என்ன பண்றது? நம்ம நிலைமைக்குச் சரிப்படுற மாதிரி யாரையாவது பார்க்க வேண்டியதுதான்" திருமேனி இதைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, தெருவாசற் படியில் முன்பின் தெரியாத மனிதன் ஒருவன் தென்பட்டான்.

பொழுது விடியும் தருணம்.

வந்தவன் இளைஞன். நான்கு முழ வேட்டி- ஸ்லாக் ஷர்ட் அணிந்திருந்தான். அவன் தோளில் பை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. மேற்புற பட்டன் போடாத இடைவெளியில் மார்புப் பூணூல் தெரிந்தது.

நம்பூதிரி அந்த இளைஞனை சந்தேகத்துடன் பார்த்தார்.

"யாரது..... இப்படி வாங்க தம்பி" இருப்பினும் வந்தவனை அவர் வரவேற்கத் தவறவில்லை. அந்த இளைஞனைப் பார்த்ததும் சோபனா வீட்டுக்குள் சென்றாள். உட்புறக் கதவின் இடைவெளி வழியாக நடப்பதை வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள்.

இளைஞன் முற்றத்தைக் கடந்து துளசி மாடத்தின் அருகே நின்றான்.

சோபனாவின் கணிப்பில் அவன் பழகுவதற்கு இனிமையானவனாகத் தென்பட்டான். ஆரோக்கியமான, வாளிப்பான உடல். தலைமுடியை ஒரு புறமாக ஒதுக்கிவிட்டிருந்தான். மீசையை



அளவாகக் கத்தரித்து ஒழுங்குபடுத்தியிருந்தான். பளபளப்பான கண்கள். நீண்ட மூக்கு.

"இப்படி உட்காருங்க" திருமேனி இருக்கையைச் சுட்டிக் காட்டினார்.

இளைஞன் வராந்தாவிலிருந்த நாற்காலியில் உட்காராமல், பூஜையறையை ஒட்டிக் கிடந்த தடுக்கை இழுத்துப் போட்டு அதில் அமர்ந்தான். தோளிலிருந்த பையை எடுத்து அருகிலேயே வைத்துக் கொண்டான்.

"என்னை நான் அறிமுகப் படுத்திக்கலாமா?" இளைஞன் பணிவுடன் நம்பூதிரியிடம் கேட்டான்.

"ம்.... சொல்லுங்க!"

"என் பெயர் தேவராஜன். சொந்த ஊர் பாலக்காடு. இல்லத்தோட பேரு எழுமாயில்மனை. அப்பா தவறிவிட்டார். அம்மா இருக்காங்க. பேரு அஸ்வதி அந்தர்ஜனம். பெரியப்பாவும் பாட்டியும் எங்க கூட தங்கியிருக்காங்க."

அவன் பேசுவதைக் கேட்ட நாராயணன் நம்பூதிரி சிலை மாதிரி அப்படியே அசையாமல் உட்கார்ந்திருந்தார்.

கம்பீரமான குரல் இளைஞனுடையது. எவரையும் கவரக் கூடிய நடவடிக்கைகள்.

"என் அப்பாவைப் பத்தி நீங்க கேள்விப்பட்டிருக்கலாம். தேவபத்ரன். எழுமாயில்மனை தேவபத்திரன் நம்பூதிரி. தேர்ந்த ஜோசியர். மந்திரவாதி. வடக்கன்கூர் அரண்மனையில் ஒரு தடவை...."

"தேவையில்லை.... மேற்கொண்டு எந்த விளக்கமும் வேண்டாம். எனக்குத் தெரியும்." நாராயணன் நம்பூதிரி குறுக்கிட்டார்.

தன் அப்பாவைப் பற்றி அவர் சொல்வதைச் செவிமடுக்கத் தயாரானான் தேவராஜன்.

"ரொம்பவும் சுவாரஸ்யமான விஷயம். அது, இப்பவும் என் கண் முன்னாலேயே நிக்குது..." நாராயணன் நம்பூதிரி ஆரம்பித்தார். *(தொடர்ந்து மிரட்டுவாள்..)*

---

இவ்வாரச் சிறுகதை

# ஞான ஒளி!

**கிழக்கிலே** ஆதவனின் புதுவரவால் புத்துலகம் பெற்றது போன்று உற்சாகம் பிறந்த பறவைகளின் கீச்சிடும் ஒலியையும் பொருட்படுத்தாது ஆழ்ந்த உறக்கத்திலிருந்த பிரணவனின் முதுகில் யாரோ தட்டுவது போலிருந்தது. மனமின்றி கண்விழித்த பிரணவன் அங்கே தங்கை மது நின்று கொண்டிருந்தமையைக் கண்டு "மது இன்னும் கொஞ்சம் தூங்கிறேன்..." என்றவாறு போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டான்.

"அம்மா உன்னைக் கூட்டிட்டு வரட்டாம்..." என்றபடியே பிரணவனின் கையைப் பிடித்திழுத்தாள் தங்கை மது. இனித் தூங்குவது கஷ்டம் என்றவாறே பிரணவனும் மதுவின் பின் சென்றான். இங்கே அவனது அம்மா மீனாட்சி காலை உணவு தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தாள்.

காலைக்கடன்களை முடித்துக் கொண்டு அம்மா கொடுத்த மதிய உணவுக்குரிய பார்சலையும் எடுத்துக் கொண்டு வேலைக்குச் செல்லத் தயாரானான் பிரணவன். பிரணவனின் குடும்பம் அப்பா குமாரவேல், அம்மா மீனாட்சி, தங்கை மது என நான்கு பேரைக் கொண்ட அழகிய சிறிய குடும்பம். நினைத்ததெல்லாம் வாங்கும் செல்வம் இல்லாவிடினும் திருப்தியாக உண்டோம் சந்தோசமாக வாழ்ந்தோம் எனும் நடுத்தர குடும்ப வர்க்கத்தைச் சேர்ந்தது.

குமாரவேலோ ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர், பிரணவனோ உயர்தரம் படித்து விட்டு தனியார் நிறுவனம் ஒன்றிலே தொழில் புரிந்தான். தங்கை மது தரம் பத்தில் படித்துக் கொண்டிருந்தாள். குமாரவேலின் ஓய்வூதியத்தினையும் மகன் பிரணவனுடைய சம்பளத்தையும் வைத்துக் கொண்டு மீனாட்சி வாழ்க்கை எனும் வண்டியை இழுத்துக் கொண்டிருந்தார்.

பிரணவன் வேலை பார்க்கும் தனியார் நிறுவனத்திலேயே உமாவும் வேலை செய்தாள். உமாவின் குடும்பமும், பிரணவனின் குடும்பம் போன்று நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தது. உமா அன்பும், அழகும் கொண்டவள். ஆரம்பத்தில் பிரணவனும் உமாவும் நண்பர்களாகவே பழகினாலும், அந்நட்பு காதலாக உருப்பெற்றது. அக்காதல் பிறருக்குத் தெரியாத வகையில் இருவரும் பேணி வந்தார்கள். ஆனாலும் அக்காதல் இருவரது வேலையையும் பாதிக்கவில்லை.

இவ்வாறாக இரண்டு வருட காலம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் அவர்களது காதல் வளர்ந்தது. இவ்வளவு காலமும் பிறர் அறியாமல் சந்தித்து வந்த அவ்விருவரது காதல் விடயமும் இருவீட்டாருக்கும் தெரிய வந்தது. ஆரம்பத்தில் சற்று எதிர்ப்பு தெரிவித்தாலும் பின்னர் பச்சைக்கொடி காட்டினர். பெற்றோரது சம்மதம் கிடைத்தவுடன் தைரியமாகவும் அதேவேளை பொது இடங்களில் சந்தித்தும் தமது காதலை வளர்த்துக் கொண்டனர்.

"செங்கலடி வந்துவிட்டது இறங்குங்கோ..." எனக் கூவிய பஸ் நடத்துநரின் குரல் கேட்டு நினைவிலிருந்து மீண்ட பிரணவன் பஸ்ஸிலிருந்து இறங்கி தனது நிறுவனம் நோக்கி நடந்தான். அங்கே தனக்கு இடப்பட்ட வேலைகளிலே நாட்டமின்றி ஈடுபட்டான். பகல் 1.30க்கு நிறுவனத்திற்கு அருகிலுள்ள சரவணன் உணவகத்தில் உணவு உண்டான். பின்னர் மீதியிருந்த வேலைகளையும் முடித்துவிட்டு தன்னுடன் வேலை பார்க்கும் நண்பர்களுடன் அதிகம் பேசாமல் வீதிக்கு வந்தான். அங்கே அவனுக்காகவே விட்டாற் போல் அதே பஸ் வந்தது. கையைக் காட்டி ஏறி பின்னிருக்கையில் அமர்ந்த பிரணவனின் மனதில் மீண்டும் நினைவுகள் எனும் பருந்து வட்டமிட்டது.

".... மன்மதனும் ரதியும் போல் காதலித்த பிரணவனும் உமாவும் பெற்றோர் அனுமதியுடன் காதலிக்கும் வேளையிலே காதல் எனும் ஓடம் கல்யாணம் எனும் கரையை அடைய இருந்த நேரத்திலே உமாவின் தந்தை மாரடைப்பால் இறந்துவிட்டார் என்ற செய்தி பேரலையாய் தோன்றி படகை மீண்டும் கடலினுள்ளே இழுத்துச் சென்றது.

பிரணவனின் குடும்பத்தாரும் உமாவின் சுற்றத்தாருடன் சேர்ந்து உமாவினுடைய அப்பாவின் இறுதிக் கடன்களை முடித்தார்கள். இதுவரை காலமும் அப்பாவின் பொறுப்பிலிருந்த தங்கைகள் இருவரும் இனி உமாவின் பொறுப்பிற்கு மாறினர். இதனிடையே உமாவினதும் பிரணவனினதும் காதல்



ய.சயந்தன், மட்டக்களப்பு.

எட்டாக்கனியாகவே இருந்தது.

அக்கால கட்டத்தில் தான் இச்சம்பவம் நிகழ்ந்தது 26.12.2006 அன்று உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஆழிப்பேரலையால் பிரணவனின் குடும்பமும் உமாவின் குடும்பமும் கடல் அலைக்குப் பலியாகின. ஆனால் ஏதோ அதிர்ஷ்ட வசத்தால் பிரணவன் உயிர் பிழைத்தான். அப்போதுதான் தெரிந்தது அவன் பிழைத்தது அதிர்ஷ்டம் இல்லை துரதிர்ஷ்டம் என்றுணர்ந்தான். காரணம், தன்னைத் தவிர தன் குடும்பமும் அன்புக் காதலியின் குடும்பம் ஆழிப்பேரலையின் அகோர பசிக்கு உணவாகி விட்டமை தெரிய வந்தது. இவ்வளவு காலமாக கரையை நோக்கி வந்து கொண்டிருந்த கனவுகள் நிறைந்த படகு கொடிமரம் முறிந்து மீண்டும் நடுக்கடலினுள் இழுத்துச் செல்லப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை வாழ்க்கையிலேயே பிடிப்பின்றி அர்த்தமற்ற ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தான் பிரணவன்.

அப்போது பஸ் நடத்துநர் "பார்த்து மெதுவாக அமருங்கள்" என்ற ஒலி கேட்டு சுய நினைவிற்கு வந்தான் பிரணவன். அப்போது பதினைந்து, இருபது கண்பார்வையிழந்த சிறுவர்கள் அமர்வதற்கு நடத்துநர் உதவி செய்து கொண்டிருந்தார். அச்சம்பவம் அவனது மனதினுள் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. அந்நேரம், பஸ்ஸினுள் உள்ள வானொலியில் "போனால் போகட்டும் போடா....." எனும் பாடல் அவனுக்காகவே ஒலிப்பது போன்றிருந்தது.

பிரணவனது மனதினுள் ஒரு ஞான ஒளி உருவானது. அன்றிலிருந்து தனது புது வாழ்க்கைக்கு அஸ்திவாரம் இட்டவாறே பிரணவன் மட்டக்களப்பில் வந்திறங்கினான். *(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அனுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்!

**உலகில்** எத்தனையோ நன்மையான காரியங்கள் நடந்தேறுகின்றன. அதே போல் தீமைகளும் நடந்துகொண்டுதானிருக்கின்றன. ஆயினும் இவைகளால் எந்த அளவுக்கு மற்றவர் பயன் பெறுகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் செய்யப்படுங் காரியங்கள் நல்லவையா? தீயவையா? என்று தீர்மானிக்க முடியும். தீயவை இலகுவாக நிறைவெய்தி விடுகின்றன. நல்லவை எப்பொழுதும் அயராத உழைப்பால்தான் உருப்பெறுகின்றன. அவற்றைச் செய்வதற்கு நல்ல மன உரம் வேண்டும் என்பதனை எடுத்துச் சொல்லவந்த வள்ளுவப் பெருந்தகை.

"எண்ணியார் எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

ஒரு நல்ல செயலைச் செய்ய நினைத்தவர் அதைச் செய்யக் கூடிய தகைமை, (வலிமை) உடையவராக இருந்தால் அவர் நினைத்தது நினைத்தது போலவே நிறைவேறும் என்பதாம்.

# மறந்திலேன் அவனை


**யாரடி** அவன்? மங்கையரை மயக்குவதில் பெரும் சாகசம் படைத்தவன் போல் தோன்றுகின்றானே! மல்லிகா கேட்டாள். "யாரைக் கேட்கிறாய்? அவன் யாரோ நான் அறியேன்! அவனைக் காட்டிக் கொள்ளாமல் மழுப்பப் பார்த்தாள் பூங்கொடி. ஆனால் அவள் முகம் அவள் மனதிலுள்ள கலவரத்தைக் காட்டியது. "ஏய்! மழுப்பாதே உன்னை அவனோடு ஆற்றங்கரையில் பார்த்ததாகத் தாமரையாள் சொன்னாள்." "அவளுக்கு மூளையில் ஏதோ கோளாறு போலிருக்கிறது. அல்லது கனவு கண்டாளோ யாருக்குத் தெரியும்." மல்லிகாவின் குற்றச்சாட்டை அவள் ஏற்கத் தயாராக இல்லை. ஏனடி இப்படிப் பொய்யுரைக்கிறாய்? "நீர் நிலையில் நீயடித்த கூத்துக்களெல்லாம் அம்பலமாகிவிட்டது" தோழியின் இந்த வார்த்தை காதில்பட்டதும் துணுக்குற்றாள் பூங்கொடி. இப்போதெல்லாம் அவள் நெஞ்சிலிருந்த பய உணர்வு வெளிப்படையாகவே தோன்ற ஆரம்பித்தது. மறைக்க நினைத்தது பயனளிக்கவில்லையே! என்று எண்ணம் குறுகுறுத்தது. பேசாமல் உண்மையைக் கூறிவிடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டவளாய் "மல்லிகா அது வந்து" சொல்ல வேண்டுமென்று நினைத்தாள் ஆனால் சொல்ல முடியவில்லை. மற்றவருக்குச் சொல்லக் கூடிய விடயமா அது?

நீர் நிலையில் அவளுக்காகக்

## தருவது கற்பகன்

காத்திருந்தானவன். அவனைப் பொறுமையிழக்கும் அளவிற்கு அவள் காத்திருக்க வைக்கவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தவாறு தூரத்தில் அவள் வருவது கண்டு அவன் உள்ளம் துள்ளிக் குதித்தது. அவளைக் கண்டது முதல் இந்த நிமிடம் வரை அவளைப் பற்றி அவன் கண்டு வந்த கனவுகள் கற்பனைகளெல்லாம் நிறைவேறப் போகும் நேரம் நெருங்குவதை எண்ணும்போது உடல் சிலிர்த்தது. உற்சாகம் அவனையும் அறியாத உந்தல் அத்தனையும் ஒரே நேரத்தில் உள்ளம் பூரிப்படைய நின்றிருந்த அவனைக் கண்டதும் பூங்கொடியின் நடையிலிருந்த வேகம் குறையத் தொடங்கியது. கால்கள் பின்னலிட்டன. அவனைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவலோடு வந்தவளுக்கு திடீரென்று

இப்படியொரு தயக்கம் எப்படி இதுதான் பெண்மையா? அவளது தயக்கம் அவனுக்கு மேலும் அதிகரிக்க உற்சாகத்தைக் கொடுத்து அவனாகவே அவளண்டை சென்றதும், அவளுக்கிருந்த படபடப்பு மேலும் அதிகரிக்க அவனையே பார்த்த வண்ணம் அசைவற்று நின்றுவிட்டாள். முதன்முதலாக அவளைத் தொடுகின்ற பதற்றம் அவன் கைகளில் லேசான நடுக்கம், அவளது மௌனம் இனந்தெரியாததோர் சுகம், அவன் கை அவள் உடலில் பட்டபோது



அந்தக் கையிலுள்ள லேசான அதிர்வு அவளுக்கும் ஏதோ ஒரு அச்சத்தைக் கொடுக்கிறது. நேரங் கடந்து கொண்டிருக்கிறது. அவன் நிலைமையை நினைத்தபோது அவளுக்கு வந்த சிரிப்பை அடக்க முயன்றாள் முடியவில்லை. "ஏன் சிரிக்கின்றாய்"? முதல்வார்த்தை அவன் வாயிலிருந்து புறப்பட்டது. அதற்கிடையில் அவளுக்கு எங்கிருந்து வந்ததோ அந்தத் துணிவு. "நீங்கள் ஆண்பிள்ளைதானே? ஏன் இப்படிக் கைகள் நடுங்குகின்றன?" அவள் தன்னைப் பரிகசிக்கிறாளா? என்ற எண்ணம் அவனுக்குப் புதியதொரு துணிவை ஏற்படுத்தியிருக்கவேணும், தன்னைச் சுதாரித்துக்கொண்டு, "அப்படியொன்றும் இல்லையே! உன் உடல் கூடத்தான் நடுங்குவது போலிருக்கிறது." விட்டுக்கொடுக்காமல் அவன் தன் பலவீனத்தை மறைக்க முயன்றான். "நான் பெண்ணாகிற்றே"! என்றாளவள். "ஆமாம் அச்சம் உங்களுக்கு இயற்கை தந்த சீதனந்தானே" போங்கள் நீங்கள் இப்படியே பேசி என்னை உங்கள் வலையில் வீழ்த்தி விட்டீர்கள்" என்று தன்முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள். "எந்த வலையில்? புரியாதவன்போல் பாசாங்கு செய்தானவன். 'ம், -காதல் வலையில்' வெடுக்கெனத் திரும்பி அவனைக் கடைக்கண்ணால் நோட்டமிட்டாள், அவள். கண் வலை அவளைச் சுருட்டிக்கொண்டது கட்டவிழ்ந்தான் காளை. அவன் கைகளுக்குள் அடங்கிப் போனாளவள். புதியதோர் உலகத்தில் சஞ்சரித்த அந்த இளஞ்சிட்டுக்கள் நேரங் கடந்துகொண்டிருந்தது இன்ப மயக்கம் இதமான இராகங்கள், அன்றே தொடங்கிவிட்ட புதுக்கதை தொடர்கின்றது. தோழியின் நீண்ட பெருமூச்சு அவள் கூறி வந்த இன்ப வரலாற்றின் முதல் அத்தியாயத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தது போலிருந்தது. "அவரை எப்படியடி மறக்க முடியும்" என்று பூங்கொடி வினவியபோது, நான் எதைக் கூறியும் நீ கேட்பாய் என்று நான் நினைக்கவில்லை. ஊரார் அலர் உன் மேல் விழாமல் பார்த்துக்கொள் என்று தோழி சொன்னபொழுது பதிலேதும் கூறாமல் அவள் செல்லும் வழியையே பார்த்துக் கொண்டிருந்தாள் பூங்கொடி.

"அம்ம வாழி தோழி! யானின்று
அறனி லாளற் கண்ட பொழுதில்,
சினவுவென் தகைக்கு சென்ற னென்,
பின் நினைந் திரங்கிப் பெயர்தந்தேனே!"
-(ஐங்குறு நூறு- 118)

## சிந்தியா பதில்கள்

சிந்தியா, ஜனாதிபதி அழைத்தும் தமிழ்க் கூட்டமைப்பினர் பேச்சுகளுக்குப் போகாததை எந்தவகைத் தந்திரோபாயம் என்று எடுத்துக்கொள்வது?

-என்.கமலன்,
யாழ்ப்பாணம்.

எதிர்ப்பு அரசியல் என்ற வகைக்குள் தான் அது சேருகிறது. இந்த அர்த்தமற்ற அரசியலால் தமிழ் மக்களுக்கு நன்மை ஏதும் கிடைக்கவில்லை. தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் வீணடிக்கப்பட்டதே இந்த எதிர்ப்பு அரசியலின் வரலாறாக இருக்கின்றது.

உலக நாடுகளில் எல்லாம் போய் நின்றுகொண்டு, இலங்கை ஜனாதிபதியிடம் கோரிக்கைகள் முன்வைப்பதும், அவருக்கு அழுத்தம் கொடுக்கும்படி சர்வதேச சமூகத்தைக் கோருவதுமாகக் கூறும் இவர்கள். ஏன் ஜனாதிபதியைச் சந்தித்து தமது நிலைப்பாட்டை வலியுறுத்தி இருக்கக்கூடாது. யுத்த நிறுத்தம் தேவை என்று கருதியிருந்தால் அதையாவது கூறியிருக்கலாம். வன்னி மக்களின் நிலைமை தொடர்பாகப் பேசியிருக்கலாம், அதைச் செய்யவில்லை. பேச வேண்டிய இடத்தில் பேசாமல் உலகம் சுற்றித் திரிவதில் பயன் ஏதுமில்லை.

சிந்தியா, மனிதனைப் போல் உணர்ச்சி வசப்படும் ரோபோக்களை ஜப்பானியர்கள் தயாரிக்கப் போகிறார்களாமே. அந்தச் சமாச்சாரம் பற்றி ஏதாவது தெரியுமா உமக்கு?

-வ.கணேசலிங்கம்,
கண்டி.

பிரிட்டன் விஞ்ஞானி டேவிற் லெவி என்பவர் தான் இந்தச் செய்தியைக் கூறி வருகின்றார். வீட்டில், அலுவலகத்தில், தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் ரோபோக்கள் தயாராகிவிட்டன. இப்போதைய முயற்சியானது மனிதர்களைப் போல் உணர்ச்சிவசப்படுமாம். கேள்விகளுக்குப் பதிலளிக்குமாம், திருமண பந்தத்தில் கூட இணைத்துக்கொள்ள முடியுமாம் என்கிறார்.

இப்படிக் கூறும் டேவிற் லெவி, தனது முயற்சி ஒரு தூண்டுகோல்தான். விரைவில் தயாராகி வரத்தான் போகிறது என்கிறார்.

சிந்தியா, ஆயிரக்கணக்கான பொதுமக்களைப் பலிகொடுத்து கோடிக் கணக்கான சொத்துக்களை இழந்த நிலையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அரசியல் தீர்வு முயற்சிகளைத் தொடங்குமாறு கோரிக்கைகள் எட்டப்பட்டு வருவது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

-வித்தியா,
வெள்ளவத்தை.

மாகாண சபைகளின் மூலம் அதிகாரப் பரவலாக்கத்தை உடனடியாக மேற்கொள்ளுமாறு கோருவதென்பது இது ஒன்றுதான் இலகுவில் நடைமுறைப்படுத்தக் கூடியது என்ற ஒரே காரணத்துக்காகத்தான். ஒரு காலத்தில் இதை ஏளனம் செய்து இடைக்கால நிர்வாக முயற்சிகளை குழப்பியடித்தவர்கள் கூட இன்று 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கல்தான் நடைமுறைச் சாத்தியமானதென்பதை உணரத் தொடங்கியுள்ளனர்.

மலையக மக்களின் சம்பள விவகாரம் காலத்துக்குக் காலம் எழுப்பப்படுகிறது. இருந்தபோதும் அவர்களுக்கு நியாயம் கிடைக்காமைக்கு என்ன காரணம்?

-இராமையா வினோத்,
மஸ்கெலியா.

தோட்ட நிர்வாகங்களுக்கும், தொழிற் சங்கங்களுக்குமிடையில் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தம்தான் சம்பளத்தைத் தீர்மானிக்கிறது. சில தொழிற் சங்கங்கள் ஒப்பந்தத்தின் போது தமது சந்தாவோடு, சந்தோசமும் கிடைப்பதிலேயே முழுக் கவனம் செலுத்தப்படுவதாக மக்கள் கருதுகின்றார்கள். மக்களின் நலனில் நின்றுகொண்டு முடிவுகளை எடுத்தால் நன்மையாக இருக்கும். எதிர் காலத்திலாவது மக்களுக்கு நன்மை கிடைக்குமா பார்ப்போம்.

சிந்தியா, அண்மைக்காலமாக பலவிதமான நோய்கள் பற்றி கேள்விப்படுகின்றோம். என்ன காரணங்களால் இப்படிப் புதுப்புது நோய்கள் வருகின்றன?

-பா.நந்தினி,
வவுனியா.

ஒரு மருத்துவரிடம் கேட்க வேண்டிய கேள்வி இது. என்றாலும் சில நோய்கள் பற்றி அண்மையில் படித்த தகவல்களைத் தருகின்றேன். ஆவி பறக்கப் பறக்க தேநீர் குடிப்பவர்களுக்கு தொண்டைப் புற்றுநோய் வருகிறது என்று பிரிட்டிஷ் மருத்துவ பத்திரிகை ஒன்று மருத்துவ ஆய்வுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது. இனிமேல் சுடச்சுட தேநீர் பருகுவோர் உஷாராக இருங்கள்.

அடுத்ததாக ஒற்றைத் தலைவலி பற்றி நமக்குத் தெரியும். தலையில் நீர் கோர்த்தால் வருவதாகக் கூறுவார்கள். ஆனால் தற்போது உயர்வடைந்துவரும் வெப்பநிலை காரணமாகவும், காற்றழுத்த வேறுபாடுகள் காரணமாகவும் கூட ஒற்றைத் தலைவலி ஏற்படுகின்றதென்று இஸ்ரேலைச் சேர்ந்த நரம்பியல் டாக்டர் சேத் தலைமையிலான மருத்துவக்குழு நடத்திய ஆய்வில் கண்டு பிடித்துள்ளதாம்.




சிந்தியா, தேசிய அரசியல் - தனித்துவ அரசியல் இரண்டில் தமிழர்களின் அரசியல் எதுவென்பதில் உமது கருத்தென்ன?

-எஸ்.மாணிக்கம்,
தெஹிவளை.

இந்தக் கேள்விக்கு இடமில்லை. விடுதலைக்கான போராட்டத்தை புலிகளின் தலைமை பயங்கரவாதமாக்கியதோடு, தமிழ் மக்களை ஒருவகை அரசியல் வெறுமைக்குள்ளும் தள்ளிவிடவும் முயற்சித்துள்ளனர். ஆனால் தமிழ் மக்கள் அரசியல் அநாதைகள் இல்லை. தலைவர்கள் எவரும் ஆகாயத்திலிருந்து விழுந்தவர்களல்ல. தமிழ் மக்களே உருவாக்கினார்கள். அந்த வலுவை தமிழர்கள் இழந்துவிடவில்லை. வரலாறு சிலரை தலைவர்களாக உருவாக்குகிறது. அந்த வகையில் தமிழர்களின் அரசியல் போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் தலைவர்கள் இருக்கின்றார்கள். தேசியத்தில் இணைவது மத்தியில் கூட்டு என்றாலும் மாநிலத்தில் சுயமாக வாழவேண்டும். தனித்துவம் முக்கியம்.

இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான கவனம் சர்வதேச அரங்கில் கவனத்தில் கொள்ளப்படுவது குறைவு என்று மு.கா. தலைவர் அண்மையில் கூறியிருப்பது சரிதானா?

-எம்.எம்.நிஷார்,
மருதமுனை.

அப்படித் தெரியவில்லை. நோர்வே, ஜப்பான், இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி உட்பட எந்த நாட்டுப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்தாலும் முஸ்லிம் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்துவது வழக்கம். இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்போது முஸ்லிம் மக்களுக்கும் நியாயமான தீர்வு காணப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. முஸ்லிம் தலைவர்கள் என்ற உரிமையில் அதிகம் பேர் சந்தித்தது மு.கா. தலைவரைத் தான். நிலைமை இப்படி இருக்கும்போது ஏன் அப்படிச் சொன்னார் என்று தெரியவில்லையே.

பிரபாகரனை விரைவில் கைது செய்வோம் என்று பிரதமர் கூறியிருக்கின்றாராமே, நம்பலாமா?

-எல்.சுந்தரமூர்த்தி,
சொய்சாபுர.

உயிரோடு பிடிபட நேரும்போது சைனைட் கடிக்கும்படி கட்டிவிடும் பிரபாகரன் தனக்கும் அதுதான் நியதி என்பதை மறக்க மாட்டார். பிரதமரின் விருப்பம் அதுவாக இருக்கலாம்.

வித்தியாதரனின் விடுதலைக்கு மேற்கொள்ளப்படும் முயற்சி வெற்றியளிக்குமா?

-எஸ்.ரமணன்,
யாழ்ப்பாணம்.

விசாரணைகள் முழுமையாக முடிவுக்கு வரும் வரை அந்த விடயத்தைப் பற்றி கருத்துச் சொல்லக் கூடாது. இருந்தாலும் பெரிய மலையகக் கட்சி ஒன்றினூடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிகின்றேன்.

அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம் என்று கூறும் ஐ.தே.க.வுக்கு சிந்தியாவின் அட்வைஸ் பிளீஸ்...

-என்.விஸ்ணுவர்தன்,
நீர்கொழும்பு.

எதிர்க்கட்சி ஒன்றின் கொள்கையும் அவாவும் அதுவாக இருக்கும். என் கேள்வியெல்லாம் ஆளும் கட்சியாக இருக்கும்போது மற்றவன் நம்மை வீட்டுக்கு அனுப்ப முயற்சிப்பான் என்பதை மறந்து திரிவதும், வீட்டுக்கு அனுப்பப்பட்ட பின்னர் அடுத்தவரை எப்படி வீட்டுக்கு அனுப்புவது என்று சிந்திப்பதிலேயே - கடந்த கால தமது தவறை மறந்து விடுவது ஏன் என்பதுதான்.

"பட்டாளம்" படம் பார்த்தீர்களா? பார்த்தால் விமர்சனம் பிளீஸ்.

-எஸ்.வரதா,
சிலாபம்.

நதியாவைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் மாணவர்கள் பட்டாளம். நகைச்சுவையாக இருக்க வேண்டும் என்பதற்காக சீரியஸாக முயற்சித்திருக்கிறார்கள். ஆகையால் அது சீரியஸாகி விட்டிருக்கிறது. இர்பான், பாலாஜி, கிருபா ஆகிய சிலரின் பெயர்கள்தான் ஞாபகம் இருக்கிறது. புது இயக்குநர் ரோஹன் கிருஷ்ணா இயக்கியிருக்கும் பட்டாளம், விஜய் ரீ.வி.யில் ஒளிபரப்பாகும் கனாக்காணும் காலங்கள் நாடகத்தை நினைவுபடுத்துகிறது பட்டாளம் திரையில் ஒரு சீரியல்.

மக்கள் வெளியேறுவதற்கும், புலிகளை அம்பலப்படுத்தவும் மற்றொரு சந்தர்ப்பம்

# குறுகிய கால மோதல் தவிர்ப்பு; அரசு விரைவில் அறிவிக்கலாம்!

(எமது அரசியல் நிருபர்)

புதுக்குடியிருப்பு யுத்த பகுதிக்குள் சிக்கியிருக்கும் மக்கள் வெளியேறுவதற்கு வசதியாக விரைவில் குறுகிய கால மோதல் நிறுத்தமொன்றினை இலங்கை அரசாங்கம் அறிவிக்கலாமென விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கை அரசாங்கம் முன்னர் அறிவித்த 48 மணித்தியால மோதல் நிறுத்தத்தைப் போன்ற ஒன்றாகவே இது இருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது. இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இந்தியாவில் முதலாவது கட்டப் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவிருப்பதால் அதற்கு முன்னதாக மிக விரைவிலேயே இந்த அறிவிப்பு வெளிவருமென எதிர்பார்க்கப்படுகிறது.


வன்னியிலிருந்து தப்பி பாதுகாப்புத் தேடிவரும் மக்கள்

இரண்டு நாள் விஜயமொன்றினை மேற்கொண்டு கொழும்புக்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதமரின் முதன்மைச் செயலாளர் ரி.கே.ஏ. நாயர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பிரதமர் மன்மோகன்சிங்கின் விஷேட செய்தியொன்றினைக் கையளித்துள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பேசவல்ல அதிகாரியொருவரைக் கேட்டபோது 'தெரியாது' எனத் தெரிவித்தார். ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டன், அவுஸ்திரேலியா,கனடா, உள்ளிட்ட நாடுகளும் பல சர்வதேச அமைப்புகளும் தற்காலிக மோதல் தவிர்ப்பொன்றினை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. இந்தியப் பிரதமரின் முதன்மைச் செயலாளர் கொழும்புக்கு மேற்கொண்ட விஜயம் குறித்து புதுடில்லியில் கருத்து வெளியிட்ட இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனனும் இது குறித்துக் குறிப்பிட்டுள்ளார். தற்காலிக மோதல் நிறுத்தமொன்று மேற்கொள்வது குறித்து கொழும்பு அரசாங்கம் பரிசீலித்து வருவதை வரவேற்பதாக சிவ்சங்கர் மேனன் தெரிவித்தார். இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளர் கலாநிதி பாலித கொஹனவும் பி.பி.ஸி.க்கு அளித்த தகவலில் இதனை ஊர்ஜிதம் செய்துள்ளார்.

''யுத்த வலயப் பகுதியில் சிக்கியிருக்கும் மக்கள் வெளியேறுவதற்கு வசதியாகவே தற்காலிக மோதல் நிறுத்தம் செய்வது பற்றிப் பரிசீலித்து வருகிறோம். இந்த மோதல் நிறுத்தம் மீண்டும் ஒரு தடவை புலிகளின் உண்மையான தோற்றத்தை உலகுக்கு அம்பலப்படுத்தப் போகிறது'' என்று இலங்கை சமாதான செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

''முன்னர் 48 மணித்தியாலங்கள் இலங்கை அரசு மோதல் தவிர்ப்பு அறிவிப்பை வெளியிட்டது. ஆனால் புலிகள் மக்களை வெளியேற அனுமதிக்கவில்லை. இம்முறையும் புலிகள் அனுமதிப்பார்களா? இல்லையா? என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம்'' என்றும் அவர் கூறினார்.

## மதவாச்சி சோதனைச் சாவடிக் கெடுபிடிகள் உயர்மட்டத்தின் கவனத்துக்கு வருகிறது

மதவாச்சி சோதனைச் சாவடியில் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். வ்வுனியா, மன்னார் மாவட்டங்களிலிருந்து தென் பகுதிக்குச் செல்லும் அரச உயரதிகாரிகள் தமது வாகனங்களில் இந்தச் சோதனைச் சாவடி ஊடாகப் பிரயாணம் செய்ய முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

பொதுப் போக்குவரத்து வாகனங்கள் இதனூடாகப் பயணம் செய்ய முடியாதென்ற பாதுகாப்பு நடைமுறை அமுலில் உள்ளது. இந்தப் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டிருப்பது தொடர்பாக வவுனியா கட்டளைத் தளபதியிடம் கேட்டபோது, புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளை தடுப்பதற்காகவே இவ்வாறு செய்வதாகத் தெரிவித்தார். தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதில் தவறில்லை. ஆனால் அவற்றில் நெகிழ்ச்சித் தன்மைகள் வேண்டும். இயன்றவரை மக்களுக்குக் கஷ்டங்களைக் குறைக்கும் விதத்தில் நடந்துகொள்ள வேண்டும் என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர். இந்தப் பாதுகாப்புக் கெடுபிடிகள் தளர்த்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து அரசாங்க உயர்மட்டத்தினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் துயரக் கதை

தமது கல்வியைத் தொடர முடியாமல் வன்னிக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 60 பேர் வவுனியாவுக்கு வருகை தந்துள்ளனர். புலிகளின் பிடியிலிருந்து தப்பி வந்த மக்களோடு மக்களாக இவர்கள் வவுனியாவுக்கு வந்துள்ளனர். வவுனியா கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் தங்கியிருக்கும் ஆறு மாணவர்கள், தமது துயர அனுபவங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் எடுத்துரைத்தனர்.

2006 ஆம் ஆண்டு முதல் வன்னியை விட்டு வெளியேறாதவாறு தாம் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், புலிகள் தமக்கு வலுக்கட்டாயமாக ஆயுதப் பயிற்சி அளித்ததாகவும் இவர்கள் தெரிவித்தனர். நெளுக்குளம் இடைத்தங்கல் நலன்புரி முகாமுக்கு கடந்த மாதம் விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்த யாழ். பல்கலைக்கழக மாணவிகள் மூவர், தமது கல்வி சீர்குலைக்கப்பட்ட துயரக் கதையை எடுத்து விளக்கினர். இம்மாணவ, மாணவிகள் தமது கல்வியைத் தொடருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் செய்து தருவதாக அமைச்சர், அவர்களிடம் உறுதியளித்தார்.

## யாழ்.நகரில் அரவிந்த டி சில்வாவின் கிரிக்கெட் வதிவிடப் பயிற்சி முகாம்

இலங்கைக் கிரிகெட் அணியின் முன்னாள் உப தலைவர் அரவிந்த டி சில்வா யாழ்ப்பாணத்தில் நடத்திய கிரிகெட் பயிற்சி முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு மாணவர்கள் கொழும்புக்கு அழைத்து வரப்படவுள்ளனர். லாகூரில் இலங்கைக் கிரிக்கெட் அணி தாக்குதலுக்கு இலக்காகி மூன்று வாரங்கள் கழிவதற்குள் யாழ்ப்பாண மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கென அரவிந்த டி சில்வா யாழ்ப்பாணம் சென்றிருந்தார். இந்த மூன்று நாள் வதிவிட கிரிக்கெட் பயிற்சி முகாம் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த கிரிக்கெட் அணிகள் இதில் பங்குபற்றின. கல்லூரி அணிகளுக்கிடையிலான இருபதுக்கு இருபது போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இலங்கையிலும் குளிர்பானம் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டுள்ள பிர-பலமான பல்தேசியக் கம்பனியொன்றே இந்தப் பயிற்சி முகாமை ஏற்பாடு செய்தது. அதன் அனுசரணையுடனேயே அரவிந்த யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## அவயவங்களை இழந்த...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன்னிக்குச் சென்று புலிகளைச் சந்தித்துவிட்டு திரும்பும்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர். 2001 ஆம் ஆண்டு ஏப்ரலிலும், ஜுலையிலும் இலங்கை தொடர்பாக வெளியிட்ட கட்டுரையில் வன்னியில் தான் தங்கியிருந்த காலம் பற்றி முரண்பட்ட தகவல்களை வெளியிட்டவர். ஒரு கட்டுரையில் ஒரு வாரமே தான் தங்கியிருந்ததாகவும், இன்னொரு கட்டுரையில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். இதற்கும் அப்பால் பொய்யான பல தகவல்களை இவர் வெளியிட்டாரென்று பிரிட்டனின் பத்திரிகைகள் முறைப்பாட்டு ஆணைக்குழு இவரைக் கண்டித்துமிருந்தது. பத்திரிகை ஒழுக்கக் கோவையை மீறினாரென்று 2001 ஆம் ஆண்டு கண்டனத்துக்கு இவர் இலக்காகியிருந்தார். கொழும்பில் லேக்ஹவுஸ் நிறுவனம் வெளியிடும் 'சண்டே ஒப்சர்வர்' பத்திரிகையில் முன்னர் பணியாற்றிய நெவில் டி சில்வா என்ற பத்திரிகையாளரே மேரி கொலின் மீது புகார் தெரிவித்து வெற்றியும் கண்டவர்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இலங்கையின் யுத்த நிலை தொடர்பான விவாதம் நடைபெறுவதற்கு இரண்டு தினங்கள் முன்னதாகவே மேரி கொலினின் செய்தி வெளியாகியிருந்தது. அன்றைய தினம்தான் ''முன் நிபந்தனையின்றி யுத்த நிறுத்தத்துக்குத் தயார்'' என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் தெரிவித்த கருத்தும் இதே பத்திரிகையில் வெளியாகியிருந்தது. பொய்யான தகவல்கள் இப்படித்தான் பரப்பப்படுகின்றன என்கிறார் நெவில் டி சில்வா.

## சகிப்புத் தன்மைக்காகச் சர்வதேச...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழாவில் உரையாற்றிய அன்ரன் பாலசிங்கம் உங்களுக்கு ஆதரவாகப் பேசினார். தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் வரவேற்கத்தக்கது என்றும் சொன்னார். புலிகளோடுதான் பேச வேண்டும் என்றுதானே நீங்கள் அந்தக் காலத்தில் குரல் கொடுத்தீர்கள் என்று ஊடகவியலாளர் கூறியபோதுதான் ஆனந்தசங்கரிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. வானொலியில் அவரது குரலைக் கேட்டவர்களுக்கு ''இவருக்கா சகிப்புத் தன்மைக்கான சர்வதேச விருது கிடைத்தது?'' என்று கேட்கத் தோன்றியிருக்கும்.

இதே பேட்டியில் கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா அம்மான்) முன்னர் ஆயுதப் போராளியாகச் செயற்பட்டவர் என்ற போதிலும் கூட மிகவும் பவ்வியமாகப் பொறுமையாகப் பதிலளித்தார். ''நீங்கள் புலிகள் இயக்கத்தில் இப்போது இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?'' என்று தாஜ் கேள்வி எழுப்பினார். ''நான் அந்த இயக்கத்தில் இருந்திருக்கமாட்டேன். இருந்திருந்தால் யுத்தம் நடந்திருக்காது. நான், அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் எல்லோரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி வந்தோம்'' என்றார்.

## சர்வதேச அழுத்தமும்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது ஐ.நா.வின் மனிதாபிமான இணைப்பாளராக ஈராக்கில் பணியாற்றிய டெனிஸ் ஹலிடே இதனை 'இனச் சுத்திகரிப்பு' என்று கண்டித்து தனது பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு வெளி-யேறினார். ஐ.நா.வின் அன்றைய உலக உணவுத் திட்டப் பணிப்பாளர் ஜுட்டா புர்க்ஹார்ட் அமெரிக்க நடவடிக்கையைக் கண்டித்து இராஜினாமாச் செய்தார். 2002 ஆம் ஆண்டு ஐ.நா.வின் மனிதாபிமான ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றிய ஹான்ஸ்வென் ஸ்பொனெக் அமெரிக்க நடவடிக்கையை ஆட்சேபித்துத் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபடுவதாகவே அன்று அவரும் குற்றம் சாட்டினார்.

1996 ஆம் ஆண்டு அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சராக இருந்தவர் மடெலின் அல்பிறைட் அம்மையார். அவரிடம் சீ.பி.எஸ். தொலைக்காட்சி நிருபர் ஒரு சிக்கலான கேள்வியைக் கேட்டார்.

''அம்மணி! ஈராக்கில் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் அநியாயமாக மாண்டு போனார்களே, நீங்கள் கொடுத்த விலை பெறுமதி மிக்கது என்றா கருதுகின்றீர்கள்?''

அம்மணி சொன்னார். ''பதிலளிப்பது கஷ்டம்தான். ஆனாலும் நாம் கொடுத்த விலை பெறுமதி மிக்கது என்றுதான் நாம் கருதுகின்றோம்'' என்று அடித்துச் சொன்னார். ஈராக்கிய மக்களைப் போடுதடியாக நினைத்த அமெரிக்க அமைச்சரின் அகங்காரமான பதில் இது.

பிரிட்டனின் வெஸ்ற்மினிஸ்டர் பாராளுமன்றமும் கடந்த 24 ஆம் திகதி இலங்கையின் யுத்த நிலை குறித்து அழுது வடித்தது. ''இலங்கையும் பொதுநலவாயமும்' என்ற தலைப்பில் பேசப்பட்டது. இதற்கு இரண்டு தினங்கள் முன்னதாகத்தான் ''முன் நிபந்தனையின்றி யுத்த நிறுத்தத்துக்குத் தயார்'' என்று பிரிட்டிஷ் பத்திரிகையான ''சண்டே டைம்ஸ்''ஸுக்கு நடேசன் தெரிவித்திருந்தார். தொழிற்கட்சி எம்.பி.க்களான ஜோஆன் றியன், சியோப்ஹய்ன் மக்டொனா என்ற பெண்மணிகள் இருவரும் இலங்கையில் இனச்சுத்திகரிப்பு நடப்பதாகவே அடித்துச் சொன்னார்கள். ''புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமல்ல, இலங்கை அரசாங்கத்தின் அதீத பிரசாரம் இல்லையென்றால் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருக்க மாட்டாது'' என்றார்கள். ராஜீவ் காந்தி, ரணசிங்க பிரேமதாசா போன்ற தேசத் தலைவர்களையும், அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம் உட்பட மிதவாதத் தமிழினத் தலைவர்களையும் கொன்றவர்கள் பயங்கரவாதிகளல்லர். சகல தமிழ்க் குழுக்களையும், அவற்றின் தலைவர்களையும், பல்லாயிரணக்கான போராளிகளையும், தமிழ் மக்களையும் கொன்றவர்கள் பயங்கரவாதிகள் அல்லர். இப்படித்தானா பிரிட்டிஷ் அம்மணிகள் கருதுகிறார்கள்.

ஏகாதிபத்திய எஜமானர்களின் சிந்தனைகள் என்றுமே மாறப் போவதில்லை. மூன்றாம் உலக நாடுகள் நவ காலனித்துவ எஜமானர்களின் கொத்தடிமைகள் அல்ல என்பது இன்னமும்தான் அவர்களுக்குப் புரியாமல் இருக்கிறது. பின்லேடனைத் தேடிக்கொண்டிருப்பவர்கள், பிரபாகரனை வருடித் தடவிக் கொடுக்கிறார்கள். ஆனால் இருவருமே பயங்கரவாதப் பட்டியலில் முன்னிலை வகிக்கிறார்கள்'' ஊருக்குத் தான் உபதேசம், உனக்கும் எனக்கும் இல்லையடி'' என்ற பாணியில்தான் வளர்ச்சியடைந்த நாடுகள் பார்க்கின்றன.

சுருங்கிய நிலப் பரப்புக்குள், மக்கள் நெருங்கிவாழும் பகுதிகளுக்குள் யுத்தம் இழுத்துச் செல்லப்பட்டிருப்பதால் சிக்கியுள்ள அப்பாவித் தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களைச் சந்திக்கிறார்கள். புலிகள் அந்த மக்களை விடுவிக்க வேண்டும். கனரக ஆயுதங்களை மக்கள் வாழும் பகுதிகளுக்குள் யாருமே பாவிக்கக் கூடாது. இதனை யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இருதரப்புக்களும் தார்மீகப் பொறுப்பாகக் கருதவேண்டும்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(02.04.2009 தொடக்கம் 08.04.2009 வரை)

ஞானயோகி, டாக்டர். ப.இசக்கி

**மேஷம்:–** மேஷராசி அன்பர்களே, கேது நன்மை தரும் கிரகமாகும். வீட்டை அலங்காரம் செய்வீர்கள். அரசு சம்பந்தமாக வரவேண்டிய பணங்கள் மற்றும் வழக்கு விசயங்கள் போன்ற காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஒரு சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படலாம். சிறு குழந்தைகளை எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள்ளவும். பூர்வீகச் சொத்து சம்பந்தமான விசயங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோகம் இல்லாதவர்களுக்கு புதிய முயற்சிகள் மூலம் உத்தியோகம் கிடைக்கும். பிரிந்துபோன கணவன்-மனைவி திரும்பவும் சேருவார்கள்.

**இராசியான எண்:-** 7
**இராசியான நிறம்:-** கருஞ் சிவப்பு
**இராசியான திசை:-** வடமேற்கு
**பரிகாரம்:-** கணபதி வழிபாடு செய்து வரவும்.

**ரிஷபம்:–** ரிஷபராசி அன்பர்களே, புதன் நன்மை தரும் கிரகமாகும். மனைவியால் மருத்துவச் செலவுகள் ஏற்படும். புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்க்கவும். வாகனங்களில் எச்சரிக்கையாகப் பயணம் செய்வது நல்லது. முன் கோபம் தவிர்க்கவும். பங்காளிகளால் பொருட் செலவுகள் உண்டாகும். செய்தொழில் புதிய மாற்றங்கள் செய்யத் திட்டம் போடுவீர்கள். விருந்தினர் வரவால் மன மகிழ்ச்சி உண்டு. நீண்ட நாட்களாக வராமல் இருந்த பணம் கை வந்து சேரக் கூடிய காலமாகும்.

**இராசியான எண்:-** 5
**இராசியான நிறம்:-** பச்சை
**இராசியான திசை:-** வடக்கு
**பரிகாரம்:-** மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்.

**மிதுனம்:–** மிதுனராசி அன்பர்களே, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். எதிர்பார்த்த பண உதவிகள் கிடைக்கும். வங்கிகள் மூலம் ஆதாயம் அடைவீர்கள். புதிய தொழில் தொடங்கலாம். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடரும். தொலை தூரப் பயணங்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். மனத் தைரியமுடன் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். காணாமற் போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் வீடு வந்து சேரும்.

**இராசியான எண்:-** 9
**இராசியான நிறம்:-** சிவப்பு
**இராசியான திசை:-** தெற்கு
**பரிகாரம்:-** முருகன் வழிபாடு செய்து வரவும்.

**கடகம்:–** கடகராசி அன்பர்களே, வியாழன் நன்மை தரும் கிரகமாகும். விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளதால் முன் கோபத்தைத் தவிர்த்தல் நல்லதாகும். பிள்ளைகளால் மன நிம்மதி உண்டாகும். உடம்பில் வாயு, மற்றும் வாத சம்பந்தமான நோய்கள் வந்து நீங்கும். வீண் பொருள் விரையம் ஏற்படலாம். வர வேண்டிய பணம் சிறிது கால தாமதமாகவே கிடைக்கும் குடும்பத்தில் அமைதி நிலவும். செல்வ செல்வாக்குப் புகழ் கூடும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். காதல் விசயங்களில் நல்ல தகவல்களை எதிர் பார்க்கலாம்.

**இராசியான எண்:-** 3
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** சிவவழிபாடு செய்து வரவும்.

**சிம்மம்:–** சிம்மராசி அன்பர்களே, சூரியன் நன்மை தரும் கிரகமாகும். திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மன நிம்மதி அடைவதுடன் நற்பெயரெடுப்பீர்கள். வீடு மற்றும் வாகனங்களில் கவனமுடன் இருத்தல் நல்லது. விபரீதமான எண்ணங்களை நினைத்து மனக் குழப்பத்தை ஏற்படுத்தாதீர்கள். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள் ஏற்படும். தாய் மாமன் வழியில் சில சுப காரியங்கள் நடக்கும். பிள்ளைகளுக்கு மருத்துவச் செலவுகள் மேலிடும்.

**இராசியான எண்:-** 1
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** கிழக்கு
**பரிகாரம்:-** சிவவழிபாடு செய்து வரவும்

**கன்னி:–** கன்னிராசி அன்பர்களே, ராகு நன்மை தரும் கிரகமாகும். நாட்பட்ட தீராத நோய்கள் தீர வேண்டிப் புதிய மருத்துவரின் உதவிகளை நாடுவீர்கள். தந்தை - மகன் உறவில் பிரச்சினைகள் ஏற்படும். பிள்ளைகளால் மருத்துவச் செலவுகள் ஏற்படும். திடீர் அதிர்ஷ்டம் மூலம் தன வரவு உண்டாகும். வீடு, நிலம் சம்பந்தமான விசயங்களுக்கு பொருட் செலவு உண்டாகும். உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை. பங்காளிகளுடன் புதிய தொழில் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணப் பிரச்சினைகள் ஏற்படலாம்.

**இராசியான எண்:-** 4
**இராசியான நிறம்:-** கறுப்பு
**இராசியான திசை:-** வடமேற்கு
**பரிகாரம்:-** அம்மன் மற்றும் பிதுர் வழிபாடு செய்து வரவும்.

**துலாம்:–** துலாராசி அன்பர்களே, சனி நன்மை தரும் கிரகமாகும். நீண்ட தூரப் பயணங்களில் எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. திருமணம் போன்ற சுபகாரியங்கள் குடும்பத்தில் நடைபெறும். செல்வந்தர்கள் தொடர்பால் மன நிம்மதி அடைவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும். புதிய தொழில் தொடங்க வாய்ப்பு உள்ளது. நண்பர்களால் ஆதாயம் உண்டாகும். கணவன்-மனைவி உறவுகளில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்து சுமுகமான சூழல் உருவாகும். பிள்ளைகளின் உடல் நிலையில் கவனமுடன் இருக்கவும்.

**இராசியான எண்:-** 8
**இராசியான நிறம்:-** நீலம்
**இராசியான திசை:-** தென்மேற்கு
**பரிகாரம்:-** சனீஸ்வர வழிபாடு செய்து வரவும்.

**விருச்சிகம்:–** விருச்சிகராசி அன்பர்களே, சந்திரன் நன்மை தரும் கிரகமாகும். கணவன்-மனைவி உறவுகள் பலப்படும். பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சினைகள் உருவாகும். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெறுவர். உத்தியோகத் துறையினருக்கு மேலதிகாரிகளால் தொல்லைகள் ஏற்படும். செய்யாத குற்றங்களுக்காக அவப் பெயர் ஏற்படலாம். பிரிந்து வாழ்ந்த கணவன்-மனைவி பிரச்சினைகள் தீர்ந்து ஒற்றுமையுடன் இருப்பார்கள். மற்றவர்களுக்காக உதவி செய்து மன நிம்மதி அடைவீர்கள்.

**இராசியான எண்:-** 2
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** மேற்கு
**பரிகாரம்:-** அம்மன் வழிபாடு செய்து வரவும்

**தனுசு:–** தனுசுராசி அன்பர்களே, புதன் நன்மை தரும் கிரகமாகும். கணவன் - மனைவி உறவுகளில் நல்ல சூழ்நிலை காணப்படும். உத்தியோக முயற்சிகளில் கால தாமதம் ஏற்படலாம். வீடுகளைத் திருத்திக் கட்டுவீர்கள். தாய் வழிச் சொத்துக்கள் கிடைக்கும். தந்தை-மகன் உறவுகளில் கவனம் தேவை. நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். குலதெய்வ வழிபாடு செய்து வருவது நல்லது. விட்டுப் போன பழைய உறவுகள் மீண்டும் தொடரும்.

**இராசியான எண்:-** 5
**இராசியான நிறம்:-** பச்சை
**இராசியான திசை:-** வடக்கு
**பரிகாரம்:-** மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்

**மகரம்:–** மகரராசி அன்பர்களே, சனி நன்மை தரும் கிரகமாகும். அரசியல் வாதிகள் ஆதாயம் அடைவார்கள். சொத்து சம்பந்தமாகிய விசயங்களில் சகோதரர்களால் ஆதாயம் அடைவீர்கள். அரசு சம்பந்தமான அலுவலகப் பணிகளில் எதிர்பார்த்த அனுகூலம் உண்டாகும். கணவன்-மனைவி உறவுகளில் எச்சரிக்கை தேவை. கடன் கேட்டிருந்த பணம் கிடைப்பதில் சற்றுக் கால தாமதம் ஏற்படக் கூடும். அண்டை அயலாருடன் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது.

**இராசியான எண்:-** 8
**இராசியான நிறம்:-** நீலம்
**இராசியான திசை:-** தென்மேற்கு
**பரிகாரம்:-** ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வரவும்.

**கும்பம்:–** கும்பராசி அன்பர்களே, சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். விஞ்ஞானத்துறை சார்ந்தவர்களின் புதிய ஆராய்ச்சிகளில் நல்ல வெற்றி அடைவீர்கள். ஆலயப் பணிகளில் ஈடுபட வாய்ப்புள்ளது. நித்திரை பங்கம் ஏற்படும். மூத்த சகோதரருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். உடம்பில் வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். நீண்ட காலமாக வராமல் இருந்த பணம் திரும்பக் கிடைக்கும். கால்களில் கவனம் தேவை.

**இராசியான எண்:-** 6
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** தென்கிழக்கு
**பரிகாரம்:-** மஹாலட்சுமி வழிபாடு செய்து வரவும்.

**மீனம்:–** மீனராசி அன்பர்களே, வியாழன் நன்மை தரும் கிரகமாகும். மாணவர்கள் கல்வி விசயமாக நீண்ட தூரப் பயணங்களை மேற் கொள்வார்கள். கணவன்-மனைவி உறவு சுமாராகக் காணப்படும். குழந்தைகளின் மன மகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்கள் செல்லுதல் மூலம் பொருள் விரையம் ஏற்படும். சொந்த பந்தங்களால் புதிய மனக் குழப்பங்கள் வர வாய்ப்புள்ளது. புதிய தொழில் தொடங்குவதைத் தவிர்த்தல் நல்லது. உடம்பில் இரத்தம் மற்றும் நரம்பு சம்பந்தமான பிணிகள் வந்து போகும்.

**இராசியான எண்:-** 3
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** தட்சணாமூர்த்தி வழிபாடு செய்து வரவும்.




உ
ஓம் சக்தி சிவமயம்
ஓம் அகத்தீஸ்வராய நமஹ
ஓம் ஆதி அகஸ்திய மஹாரியின் திருவருளாலும் அநுக்கிரகத்தாலும் எமது 30 ஆண்டு கால அநுபவத்தின் மூலம் ஆன்மீகம், தியானம், மணிமந்திரம், சித்தமருத்துவம், ஜோதிடத்தின் வழியில் அனைத்து விதமான பிரச்சினைகள் நீங்கி ஆயுள் ஆரோக்கிய ஐஸ்வர்யத்துடன் வாழ அனுகவும்.

Contact:
Jothisha Athithya, Jothisha Baruthi, Jothisha Sudar, Muligai Nambi, Mani Manthira, Vaithiya, Jothisa Galagnani
Gnanayohi Dr.p.Esakki, IBAM,RMP, D.I.S.M 18/25B-1), Pulavar Street, Krishnapuram,Kadayanallur-627759
Thirunelveli District Tamil Nadu India. Phone For ISD:0091-4633-243029, Tele Fax:04633243029
Cell:98425-29691,98425-10578, Fax:04633-240396 Email:Paramasivan_esakki@yahoo.com
Website:- www.gnanayohi.com Consultation by appointment only.


## காதிலை பூகந்தசாமி



### நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
-காதில பூ கந்தசாமி-

**வணக்கமுங்கோ.** திடீரெண்டு காணாமல் போன ஒருவரைத் திரும்பவும் காணும்படியான சந்தர்ப்பம் கிடைச்சால் எப்பிடிங்கோ இருக்கும். அப்பிடியொரு குழப்பம் எனக்கு.

முன்னம் ஒருக்கால் வத்தளையில இருக்கிற நண்பர் ஒருவரின்ர வீட்டுக்குப் போகேக்க சொல்லிச்சினம் பக்கத்து வீட்டுப் பெடியனைக் காணயில்லையாம் எண்டு.

போனவாரம் போகேக்க சொல்லிச்சினமுங்கோ காணாமல் போன பெடியன் திரும்பவும் வீடு திரும்பிட்டானாம் எண்டிச்சினமுங்கோ. சரியெண்டிட்டு அந்தப் பெடியனைப் போய் பாத்தனுங்கோ. அவன் ஏதோ கற்பனையில மிதக்குமாப் போலை விட்டத்தைப் பாத்துக்கொண்டு நிண்டானுங்கோ.

எடேய் தம்பி என்னடா நடந்தது எண்டு கேட்டனுங்கோ. என்ன நடந்ததோ எனக்கே தெரியாதுங்கோ. வந்தாங்கள் பிடிச்சுக்கொண்டு போனாங்கள். எண்டு கதைக்க ஆரம்பிச்சானுங்கோ. என்ன பகிடி நடந்ததெண்டு பாருங்கோவன்.

**கா.பூ :-** வந்தாங்கள் பிடிச்சுக்கொண்டு போனாங்கள் எண்டால் ஆர் எண்டு தெரியல்லையோ.

**பையன் :-** ஆரெண்டு ஆருக்குத் தெரியுமுங்கோ. நல்லாச் சிங்களம் கதைக்கிறாங்கள். தமிழையும் சிலபேர் கதைக்கினம்.

**கா.பூ :-** என்னத்தில பிடிச்சுக்கொண்டு போனாங்கள். எங்க கொண்டு போனவங்கள் எண்டு ஏதாச்சும் தெரியுமோ.

**பையன் :-** அண்ண உப்பிடித் துருவித் துருவிக் கேக்காதீங்கோ. எனக்குப் பயமாகத்தான் இருக்குது. நீங்கள் எந்த லிங்கில இருக்கியள் எண்டு ஒண்டும் தெரியாது.

**கா.பூ :-** தம்பி உந்த லிங்குகள் எதுவும் கிடையாது. உந்த மாதிரிக் கேடுகெட்ட தொழிலுக்குப் போறவன் நானுமில்லை. நீர் ஒண்டுக்கும் யோசிக்காதையும். சும்மா ஒரு அக்கறையிலதான் கேக்கிறன் புரியுதோ.

**பையன் :-** அண்ண கொண்டு போனது ஒரு வேன் தான் எண்டு தெரியுது. உள்ளுக்கு ஏத்தினதோடை கண்ணைக் கட்டிப்போட்டாங்கள்.

**கா.பூ :-** வேன் எண்டால் உந்த வெள்ளை வேன் எண்டினமே அதுவோ.

**பையன் :-** திரும்பவும் சொல்லுறன் அண்ணை. என்ன கலர் வேன் எண்டதையெல்லாம் பார்க்க நேரம் இருக்கயில்லை. அதெல்லாம் ஒரு நொடிப் பொழுதிலே நடந்திட்டுது.

**கா.பூ :-** பிறகு என்னாச்சுது - அடிச்சவங்களோ..

**பையன் :-** இல்லாமல் என்ன கொஞ்சுவாங்களே! அண்ண அடியெண்டால் அண்ண நினைச்சுப் பாக்க ஏலாது. உள்ளங் காலில தொடங்கிக் கழுத்து வரைக்கும் அடிதான் அண்ண... கத்தியே களைச்சுப் போடுவம் எண்டால் யோசிச்சுப் பாருங்கோவன்.

**கா.பூ :-** எட கோதாரி. விசாரணை ஒண்டுமில்லாமலே அடிக்கிறாங்களோ?

**பையன் :-** அண்ண அடி ஒருபக்கம், விசாரணை ஒரு பக்கம் நடக்குது.

**கா.பூ :-** நீ உந்த அடிக்கு அழுதிருக்கலாமே. சத்தம் போட்டுக் கத்தினீரோ?

**பையன் :-** சத்தமோ அண்ண உங்களுக்குச் சொன்னால் வேடிக்கையாகத்தான் இருக்கும். வருவாங்கள் அண்ண ரேடியோவை சத்தமாகப் போடுவாங்கள், அதின்ர சத்தமே எல்லாமுமாகிடும். அந்த நேரத்தில மழை விழுமாப்போலை அடி விழுமண்ண. அழுதால் வெளியால கேக்காது. ஆரும் நினைப்பினம் பைத்தியங்கள் இல்லாட்டில் செகுடுகள் உப்பிடிச் சத்தமாக பாட்டுக் கேக்குதுங்கள் எண்டுதான்.

**கா.பூ :-** சரி அடிச்சாப் பிறகு என்ன செய்வாங்கள்,

**பையன் :-** எட அண்ண நல்ல இன்ரெஸ்ட்டா கதை கேக்கிறியள் போலை. கேக்கேக்க நல்லா இருக்குமண்ண. அனுபவிச்சிருந்தால் தெரிஞ்சிருக்கும்.

**கா.பூ :-** என்ன செய்யிறது அனுவிக்கிற வாய்ப்பு எனக்குக் கிடைக்கயில்லை. அது உமக்குக் கிடைச்சிருக்குது. சொல்லும் அடிச்சாப்பிறகு என்ன செய்வாங்கள்.

**பையன் :-** என்ன செய்வாங்கள். மல்லாக்கப் படுக்க வச்சு கைகளுக்கும், கால்களுக்கும் பூட்டுப் போடுவாங்கள். அப்பிடியே அடிச்சுப் போட்ட கரப்பொத்தான் பூச்சி மாதிரிக் கிடக்க வேண்டியதுதான்.

**கா.பூ :-** அடப்பாவமே உடுத்த உடுப்போடையே கிடக்க வேணுமோ?

**பையன் :-** ஆ.. என்ன சொன்னியள் உடுத்த உடுப்போ. அண்ண கொண்டு போனதுமே உடுப்பை உரிஞ்சு போடுவாங்கள். பிறந்த மேனியாகத்தான் கிடக்கவேணும். அடிக்கிற அடியில உதெல்லாம் மறந்து போடுமண்ண.

**கா.பூ :-** சரி அதை விடுவம் உம்மட்ட என்ன கேட்டாங்கள்.

**பையன் :-** அண்ண தலையைச் சுத்துமாப் போலை இருக்குது எண்டு பெடியன் சாஞ்சிட்டுதுங்கோ. விடுவனோ மயக்கம் தெளியவிட்டுக் கேட்டதில பெடியன் என்ன சொன்னதெண்டு அடுத்த வாரம் எதிர்பாருங்கோவன்.

### யாவும் கலப்பட்மற்ற கற்பனை

## அட்மிரல் நெல்சன்

**பல** நாட்கள் கப்பல் பனிப் பாறையில் சிக்கி, பிறகு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தது. நெல்சனும் அபாயமிக்க பகுதிகளில் பயணம் செய்த அனுபவ அறிவோடு, புதிய சாகஸக் கதைகளைக் கூற நாடு திரும்பினான்.

### உலகை வியக்க வைத்தவர்கள்

அடுத்து, கிழக்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லும் கடல் குதிரை என்ற கப்பலில் மாமாவின் சிபாரிசில் ஒரு முக்கிய மாலுமியானான். இருபது பீரங்கிகளைக் கொண்ட அக்கப்பல் பயணத்தில், புதில் கடல்களையும் இதுவரை காணாத துறைமுகங்களைக் காணும் வாய்ப்பும் கிட்டியது. ஒரு மாலுமி தெரிந்துகொள்ள வேண்டிய அத்தனையையும் அறிந்துகொண்டு விட்டான். அனுபவமிக்க வயது வந்த கப்பல் அதிகாரிகள் தெரிந்து கொண்டதைவிட அதிகத் தேர்ச்சி பெற்றவனாக விளங்கினான் நெல்சன். ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அவனால் வெற்றி கொள்ள முடியவில்லை. உஷ்ணப் பிரதேசத்து (டிராபிகல்) நோய்களை-முக்கியமாக மலேரியா. அந் நோயினால் கடுமையாகத் தாக்குண்ட நெல்சன், பலமிழந்து படுத்த படுக்கையானான். கப்பல் டாக்டர் தன்னால் அவனைக் காப்பாற்ற முடியாதென்று கைவிட்டார். ஆகவே நாடு திரும்பும் ‘டால்பின்’ என்ற கப்பலுக்கு நெல்சனை அப்புறப்படுத்தினார்கள்.

இங்கிலாந்துக்குப் போகு முன் வழியிலேயே அவன் இறந்து போவான் என்றே முடிவு கட்டினார்கள்.

ஆனால் நீண்ட கடற் பயணமும் ஆரோக்கியமான சூழ்நிலையும் நெல்சனின் உடலில் முன்னேற்றம் காணச் செய்தன. இங்கிலாந்தில் கரை இறங்கியபோது, பூரண குணமடைந்த நெல்சனாகி விட்டான் அவன். இப்போது நெல்சனுக்கு பதினெட்டு வயதுதான்.

அதிர்ஷ்டவசமாக நெல்சனின் மாமாவுக்குக் கடற்படையில் பதவி உயர்வு கிடைத்தது. ஆகவே நெல்சன் கடற்படையில் பணியாற்றச் சேருவது சுலபமாயிற்று. இதன் பிறகு இருபது ஆண்டுகள் பல்வேறு பதவிகள், போர்கள், புகழ் ஏணியின் படிகளில் கம்பீரமாக ஏறி, புகழ் பரப்பும் அளவுக்கு அவன் உயர்ந்தது தனிக் கதை. 1777 ஏப்ரல் 08 இல் ராயல் நேவியில் ஹொரேஷ்யோ நெல்சன் லெப்டினென்ட்டானான். அப்போது அவனுக்கு வயது பத்தொன்பது.

கடல் போர் கப்பல் பயணம் இவற்றின் நுணுக்கங்கள் அனைத்தையும் அறிந்து தேர்ந்த நெல்சன் தனது இருபதாவது வயதில் ‘காப்டன்’ பதவியைப் பெற்றார். அமெரிக்கா தன் சுதந்திரத்திற்காகப் பிரிட்டனுடன் போராடியபோது, கனடாவிலிருந்த பிரிட்டிஷ் கடற்படையில் பணியாற்றி வந்த நெல்சன் அங்கு அட்மிரல்



லார்டு ஹுட் (Admiral Lord Hood) என்பவரைச் சந்தித்தார். நெல்சனிடம் அன்பும் பரிவும் நட்பும் கொண்டவர் ஹுட். இவர் மூலம் இளவரசர் வில்லியம் ஹென்றியின் அறிமுகம் கிடைத்தது. இவரே பின்னால் நான்காம் வில்லியமாக இங்கிலாந்தின் அரியணையில் ஏறியவர். மேற்கு இந்தியத் தீவுகளில் நடக்கும் அடிமை வியாபாரத்தைக் கடுமையாக எதிர்த்தார் நெல்சன். அடிமை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ்காரர்கள் இவர் மீது வழக்குத் தொடுத்தனர்.

வியப்புக்கள் தொடரும்

# அதிகூடிய பாதுகாப்பும்

## ஸ்திரமும் கொண்டது

47 வருட காலமாக மக்களின் பேரபிமானத்தையும் நம்பிக்கையையும் வென்ற மக்கள் வங்கியானது, அதன் ஸ்திரத் தன்மையையும், பாதுகாப்பையும் சேமிப்புக் கணக்குகளில் தொடர்ந்து வழங்கி வருகிறது. அத்துடன் சேமிப்புக் கணக்குகள் தவிர 15% வட்டியினை வழங்கும் சேமிப்புச் சான்றிதழான "கப்துர" மற்றும் 24% வட்டியினை வழங்கும் நிலையான வைப்புகள் போன்றவற்றை மக்கள் வங்கியின் சகல வாடிக்கையாளர்களும் பெற்றுக் கொள்ளலாம்.

**உங்கள் கடின உழைப்புக்கு அதிகூடிய கவர்ச்சியான வட்டியையும், உத்தரவாதமிக்க அரச வங்கியின் பாதுகாப்பையும் பெறுவதானால் இன்று முதல் மக்கள் வங்கியில் சேமிப்பதே சிறந்த வழியாகும்.**







www.peoplesbank.lk

A-(lka) Fitch rating

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி




இப்பத்திரிகை கொழும்பு - 06, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 18A, ஆம் இலக்கத்தில் டி.டி எண்டபிரைஸஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமனல கிராபிக்ஸ் அச்சகத்தில் ஏப் 02 திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.